# தமிழரசு

பிப்ரவரி 2009

விலை ரூ.10/-

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு















**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை இராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்தவாரே, காணொலித் திரை மூலம் தாமிரபரணியாறு, கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்பு வெள்ளக்கால்வாய் பணிகளைத் தொடங்கிவைத்தார் மற்றும் சிவகங்கை புதிய அரசு மருத்துவக்கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். (21.2.2009)**

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039 - 40

தை - மாசி

பிப்ரவரி 2009

மலர் : 41 இதழ் : 8



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
**இணையதளம்** : www.tn.gov.in




**ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்**
**பொன்றாது நிற்பதொன் றில்.**

ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- நம்முடைய தமிழனுக்கு ஒரு ஆண்டு வேண்டும்; அந்தத் தமிழ் ஆண்டு, புத்தாண்டு 'தை' முதல் நாளாகத்தான் இருக்க முடியும்! ..... 2
- நிதி நிலை அறிக்கை ..... 9
- தமிழகம் முழுதும் இந்தக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும் ..... 40
- மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு இந்த அரசு நிதி ஒதுக்கீட்டைஅதிகரித்துள்ளது ..... 45
- நம்முடைய பயணம் நேர்மையான பயணம், நியாயமான பயணம் - அந்தப் பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம்... 48
- மாநிலத்திற்குள்ளேயே நதிகளை இணைத்து நம்முடைய தேவையை நிறைவுசெய்து கொள்ளவேண்டும் ..... 51


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- சமூக நீதிக்கான அடித்தளத்தை உருவாக்கியவர்களின் வழித்தோன்றல்கள் நாம் ..... 65
- ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணி நியமனம் ..... 70


**முதலாம் அட்டை**

திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கினார். (15.1.2009)

**நான்காம் அட்டை**

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், 2009-2010ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 17.1.2009 அன்று தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்ய வருகை புரிந்தார். உடன் மாண்புமிகு **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்** மற்றும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் **திரு.பரிதி இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.**

# நம்முடைய தமிழனுக்கு ஒரு ஆண்டு வேண்டும்; அந்தத் தமிழ் ஆண்டு, புத்தாண்டு 'தை' முதல் நாளாகத்தான் இருக்க முடியும்!

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 15.01.2009 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள்–விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உரை!**




நான் இல்லத்திலிருந்து பேராசிரியருடன் இந்த மன்றத்திற்குப் புறப்படும்போதே என்னுடைய உடல் நிலை எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை அவர் முழுமையாக உணர்ந்திருந்தாலுங் கூட– உணர்ந்ததை உணர்ச்சி வேகத்திலே மறந்துவிடக்கூடாது என்பதற்காக அவரிடம் இன்றைய என் நிலையைச் சொல்லி மருத்துவர்களிடம் நான் அனுமதி பெற்றிருப்பது, இன்றைய விழாவில் விருதுகளை வழங்குகின்ற ஒரு பணியை மாத்திரம் நான் செய்கிறேன், எப்படியென்றால் என் கையால் விருது வழங்கப்படும் என்று ஏற்கெனவே விளம்பரப் படுத்தியிருப்பதால், அது நிகழாவிட்டால் விருது பெறுகிறவர்கள் வருந்த நேரிடும், அந்த வருத்தத்தை என் தமிழ்ப் பெருமக்களுக்கு நான் தர விரும்பாத காரணத்தால் அந்தப் பணியை மாத்திரம் நான் ஆற்றுகிறேன் என்று பேராசிரியரிடத்திலே கேட்டுக்கொண்டேன். அவர்களும் சரி அப்படியே செய்வோம் என்று சொன்னார்கள்.

ஆனால் இங்கே எப்படிச் செய்தார் என்பதை நீங்கள் பார்த்தீர்கள், நான் செய்ய வேண்டிய பணியை அவர் செய்து விட்டு என்னை நீண்ட நேரம் உரையாற்றுவார் என்று அவர் என்னை உங்கள் முன்னால் உட்கார வைத்துவிட்டு, அவர் என் பக்கத்திலே வந்து சாதாரணமாக அமர்ந்து கொண்டார். கடந்த சில நாட்களாக ஓய்வின்றி பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டதால், உடல் நலம் கெட்டிருக்கிறது, அதைவிட கைகளிலே ஒன்று–

சரியாகப் பணியாற்ற முடியாமல் – தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. “லெப்ட்'' சரியாக இல்லை; நான் இடது கையைத்தான் சொல்லுகிறேன். சரியாக இருந்தாலும் என்னால் பயன்படுத்த முடியவில்லை. அதற்காகத்தான் நான்கைந்து நாட்கள் அதற்கு குழந்தைக்கு கட்டுவதுபோல ஒரு தொட்டில் கட்டி, அதற்கு ஆராரோ பாடிக்கொண்டிருந்தேன்.

**ஓய்வு என்பது முடியாது**

பிறகு மருத்துவர்கள் ஒரு சிறிய அளவு அறுவைச் சிகிச்சை போல நேற்றைய தினம் அப்பல்லோ மருத்துவ மனையிலே செய்து–ஒரு நாள் ஓய்வெடுக்க வேண்டும், உங்களால் முடியுமா என்று கேட்டார்கள். எந்தப் பத்தியம் வேண்டுமென்றாலும் எடுக்க முடியும், ஓய்வு என்பது முடியாது என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு, இன்று மாலையிலே அந்த ஒரு நாள் ஓய்வெடுத்தால்தான் செய்து கொண்ட சிகிச்சைக்குப் பலன் ஏற்படுமென்றார்கள். நான் அவர்களிடம் சொல்லவில்லை–எனக்குத் தெரியும்–பலன் ஏற்பட வேண்டுமானால், கலைவாணர் அரங்கத்திற்கு வந்து உங்களுடைய திருமுகங்களையெல்லாம் பார்த்தாலே அந்தப் பலன் ஏற்பட்டுவிடும், அந்த வலிமை ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையோடு உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பை இப்போது நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

இன்றையதினம் ஏறத்தாழ பதினைந்து இலட்சம் ரூபாய் நிதியாக அல்லது ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டது. ஏற்கெனவே நம்முடைய பேராசிரியர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல–இந்த விருதுகள் தொடக்கத்தில் அப்போது ஐந்தாறு விருதுகள்தான் புழக்கத்திலே இருந்தது. அப்போது விருது ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் பொற்கிழி என்று தரப்பட்டு, பிறகு 10 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு, அடுத்தடுத்த ஆண்டுகளில் 20 ஆயிரம், 50 ஆயிரம் என்றெல்லாம் பெருகி, இப்போது ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்கப்படுவதற்குக் காரணம், முதலிலே இது அவர்களுடைய சிறப்புக்காக, பெருமைக்காக, ஆற்றலுக்காக அவர்கள் வளர்த்த தமிழுக்காக, தமிழை வளர்த்ததற்காக எடுத்துக் கொண்டிருக்கின்ற பணிகளுக்காக என்று மாத்திரம்தான் கருதினோம். பின்னர் எங்களால் உணர முடிந்தது. இப்படித் தமிழுக்காகத் தொண்டாற்றுகின்ற பெரியவர்கள், மூத்த அறிஞர்கள், எழுத்திலே பேச்சிலே கட்டுரை வரைவதிலே கவிதை புனைவதிலே ஆற்றல் பெற்றிருந்தாலுங்கூட, தனிப்பட்ட வாழ்க்கையிலே அவர்களுக்குள்ள சிரமங்களை உணர்ந்த காரணத்தால், இந்தப் பொற்கிழி ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதனை வழங்கியிருக்கிறோம்.

இதைப் பெற்றுக் கொண்டபோது இந்த விருதுக்கு உரியவர்கள்–விருதுகளை வாங்கியவர்களின் முகங்களிலே தோன்றிய பிரகாசமான ஒளியை நான் முழுக்க முழுக்க ரசித்தேன். ஏதோ இலட்சம் ரூபாயைப் பார்த்து விட்டோம், கிடைத்து விட்டது என்பதால் உருவான ஒளி அல்ல அது. தமிழை எந்த அளவிற்குப் பெருமைப்படுத்தியிருக்கிறார் என்று எங்களை அவர்கள் பாராட்டிய சின்னமாக அந்த ஒளி திகழ்ந்தது. இங்கே நம்முடைய கோபண்ணா அவர்கள் பேசும்போதும், நாராயணன் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள்–இதை அளித்து இந்த விருதின் வாயிலாக எங்களையெல்லாம் பெருமைப்படுத்திவிட்டீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் விருது பெற்றவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்கிறேன். இந்த விருதை நீங்கள் என் கையால் பெற்றுக் கொண்டதன் மூலம் என் கைக்குப் பெருமை அளித்துவிட்டீர்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

யாருக்கு விருது அளிக்கிறோம்? தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுக்கு– தமிழுக்காகப் பணியாற்றியவர்களுக்கு– தமிழுக்காக மொழிப் போரில் ஈடுபட்டவர்களுக்கு– தமிழை நாளும் வளர்த்துக் கொண்டிருப்போருக்கு –செந்தமிழுக்கு ஒரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ?–என்று கேட்ட பாரதிதாசனின் பரம்பரையினருக்கு–தமிழ் மெல்லச் சாகும், இந்த முறை தொடர்ந்தால் என்று சாபமிட்ட பாரதியின் பரம்பரையினருக்கு– இன்றைக்கு நாம் விருது வழங்குகிறோம். தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது என்றாலும், பெருந்தலைவர் காமராசர் விருது என்றாலும், அம்பேத்கர் விருது என்றாலும், திருவள்ளுவர் விருது என்றாலும், நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் விருது என்றாலும், பேறிஞர் அண்ணா விருது என்றாலும்–இந்த ஒவ்வொரு விருதுக்கும் ஒரு பெருமை, ஒரு சிறப்பு இருக்கின்றது.

**திருவள்ளுவரின் உருவம்**

திருவள்ளுவர் விருது இன்றைக்கு வழங்கப்படும்போது உங்களுக்கெல்லாம் திருவள்ளுவருடைய உருவம்–உங்களுடைய அகக்கண்களுக்கு இப்போது தெரிகிறது. அகக்கண்கள் அல்ல, கண்களுக்கே தெரிகிறது. இந்த திருவள்ளுவருடைய உருவத்தை ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நினைத்துப் பார்க்க முடியுமா? திருவள்ளுவர் யார், எப்படி இருப்பார் என்று ஒருவர் சொன்னதை இன்னொருவர்



சொல்லி, ஆமாம் அவர் சொன்னபடிதான் இருப்பார் என்று யாராவது கூறியிருக்க முடியுமா? முடியாது. என்ன காரணம்? ஒரு படத்திலே பார்த்தால் முனிவராக இருப்பார், ஒரு படத்திலே பார்த்தால் ஒரு பெரிய ரிஷி போல இருப்பார், ஒரு படத்திலே பார்த்தால் வைணவராக இருப்பார், ஒரு படத்திலே பார்த்தால் சைவராக இருப்பார், ஒரு படத்திலே பார்த்தால் புத்தராக இருப்பார், ஒரு படத்திலே பார்த்தால் சமணராக இருப்பார்–இப்படி பல்வேறு மதங்களில் அவருடைய உருவத்தை–அவரவர் விருப்பப்படி ஆக்கி வைத்திருந்தார்கள். இந்த உருவம் என்றென்றும் தமிழ் மக்களுடைய உள்ளத்திலே நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காக திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாங்களும், காங்கிரஸ் கட்சியிலே தமிழ் ஆர்வமுள்ள பெரியவர்களும், எங்கள் இரு கட்சியையும் சேராத தமிழ் அறிஞர்கள் பலரும் இணைந்து தமிழ்நாட்டிலே மைலாப்பூரிலே இருந்த வேணுகோபால் சர்மா அவர்களை நாடி, அவரிடத்திலே திருவள்ளுவர் படத்தை வரைந்து கொடுங்கள், அது சைவராகவோ, வைணவராகவோ, புத்தராகவோ– இப்படி ஒரு மதத்தைச் சார்ந்தவராகவோ திருநீர் அணிந்தவராகவோ, நாமம் தரித்தவராகவோ இருக்கக்கூடாது, எல்லோருக்கும் பொதுவான திருவள்ளுவராக இருக்க வேண்டுமென்று கேட்ட போது, வேணுகோபால் சர்மா, மைலாப்பூரிலே ஒரு பெரிய இல்லத்திலே திருவள்ளுவருடைய படத்தை வரைந்து வைத்து–அதைக் கண்டு–அதற்கு ஒப்புதல் பெற–தமிழகத்திலே உள்ள எல்லா கட்சிகளின் தலைவர்களையும் ஒவ்வொரு நாளும் அழைத்துச் சென்றார். ஒரு நாள் பெருந்தலைவர் காமராசரை அழைத்துச் சென்றார், ஒரு நாள் பெரியவர் பக்தவத்சலத்தை அழைத்துச் சென்றார், ஒரு நாள் அறிஞர் அண்ணாவை, நாவலரை, பேராசிரியரை, என்னை, ம.பொ.சி.யை என்று இப்படி ஒவ்வொருவரையும் அழைத்துச் சென்று அந்தப் படத்தைக்காட்டி, நாங்கள் எல்லோரும் அதையேற்றுக்கொண்ட பிறகுதான், அதை வெளியிட்டார். அந்தப் படம்தான் இன்றைக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வள்ளுவருடைய படம். எல்லா நாடுகளிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட படம்.

அந்தப் படத்தை நான் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது, ஒரு நாள் வேணுகோபால் சர்மா இப்படியொரு படத்தை எழுதியிருக்கிறார், அதை அரசே வாங்கி நம்முடைய சட்டமன்ற மண்டபத்தில் அந்தப் படத்தை மாட்ட வேண்டும்–எல்லோருடைய படமும் இருக்கிறது, இந்தப் படத்தை இங்கே மாட்டவேண்டுமென்று கேட்டபோது, அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் இதை எதிர்க்கட்சி உறுப்பினர் தன்னுடைய விருப்பத்தை வெளியிடுகிறார், அவர் அந்தப் படத்தை வாங்கித் தருவாரேயானால், அதற்குரிய செலவை ஏற்றுக்கொள்வாரேயானால், அந்தப் படம் இந்த மாமன்றத்திலே திறக்கப்படுமென்று சொன்னார். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? அதைக் கேட்டவுடன் நான் எழுந்து இதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன்.

ஒருவேளை பக்தவத்சலம் அவர்கள் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கருதி சொல்லியிருப்பாரோ என்னவோ? ஆனால் நான் ஏற்றுக்கொண்டேன். மறுநாள் பெருந்தலைவர் காமராசர் சொல்லியிருப்பார் போலும்! அவர்தான் கேட்டார் என்றால், நீங்கள் எப்படி ஒத்துக் கொண்டீர்கள் என்று சொல்லி – மறுநாள் முதல்

நான் சொன்னதை மாற்றி, நாங்களே இந்தப் படத்தை வைக்கிறோம் என்று சொன்னார்கள். எனக்கு இன்னமும் மகிழ்ச்சி அதிகமாயிற்று. அரசாங்கமே அந்தப் படத்தை வைப்பதாக ஒப்புக்கொண்டதால் பிறகு என்ன என்று அந்தப் படம் சென்னையிலே சட்டமன்ற மாமன்றத்திலே வைக்கப்பட்டது.

அப்படி வந்த திருவள்ளுவர் இன்றைக்கு திருவள்ளுவருடைய கோட்டமாக ஆகி, தமிழகத்திலேயே குமரி முனையிலே 133 அடி உயரமுள்ள சிலையாக நின்று கொண்டிருக்கிறதென்றால், திருவள்ளுவருடைய மகாநாட்டை நடத்தி—திருக்குறள் மாநாடு நடத்தி—திருக்குறளை மக்களுடைய மனதிலே எல்லாம் இன்றைக்குப் பதிய வைத்த அந்தப் பெருமை தமிழ்நாட்டிலே உள்ள புலவர் பெருமக்களுக்கு—தமிழ்நாட்டிலே உள்ள திராவிட இயக்கம் போன்ற இயக்கங்களுக்கு – காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்களுக்கு – சிலம்புச் செல்வர் போன்றவர் களுக்கு – சா. கணேசன் போன்றவர்களுக்கு – அந்தப் பெருமை உண்டு. இப்படி எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்கள், தமிழ் ஆர்வம் படைத்தவர்கள் ஆற்றிய தொண்டால் எடுத்த முயற்சியால் திருவள்ளுவர் சிலையாக நிற்கிறார். கோட்டமாகக் காட்சி தருகிறார். புத்தகங்களாக நம் முன்னால் அறிவுரை வழங்குகிறார். அப்படிப்பட்ட திருவள்ளுவருடைய விருது நம்முடைய அன்பர், முனைவர் பொற்கோ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரை நான் வாழ்த்துகின்றேன். அதைப்போல தந்தை பெரியார் விருது ஞான். ராஜசேகரன், ஐ.ஏ.எஸ்., – அவர் ஐ.ஏ.எஸ். படித்து விட்டு, பகுத்தறிவுப் பணிதான் வாழ்க்கையிலே சிறந்தது என்று கருதி – அந்தப் பணியையும் ஆற்ற தந்தை பெரியாரைத் தேர்ந்தெடுத்து, அவர் தலைமையை ஏற்று, அவர் தகுதியை மேலும் மேலும் மக்களுக்கு விளக்க வேண்டும், அவர் பெருமையைக் கூற வேண்டுமென்பதற்காக அதை திரைப்படமாகத் தந்த பெருமை – பெரியாரை திரைப்படமாக இன்றைக்கு உலவ விட்டிருக்கின்ற பெருமை ராஜசேகரன் அவர்களைத்தான் சாரும். அவரை நான் வாழ்த்துகின்றேன்.

**திராவிட இயக்கத்தின் மூலம்தான் அம்பேத்கர் தமிழகத்திற்கு அறிமுகமானார்**

அம்பேத்கர் விருது – அம்பேத்கருடைய அறிமுகம் தமிழகத்திலே – நான் சொன்னால் யாரும் தவறாகக் கருதக் கூடாது – திராவிட இயக்கத்தின் மூலம்தான் – அம்பேத்கர் தமிழகத்திற்கு அறிமுகமானார். நாளைக்கு யாராவது மறுத்துப் பேசலாம். நான் ஆதாரங்களோடு கூடிய எதிர்வாதம் செய்யத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்பு அவர் அறிமுகமாகியிருக்கலாம். அவர் அறிஞர் பெருந்தகை, அண்ணல், சட்ட மேதை ஆனாலும் அம்பேத்கரை பட்டி தொட்டியெல்லாம் எங்கெங்கே தாழ்த்தப்பட்ட மக்களுடைய காலடி இருந்ததோ அங்கெல்லாம் அம்பேத்கருடைய பெருமையை உயர்த்தி, அம்பேத்கருடைய சட்ட நுணுக்கங்களை எடுத்துச் சொல்லி, அவருடைய புரட்சிகரமான கருத்துகளுக்கு வித்திட உதவிய ஒரு இயக்கம் திராவிட இயக்கம். இன்னும் சொல்லப் போனால் – நேற்று கூட வந்திருந்தார் – மராட்டிய மாநிலத்தின் கவர்னராக இருந்த திரு. அலெக்சாண்டர் அவர்கள் – இங்கேயும் கவர்னராக இருந்தார்– அவர் இங்கேயிருந்து மராட்டிய மாநிலத்திற்கு மாற்றப்பட்டு–சென்றபோது பத்திரிகையிலே ஒரு செய்தி பார்த்தேன்–மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் வைப்பதாகச் சொல்லப்பட்டு–12 ஆண்டுகள் ஆகிறது, ஆனால் 12 ஆண்டுகளுக்கு முன்பு சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் கூட, அந்தப் பல்கலைக் கழகம் அம்பேத்கர் பெயரால் உருவாக வேண்டிய பல்கலைக்கழகம் இன்னும் மராட்டியத்திலே உருவாகவில்லை என்று கிளர்ச்சி நடைபெறுகிறது என்ற ஒரு செய்தி பத்திரிகைகளிலே வந்தது. வந்தவுடன் நான் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவன் என்ற முறையில், கழகத் தோழர்களுக்கெல்லாம் பத்திரிகைகள் மூலம் அறிக்கை வெளியிட்டு– தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும் அம்பேத்கர் பெயரால் அந்தப் பல்கலைக்கழகம் உலவ வேண்டுமென்று இலட்சக்கணக்கான தந்திகளை அங்கேயிருக்கின்ற முதல் அமைச்சருக்கும், ஆளுநருக்கும் அனுப்புங்கள் என்று அறிக்கை விடுத்தேன். தந்திகள் பறந்தன. மறுநாளே ஆளுநர் அலெக்சாண்டரிடமிருந்து எனக்குப் பதில் வந்தது. இதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம், விரைவில் உங்களுக்கு பதில் அனுப்புகிறோம் என்று தகவல் சொல்லியிருந்தார்.

சொல்லியது மாத்திரமல்ல, நான்கு நாட்களுக்கெல்லாம் அம்பேத்கர் பெயரால் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான அரசாணையைப் பிறப்பித்து, அந்த அரசாணையின் நகலையும் எனக்கு அனுப்பி வைத்தார்கள். இப்படி அம்பேத்கருடைய பெயர் தமிழகத்திலே மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும் பரவிட முதல் முயற்சியை – பெரு முயற்சியை எடுத்தது இந்த இயக்கம் என்பதையும், அந்த இயக்கத்தின் தலைவனாகிய நான் என்பதையும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன். அம்பேத்கர் விருது



எழுத்தாளர் சோலை பெற்றிருக்கிறார். எழுத்தாளர் சோலை பற்றி இங்கே கோபண்ணா சொன்னார். “இந்த விஷயத்தைப் பற்றி சோலை என்ன எழுதுகிறார்'' என்று படித்துப் பார்த்து விட்டுத்தான் அந்த விஷயத்தைப் பற்றி நான் எழுதுவேன். அப்படிப்பட்ட திறமைசாலி. சோலை என்ற பெயரையே பாருங்களேன். “சோலை”யில் கொம்பை எடுத்து விட்டால் “சாலை” – சோலையில் எல்லாம் கிடைக்கும் – சாலை இருந்தால்தான் நாம் நடந்து போவதற்கே ஒரு வழி கிடைக்கும். அப்படி எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கெல்லாம் அவர் நாங்கள் நடந்து செல்ல வேண்டிய பயணத்திற்குரிய சாலையாகவும் பயன்படுகிறார். அந்தப் பயணத்திலே ஏற்படுகின்ற களைப்பை நீக்குகின்ற சோலையாகவும் சில நேரங்களில் பயன்படுகிறார்.

இப்போது எழுதுகிறார்களே, அரசியல் கட்டுரைகளையெல்லாம்–அந்தக் காலத்திலே சாலையாக இருந்தது–கோடை வெயிலிலே நடக்க வேண்டிய சாலையாக இருந்தது. இன்றைக்கு அது குளிர் தருகின்ற சோலையாக எங்களுக்கு மாறியிருக்கிறது. இப்படிச் சொல்வதால் யாரும் அவருக்கு முத்திரை குத்திவிட வேண்டாம். அவர் சாலையாகவும் இருப்பார், சோலையாகவும் இருப்பார், எங்களுக்கெல்லாம் அவர் எழுத்துலகத்திலே நான் அவரை ஏதோ பெரிதாகப் பாராட்டுகிறேன் என்று தயவு செய்து யாரும் கருதக் கூடாது. உண்மையைச் சொல்லுகிறேன். இந்தக் கருத்தைப் பற்றி இந்தச் செய்தியைப் பற்றி, இந்தப் பிரச்சினையைப் பற்றி சோலை என்ன கருதுகிறார் என்று நான் படித்துப் பார்க்காமல், அந்தச் செய்தியைப் பற்றி நான் விமர்சிப்பதில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா விருது பெற்ற தம்பி மறைமலையான்–அவர் திராவிட இயக்கத்தில் எங்களோடு சேர்ந்து வளர்ந்து என்னை, பேராசிரியரை, நாவலரை, பேரறிஞர் அண்ணாவை இந்த இயக்கத் தோழர்களையெல்லாம் நன்கு அறிந்த அருமைத் தம்பி. பெருந்தலைவர் காமராசர் விருது பெற்ற கோபண்ணா அவர்களைப்பற்றி சொல்லத் தேவையில்லை. நல்ல காங்கிரஸ்காரர்–காங்கிரசிலே அழுத்தந்திருத்தமான பிடிப்பு உள்ளவர். காங்கிரசினுடைய தூய்மையைப் போற்றக் கூடியவர். காங்கிரசின் வலிவு மேலும் பெருகவேண்டுமென்று விரும்பக் கூடியவர். என்னிடத்திலே சொல்லுவார்–காங்கிரஸ் இன்னமும் வலிமை பெறவேண்டுமென்பார். இவரிடம் சொல்கிறோமே என்று கூட கவலைப்படாமல் சொல்லுவார். இன்னொரு கட்சிக்காரரைப் பார்த்து நாங்கள் வளரவேண்டும் சார் என்றும் சொல்வார். அந்த அளவிற்கு பேராசை பிடித்தவர் – அவருடைய கட்சியைப் பொறுத்த வரையிலே.

பாரதியார் விருது பெற்ற முனைவர் இரா. மணியன் அவர்கள் பாரதியாரை எந்த அளவிற்கு தமிழகத்து பிள்ளைகள் மாணவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இன்னும் உணரவேண்டும் என்ற முறையில் பல எழுத்தாளர்களையெல்லாம் தந்தவர்.

**தமிழ்ப் பெயர்**

பாரதிதாசன் விருது பெற்ற தமிழச்சி தங்கப் பாண்டியன் – எங்கள் வீட்டுப் பெண் – தங்கப் பாண்டியன் என்னுடைய ஆருயிர் உடன்பிறப்பு – அந்த உடன்பிறப்பு பெற்றெடுத்த மங்கை தமிழச்சி.

உன் பெயரை தமிழச்சி தங்கப் பாண்டியன் என்று வைத்துக்கொள்ளுமாறு நான்தான் சொன்னேன். ஏனென்றால் அவருடைய உரையை சில நேரங்களில் கேட்டும், எழுத்துக்களைப் படித்தும் தமிழச்சி என்கிற பெய்ர்தான் ஏற்கெனவே வைக்கப்பட்ட சுமதி என்ற வடமொழிப் பெயருக்குச் சரியான மாற்றுப் பெயர்–தமிழச்சி என்றே இருக்கட்டும் என்று சொன்னேன். இப்போது சுமதி, தமிழச்சியாக நிலைத்து விட்டது.

கி.ஆ.பெ. விருது கொடுக்கிறோமே, அவர் தமிழ்ப் பெயர்களில் மிகவும் அக்கறை கொண்டவர். ஏ தமிழா உன் வீட்டிலே இருக்கிற எல்லாப் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் தமிழிலே பெயர் வை என்று சொல்லுவார். ஆனால் அவருடைய பேத்தியின் பெயர் ஜெயஸ்ரீ. நான் சொல்லாமல் இருப்பதில்லை. நான் அவருக்கு ஒன்றிரண்டு முறை சொல்லிவிட்டேன், நீயாவது திருந்தி ஒரு நாள், ஜெயஸ்ரீ என்ற பெயரை மாற்றுகின்ற விழா, இதே கலைவாணர் அரங்கத்திலே நடைபெற்றால், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து பாராட்டு தெரிவிப்பேன்.

முனைவர் அருளானந்தம் அவர்கள் இந்த வட்டாரத்தில் – கல்வி வட்டாரத்தில் – திராவிட இயக்க உணர்வுகளைப் பரப்பியவர் என்பதும் – இன்றையதினம் அவருடைய பெயரைச் சொல்லும்போதே எவ்வளவு கையொலி எழுந்தது என்பதை எண்ணும்போது – எப்படி பிரபலமானவர், எத்தகைய உணர்ச்சி உள்ளவர், எத்தகைய உணர்வு உள்ளவர், இயக்கப் பற்றாளர் என்பதையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அவருக்கு திரு.வி.க விருது வழங்கப்பட்டிருக்கிறது.

**சமத்துவப் பொங்கல் கொண்டாடிட இந்த அரசு வழங்கிய பொருட்கள்**

கி.ஆ.பெ. விருது பழமலய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பழமலய் ஒருவேளை அவருடைய பெயர் விருதாசலம் என்றிருந்து– பழமலய் என்று மாறியிருக்குமென்று கருதுகிறேன். அவருடைய பெற்றோர்களின் தமிழ் உணர்வை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய பேரறிவாளர்களுக்கு நல்லறிவாளர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த விருதுகளை தமிழ்ப் புத்தாண்டு தொடங்குகின்ற இந்த நாளில்– நேற்றையதினம் புத்தாண்டு– ஏழையெளியவர்களுக்கெல்லாம்– எல்லோருக்கும் சமத்துவப் பொங்கல் சாப்பிட இந்த அரசின் சார்பாக அவர்களுக்கெல்லாம் தேவையான பொருட்களை வழங்கிய அரசு – இந்த அரசு – இந்தப் புத்தாண்டை இதற்கு முன்பு நாம் கொண்டாடினோம். வருடப் பிறப்பு என்ற பெயரால் கொண்டாடினோம். அந்த வருடப் பிறப்பு எப்படி புத்தாண்டாக மாற நேரிட்டது என்றால்–தந்தை பெரியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள், மறைமலை அடிகளார் போன்றவர்கள், திரு.வி.க. போன்றவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து–நம்முடைய தமிழனுக்கு ஒரு ஆண்டு வேண்டும், அந்தத் தமிழ் ஆண்டு, புத்தாண்டு தை முதல் நாளாகத் தான் இருக்க முடியும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்று அந்தச் சொல் வந்ததற்குக் காரணமே, தை பிறந்தால்தான் தமிழனுக்கு, ஏழைக்கு, விவசாயிக்கு, உழவனுக்கு, பாட்டாளிக்கு வாழ்வு பிறக்கின்றது. ஆகவே அந்த நாளை நாம் புத்தாண்டு என்று வைப்போம் என்று வைத்தார்கள். அதற்கு முன்பு இருந்த புத்தாண்டு, வருடப் பிறப்பு–அது வேறு, இது வேறு. அய்யோ, அதை ஒழித்து விட்டீர்களே என்று யாராவது சொன்னால், நீங்கள் கேளுங்கள். நீ எந்த வருடம் பிறந்தாய் என்று–என்னையே கேளுங்கள்– அவர்களுடைய கணக்குப்படி–நான் ரக்தாட்சி வருடம் பிறந்தேன். அப்படியென்றால் இப்போது எனக்கு என்ன வயது? ரக்தாட்சி வருடம் பிறந்தவனுக்கு அட்சய வருடத்தில் என்ன வயது என்று கேட்டால், ரக்தாட்சி, குரோதன, அட்சய–ஒரு வருடம்–ஏனென்றால் அறுபது ஆண்டுகள்– பெயர்கள் சுற்றிக்கொண்டே வரும். பிரபவ, விபவ, சுக்ல, பிரஜோபத்தி, ஆங்கீரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபானு, சுபானு என்று இப்படி அறுபது ஆண்டுகள் சுற்றிக்கொண்டே வரும். அப்படி சுற்றிக்கொண்டு வரும்போது இந்த அறுபதில், 1924ஆம் ஆண்டு பிறந்த நான் – இந்த வருடத்தின் சுற்று முடியும்போது – யாராலும் சரியாக வயதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. 1924இல் பிறந்தவன் என்று சொல்கிறபோது, இப்போது என்னுடைய வ்யது 85 என்று சொல்ல முடியும்.

எப்படி வந்தது இந்த வருஷம். ஒரு நாள் கிருஷ்ணனைப் பார்த்து நகர் வலம் வந்த நாரதர் – கிருஷ்ணா எனக்கொரு ஆசை என்றார். என்ன ஆசை நாரதா என்றார். நான் கதை சொல்லவில்லை. இது திரைக்கதை வசனம் அல்லவே அல்ல. இது திவ்யமான புராணம். அந்தப் புராணத்திலே நாரதர் வீணையோடு வந்து கொண்டிருந்தார். அப்போது கிருஷ்ணனிடம் எனக்கொரு ஆசை, அதை நீ நிறைவேற்ற வேண்டுமென்றார். ஒரு அழகான பெண்ணோடு நான் ஒரு நாளாவது வாழவேண்டும் என்றார் நாரதர். கிருஷ்ணனுக்கு கோபம் வந்து விட்டது. இவர் யார், நாம் யார்? நம்மைப் பார்த்து இப்படி கேட்கிறாரே என்று, சரி உனக்கு நான் இந்த வரம் தருகிறேன், நீ இந்த ஊரில் எல்லா வீடுகளுக்கும் போ, எந்த



வீட்டிலேயாவது அழகான ஒரு பெண் உனக்காக இருந்தால், நீ அவளை ஏற்றுக்கொள்ளத் தடை இல்லை, அவள் உன்னோடு வருவாள், போ என்று அனுப்பி வைத்தார். நாரதர் போனார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புருஷனோடு பெண் இருந்தாளே தவிர, தனியாக ஒரு பெண் இல்லை. திரும்பி வந்தார் நாரதர். ஏன் என்று கிருஷ்ணர் கேட்டார். எல்லா வீடுகளிலும் பெண், ஆணோடுதான் இருக்கிறாள், அதனால் எனக்கேற்ற பெண் எங்கும் கிடைக்கவில்லை, என்னை விரும்புகிற பெண்ணையே காணவில்லை என்றார். சரி என்ன செய்யச் சொல்றே? நானே பெண்ணாக ஆகி விடுகிறேன், நீ ஆணாக இருந்து என்னை சந்தோஷப்படுத்து என்று நாரதர் கிருஷ்ணனைக் கேட்கிறார்.

சரி உன் இஷ்டப்படியே ஆகட்டும் என்று நாரதரைப் பெண்ணாக்கி, நாரதர், நாரதியாகி– கிருஷ்ணன் நாரதர் இரண்டு பேரும் சந்தோஷமாக இருந்து–அதைத்தான் படம் பார்த்திருப்பீர்கள்–பல ஆண்டுகளுக்கு முன்பு திரைப்படம் வந்தது–பாட்டிகளுக்கெல்லாம் தெரியும்–கிருஷ்ணன் நாரதி என்று படமே வந்தது. நான் பொய் சொல்லவில்லை. அவர்கள் இருவருக்கும் சேர்ந்து 60 பிள்ளைகள் பிறந்தன. கடவுளுடைய காதல் அல்லவா? அவர்கள் இருவருக்கும் ஒரே நாளில் அறுபது பிள்ளைகள் பிறந்தன. அந்த அறுபது பிள்ளைகளுக்கும் வைத்த பெயர்கள் தான் பிரபவ, விபவ, சுக்ல என்று ஆரம்பித்து அட்சய வரையிலே உள்ள வருடங்களின் பெயர்கள். அந்த வருடங்கள்தான், அந்தக் கடவுளர்கள்தான், நமக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் வைக்கப்படுகிற வருடங்கள், ஆண்டுகள் என்றிருந்தால் தமிழன் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? அவன் தமிழனாக இருக்க முடியுமா? தமிழனாக இருப்பதற்கு அவனுக்கு எப்படி ஒரு கலை, கலாச்சாரம், நாகரிகம், பண்பாடு இவைகள் எல்லாம் வேண்டுமோ – பண்பாடு வேண்டும், அவனுக்கு வருடம் வேண்டாமா? அவனுக்கு ஒரு ஆண்டு வேண்டாமா? அவனுக்கு ஒரு திங்கள் வேண்டாமா? மாதம் வேண்டாமா? கிழமை வேண்டாமா? அதைத்தான் ஆய்ந்தாய்ந்து 500க்கு மேற்பட்ட புலவர்கள் கூடி, 1921ஆம் ஆண்டு எடுத்த முடிவுதான். நேற்றையதினம் நாம் கொண்டாடிய நாள், தமிழர் புத்தாண்டு நாள் – இந்த ஆண்டு நாம் இதை ஓரளவு மகிழ்ச்சியோடுதான் கொண்டாடி யிருக்கிறோம். ஏனென்றால் தமிழர்கள் வேறு ஒரு பக்கத்திலே சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் நம்மால் அவ்வளவு தான் கொண்டாட முடிந்தது. அந்தத் தமிழர்களுக்காக நாம் இங்கே அந்த விழாவினை ஓரளவுதான் கொண்டாடினோம்.

அடுத்த ஆண்டிலேயிருந்து அமெரிக்க சுதந்திர தினம் எப்படிக் கொண்டாடப்படுகிறதோ– இங்கிலாந்திலே எப்படி சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறதோ அதைப் போலவே தமிழர்களுடைய ஆண்டு தினம் – முதல்நாளைக் கொண்டாட வேண்டும். கடற்கரையிலே வாண வேடிக்கைகள்–ஒவ்வொரு மாவட்டத்தின் தலை நகரத்திலும்–குளக்கரையிலே, தெருக்களிலே, மைதானங்களிலே வாண வேடிக்கைகள் நடை பெறவேண்டும். அப்படி கோலாகலமாக இந்த விழாவை நாம் கொண்டாடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விருது வழங்கப்பட்ட இந்த விழாவிலே இந்த விளக்கங்களைத் தருவதற்கு நேரம் கிடைத்த காரணத்தால் உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்த காரணத்தால்– என் நோய் பறந்தது என்ற எண்ணத்தோடு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

✦ ✦ ✦

# நிதிநிலை அறிக்கை 2009-2010



**மா**ண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள்,
**2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் வரவு–செலவுத் திட்டத்தை,**
**2009 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள்**
**சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மனம், மொழி, மெய் அனைத்தும் மக்கள் பிரச்சினைகளை முன் வைத்தே என்ற முடிவுடன் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக – ஆட்சி மன்றத்தில் ஆளுங்கட்சி வரிசையிலும், எதிர்த் தரப்பிலும் அமர்ந்து ஜனநாயகப் பணியாற்றிக் கொண்டிருக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தமிழ்நாட்டில் ஏழை, எளிய சாதாரண சாமான்ய மக்கள், உழைக்கும் வர்க்கத்தினர், உழவர் பெருந்தகையினர், பாட்டாளிப் பெருமக்கள், நடுத்தர வர்க்கத்தினர் முதலியோரின் கண் திறக்கப்படவும், கைதூக்கி விடப்படவும் – ஏற்கனவே நான்கு முறை ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது தீட்டிய திட்டங்களையும், புரிந்த சாதனைகளையும் – அனுபவத்தில் உணர்ந்துள்ளவர்களாம் அன்புத் தமிழ்நாட்டு மக்கள்; தங்கள் மேன்மைக்காகவும், நல வாழ்வுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ சமுதாயம் அமைவதற்காகவும், அறிவார்ந்த முறையில் ஆட்சி நடத்தக்கூடிய திறனுடையார் யார் எனத் தெளிந்து தேர்வு செய்து,

**“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்”**

என்னும் குறள் மொழிப்படி, இன்றைய ஆளும் கட்சியின் கையில் பொறுப்பை ஐந்தாவது முறையாக ஒப்படைத்ததன் பலனாக, கடந்த ஆண்டுகளில் இந்த அரசு ஆற்றியுள்ள சாதனைகளை இந்த அவையோரும் அருந்தமிழ் நாட்டோரும் அறிவர். அத்துடன் நில்லாது, கடந்த சனவரித் திங்களில் வெளிவந்த ஆளுநர் உரையில் அறிவித்த திட்டங்களும், அவற்றையொட்டி ஏழை எளிய சாமானிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மற்றும் உழைக்கும் வர்க்கத்திற்கும் வாழ்வளிக்கும் மற்ற பல திட்டங்களின் தொகுப்பாக, ஐந்தாவது முறை கலைஞர் ஆட்சியில், நான்காவது முறையாக நலன் பல குவிக்கும் நிதிநிலை அறிக்கையை அவையின் ஒப்புதலுக்காக இந்த அரசு முன்வைக்கிறது.

2. சமுதாயத் திருப்பணியில் ஓய்வும் சலிப்புமின்றி நாள்தோறும் ஈடுபட்டு உழைத்து வரும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்; கடுமையான முதுகுவலியினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அறுவைசிகிச்சை பெற்று வரும் நிலையிலும் கூட, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் முழுமுதல் காரணமாக இருந்து தனது நேரத்தையும் நினைவையும் செலுத்தி இதனை முழுமையாக்கித் தந்தமைக்காகவும், என்னுடைய பணியில் பெரும்பகுதியைக் குறைத்தமைக்காகவும் தொடக்கத்திலேயே அவருக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, விரைவில் அவர் நலம் பெற்று நம்முடன் இணைந்து பணியாற்ற வரவேண்டுமென்ற என்னுடைய விழைவினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சமூக நீதி கிடைத்திட – மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போராட்டம் நடத்தியும் – இதே சட்டமன்றத்தில் அதற்காகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியும் – மறைந்த பிரதமர் வி.பி.சிங் மூலம் அதில் வெற்றி பெற்றும், மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு (சீர் மரபினர் உட்பட) கல்வி, வேலை வாய்ப்புகளில் 20 சதவீதமும் – மேலும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதமும் என இட ஒதுக்கீடு அளித்தும் – கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர்களைச் சார்ந்த மாணவர்கள் வருங்காலத்தில் நல்ல அறிவு வளர்ச்சி பெறவும் – வாழ்வில் முன்னேறவும் வழி வகுத்துள்ளது இந்த அரசு.

4. இன்று மத்திய மாநில அரசுகள் இணைந்து செயலாற்றி வருவதால், தமிழ்நாட்டில் பல புதிய பெருந்திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றி வருகிறது. இதற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், இந்த அரசின் முழு முதல் கொள்கையான மாநில சுயாட்சிக் கொள்கையின்படி மாநில அரசுகள் தமக்குரிய அனைத்து உரிமைகளையும் முழுமையாகப் பெற்றிட இந்த அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

5. இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காகவும் – அவர்கள் பெற வேண்டிய நல உரிமைகளுக்காகவும் தொடர்ந்து இந்த அரசு குரல் கொடுப்பதோடு – இலங்கையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட்டு விரைவில் அமைதி காண்பதற்கு மற்ற நாடுகளோடு சேர்ந்து இந்திய அரசின் உறுதிமிக்க வலிமையான குரலும் இணைந்திட வேண்டும் என்ற இந்த அரசின் எதிர்பார்ப்பை நிறைவு




செய்து, மேதகு குடியரசுத் தலைவரின் உரையிலேயே இக்கருத்தை வலியுறுத்தியுள்ள மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்து, இக்கருத்தை செயல்படுத்திட இருசாராரும் போரை நிறுத்தி, நியாயமான உடன்பாட்டிற்கு வந்திடத் தேவையான தீவிர முயற்சிகளை இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். **ஏற்கெனவே மத்திய அரசுடன் இணைந்து இந்த அரசு தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக செயல்படுத்திவரும் திட்டங்களோடு, ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, அவர்கள் வசிக்கும் அகதிகள் முகாம்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 5 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

6. ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, ஏழை எளிய சாமானிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், உயிருக்கு ஆபத்தான 51




நோய்களுக்கு, ரூபாய் ஒரு இலட்சம் வரையில் இலவச உயர் சிகிச்சை பெற வகை செய்யும், காப்பீட்டுத் திட்டத்திற்கான ஆணை வெளியிடப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. **விவசாயத் தொழிலாளர் நலவாரியம், அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள், மீனவர் நலவாரியம் போன்ற அனைத்து நலவாரிய உறுப்பினர்களின் குடும்பங்களும் இத்திட்டத்தால் பயன் பெறுவர். இதுதவிர, ரூபாய் 24,000–க்கு குறைவான ஆண்டு வருமானமுடைய அனைத்துக் குடும்பங்களும் இத்திட்டத்தால் பயனடையலாம். இந்த காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும். ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் வரும் ஜுன் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்படும். இத்திட்டத்திற்கு 'உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு

7. வேளாண் துறைக்குப் புத்துயிரூட்டும் வகையில், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும், 13.5.2006 அன்று இந்த அரசு பொறுப்பேற்ற மேடையிலேயே தள்ளுபடி செய்து, அதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு இதுவரை ரூபாய் 4,493 கோடி வரை நிதியுதவி வழங்கி ஈடு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து, நமது நாட்டில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் கடன்கள் அனைத்தையும் மத்திய அரசு தள்ளுபடி செய்துள்ளது. இந்த நடவடிக்கைகளினால் நமது மாநிலத்தில் உள்ள விவசாயிகள் கடன் சுமையிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டு, புதிய பயிர்க் கடன்களைப் பெற்று வருகின்றனர். 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,250 கோடியும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 1,360 கோடியும், நடப்பு நிதியாண்டில் இதுவரை ரூபாய் 1,325 கோடியும் புதிய பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது. **வரும் 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 2,000 கோடி அளவில் புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும்.**

8. ஒரு நாட்டின் வளத்திற்கு விவசாயிகளின் உழைப்பும் முயற்சியுமே நாடி நரம்புகளாக இருக்கின்றன என்பதை நன்குணர்ந்து அவர்களது நலம் நாடும் இந்த அரசு, அவர்தம் இன்றியமையாத் தேவையான கூட்டுறவுப் பயிர்க் கடன்களை எளிதாக தொடர்ந்து வழங்கிவர




ஆவன செய்துள்ளதோடு, 9 சதவீதம் என்றிருந்த வேளாண் கடன்களுக்கான வட்டி வீதத்தை, இந்த அரசு 2006–2007 ஆம் ஆண்டில் 7 சதவீதமாகவும், 2007–2008 ஆம் ஆண்டில் 5 சதவீதமாகவும், கடந்த நிதிநிலை அறிக்கையில் 4 சதவீதமாகவும் குறைத்து, ஏழை விவசாயிகள் குறைந்த வட்டியில் கடன் பெறவும் வழிவகுத்துள்ளது. **மேலும், நாடு செழிக்கப் பாடுபடும் அந்த விவசாயிகளின்பால் இந்த அரசு கொண்டுள்ள பரிவு பாசத்தின் மற்றுமொரு எடுத்துக்காட்டாக; இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறையாக, தமிழகத்தில் வரும் நிதியாண்டு முதல் கூட்டுறவுப் பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும், இனிமேல் வட்டி கிடையவே கிடையாது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். அந்த வட்டித் தொகையை அரசே செலுத்திவிடும்.**




**இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

9. கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெறும் விவசாயிகளைக் கொண்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 10,000 குழுக்களுக்கு, தலா ரூபாய் 10,000 சுழல்நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இக்குழுக்களின் எண்ணிக்கை 20,000 ஆக உயர்த்தப்படும். இப்புதிய குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கப்படும்.**

10. செம்மை நெல் சாகுபடி (System of Rice Intensification) மற்றும் துல்லிய பண்ணைமுறை (Precision Farming) ஆகிய புதிய தொழில்நுட்பங்களை நமது விவசாயிகள் பயன்படுத்த இந்த அரசு ஊக்கம் அளித்ததால், வேளாண் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது. இந்தத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 385 வட்டாரங்களில் விவசாயத் தொழில்நுட்ப மையங்கள் (Agriclinics) அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் கிடைத்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதனால் இப்புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றும் விவசாயிகளின் வருவாயும் உயர்ந்துள்ளது. **அதிக வருவாய் ஈட்டவல்ல தோட்டக்கலைப் பயிர்களை அதிக பரப்பளவில் பயிர் செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் வரும் நிதியாண்டில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூபாய் 70 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டு, விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி அனைத்து உரங்களும் கிடைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் ஊக்கத் தொகையுடன், குவின்டாலுக்கு சன்னரக நெல்லுக்கு 120 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு 100 ரூபாயும் கூடுதல் ஊக்கத் தொகையாக மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கி, சன்ன ரக நெல் மற்றும் சாதாரண நெல்லுக்கு முறையே குவின்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,000 மற்றும் ரூபாய் 1,050 எனக் கொள்முதல் விலையை உயர்த்தி இந்த அரசு வழங்கி வருகிறது. இதற்கு மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகைக்காக் இந்த வரவு–செலவுத் திட்டத்தில்




ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கரும்புக்கான மாநில அரசின் பரிந்துரை விலையையும் உயர்த்தி, விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 1,220 கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.

12. அண்மையில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தினால் நமது மாநிலத்தில் 14.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் பிற பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட 10.4 இலட்சம் விவசாயிகளுக்கு, ரூபாய் 388 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. **இந்த வெள்ளம் பாதித்த 12 மாவட்டங்களிலும் இந்தப் பசலி ஆண்டிற்கான நிலவரி இரத்து செய்யப்படும்.**

## “2005–2006 ஆம் ஆண்டில் 61 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கு மாறாக 2007–2008 ஆம் ஆண்டில் 84 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.”

13. இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய, முதன் முறையாக காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை மானியமாக 2006–2007 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு அளித்து வருகிறது. இதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் பயிர்க் காப்பீடு செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திலிருந்து எட்டரை இலட்சமாக உயர்ந்துள்ளது. **வரும் ஆண்டிலும் இத்திட்டத்தின் மூலம் 25 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்வதற்கு மானியம் அளிக்கப்படும். இதற்காக ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பயிர் இழப்பீடு வழங்குவதற்காக மாநில அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

14. இந்த அரசு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் எடுத்த முயற்சிகளின் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் கழனிச் செல்வம் பெருகியுள்ளது. சான்றாக, 2005–2006 ஆம் ஆண்டில் 61 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கு மாறாக 2007–2008 ஆம் ஆண்டில் 84 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2008–2009 ஆம் ஆண்டில், அதிகமாக வெள்ளம் பாதித்துள்ளபோதிலும், நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி 91 இலட்சம் டன் அளவிற்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

15. இந்த அரசால் தொடங்கப்பட்டு, இடையில் இல்லாமல் போய்விட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்து; விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 170 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 152 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. இந்த அரசின் அரிய திட்டமான, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாநில அரசின் மானிய உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 279 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ப்பு**

17. இந்த அரசு பொறுப்பேற்ற பின் 492 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 743 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கால்நடை பாதுகாப்புத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு,




இதுவரை நடந்துள்ள 12,037 முகாம்களில் 149 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் 68 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் 5,500 கால்நடை முகாம்கள் நடத்தப்படும்.**

18. பால் உற்பத்தியைப் பெருக்க, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உயர் கலப்பினக் கறவை மாடுகளை வழங்கும் புதிய திட்டத்தைச் சென்ற நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்

**கீழ், வரும் நிதியாண்டிலும் பால் உற்பத்தி செய்யத் தகுந்த 100 கிராமங்களில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக 5,000 உயர் கலப்பின கறவை மாடுகளும், ஏனைய உதவிகளும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.**

**பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு**

19. காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு எதிர்ப்பு, நெய்யாறு நதிநீர்ப் பிரச்சினை மற்றும் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்றை அமைப்பதற்கான




முயற்சிகள் போன்ற; தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய அனைத்து நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளிலும், மதிக்கப்பட வேண்டிய இந்திய ஒருமைப்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்தின் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்கத் தேவையான அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து உறுதியாக மேற்கொள்ளும்.

20. நமது மாநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்களை மேம்படுத்தியும், நவீன வேளாண் நடைமுறைகளைப் அறிமுகப்படுத்தியும், விளைபொருள் உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு, ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன், நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 16 இலட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்குப் பயனளிக்கக்கூடிய இத்திட்டத்தின் கீழ், 25 துணை வடிநிலங்களில் தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் 2009–2010 ஆம் ஆண்டில், மேலும் 38 துணை வடிநிலங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 2009–2010 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 533 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

21. தமிழ்நாட்டின் முக்கியப் பாசனப் பகுதிகளில் உள்ள கால்வாய்களை, நபார்டு வங்கி உதவியுடன் மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவற்றின் கீழ், கல்லணைக் கால்வாய் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பாசனக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 50 கோடியும், காளிங்கராயன் கால்வாயைச் சீரமைப்பதற்காக ரூபாய் 4 கோடியும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22. கோவை மற்றும் ஈரோடு மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, அத்திக்கடவு–அவினாசி கால்வாய் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்ந்து விரிவான அறிக்கை ஒன்றை அளிப்பதற்காக, காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் திரு. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கோத்தயம் கிராமத்தில், சுமார் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நல்லதங்காள் ஓடைக்குக் குறுக்கே அணை ஒன்று அமைக்கப்படும்.**

23. நமது மாநிலத்தின் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், ஆறுகள், சிற்றாறுகள் போன்றவற்றில் வீணாகும் நீரைத் தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் குடிநீர் வசதிக்கு பயன்படுத்துவதற்கான பெரும் திட்டத்தை இந்த அரசு சென்ற நிதியாண்டில் அறிவித்தது. இதன் கீழ், ரூபாய் 550 கோடி மதிப்பீட்டில் 48,500 தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகள் பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில், மதுரை மாநகரில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கான திட்டத்திற்கும், ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில், கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் நிரந்தர வெள்ளத் தடுப்புத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக, இந்த வரவு–செலவுத்

திட்டத்தில் ரூபாய் 155 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை மாநகரில் வெள்ளப் பெருக்கினால் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக, ரூபாய் 1,448 கோடி மதிப்பீட்டிலான பெருந்திட்டத்திற்கு, அண்மையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் வரும் நிதியாண்டில் தொடங்கும்.**

25. தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்த, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில்; வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தின் கீழ் காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் திட்டத்திற்கும், தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கும் இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றிற்கான ஆரம்பப்பணிகள் அண்மையில் துவங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு திட்டப் பணிகளுக்கும் வரும் நிதியாண்டில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான நிதியுதவியை விரைவில் வழங்கிடுமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

26. வேளாண் தொழிலுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் இந்த அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில், இந்த வரவு–செலவுத் திட்ட இணைப்புகளில் வேளாண் துறைக்கான ஒதுக்கீடுகளைக் காட்டும் தனி விவர அறிக்கை (எண்.22) தரப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, கால்நடை, பால்வளம் மற்றும் மீனளத் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை போன்ற பல துறைகளில் விவசாய வளர்ச்சிக்காக செய்யப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5,236 கோடி என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### பொது விநியோகத் திட்டம்

27. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை வழங்குவதன் மூலம் விலைவாசி உயர்வின் சுமையை இந்த அரசு பெருமளவு குறைத்துள்ளது. இந்த வகையில்,




ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கிட, நமது நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கியும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அத்தியாவசிய உணவுப் பொருள்களாகிய துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் கோதுமை மாவு ஆகியவற்றையும், 'மலிவு விலையில் மளிகைப் பொருள்' திட்டத்தின் கீழ் 50 ரூபாய்க்கு பத்து மளிகைப் பொருள்களையும் வழங்கி இந்த அரசு சாதனை படைத்துள்ளது. இந்த அரசு எடுத்துள்ள இந்த முன்னோடி நடவடிக்கைகளுக்காக, உணவு மானியமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,800 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தகுதியுள்ளோர் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதோடு, நியாயவிலைக் கடைகளில் சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய ரூபாய் 12 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணு தராசுகளை இந்த அரசு வழங்கியுள்ளது.

### சட்டம் ஒழுங்கு

28. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கிற்கும், மதநல்லிணக்கத்திற்கும் பாதிப்பு ஏற்படாமல் இந்த அரசு தொடர்ந்து விழிப்புணர்வுடன் பணியாற்றி வருகிறது. அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் தீவிரவாதம் ஊடுருவுவதற்கான முயற்சிகள் அனைத்தும் காவல்துறையின் திறன் மிக்க நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டுள்ளன. பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், சட்ட விரோதமாகவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தூண்டும் வகையிலும் பேசுவோர் மற்றும் நாட்டின் இறையாண்மைக்கு எதிராக அறைகூவல் விடுப்போர் மீது இந்த அரசு தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கும்.




29. காவல்துறையினரின் நலன் காக்க, இந்த அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது போலீஸ் கமிஷனின் பரிந்துரைகள் அரசால் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 444 பரிந்துரைகளில், 278 பரிந்துரைகளுக்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரத்தை காவல்துறைத் தலைவருக்கே அளித்தல், காவலர்களுக்கான படிகளை உயர்த்துதல் போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்த அரசு பொறுப்பேற்ற பின் இதுவரை 11,334 காவலர்களும், 741 உதவி ஆய்வாளர்களும் பணியமர்த்தப்படத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 1,346 கோடியாக இருந்த காவல்துறைக்கான ஒதுக்கீடு, வரும் நிதியாண்டில் ரூபாய் 2,855 கோடியாக உயரும்.

### நீதிமன்றங்கள்

30. ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் நமது மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள், 4 ஆண்டு காலத்தில் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இதன்படி ரூபாய் 138 கோடி மதிப்பீட்டிலான கட்டடப் பணிகளுக்கு, இதுவரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை தவிர மேலும் 22 இடங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது. இவை மட்டுமன்றி, கடந்த 3 ஆண்டுகளில் 101 புதிய நீதிமன்றங்கள் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளதோடு, நமது நாட்டிலேயே முன்னோடி முயற்சியாக வழக்குகளை விரைவாகத் தீர்க்க 56 மாலை நீதிமன்றங்கள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக நீதித் துறைக்கு ரூபாய் 378 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### புதிய சட்டசபை வளாகம்

31. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டுகாலச் சட்டமன்றப் பணிப் பொன்விழாவின்போது அறிவித்தவாறு, சென்னை ஓமந்தூரார் அரசினர் வளாகத் தோட்டத்தில் நமது பாரம்பரிய திராவிடக் கட்டடக் கலை சார்ந்த முறையில் வடிவமைக்கப்பட்ட புதிய சட்டமன்ற வளாகத்தை அமைப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறைவுறும். இதற்காக, இந்த வரவு–செலவுத்




திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பள்ளிக் கல்வி

32. கடந்த மூன்று ஆண்டுகளில், பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கியும், காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியும், தேவைப்படும் இடங்களில் புதிய ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தும், பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தியும், அரசுப் பள்ளிகளில் புகட்டப்படும் கல்வியின் தரத்தை உயர்த்திட அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துள்ளது. **வரும் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.** நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் செயல்வழிக் கல்விமுறையைப் பல மாநிலங்களும் பின்பற்றத் துவங்கியுள்ளன.

33. அனைவருக்கும் கல்வித் திட்டத்தைத் தமிழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 2,338 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 336 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டு, 1,577 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2001–2002 ஆம் ஆண்டில் 12 சதவீதமாக இருந்த, தொடக்கக் கல்வியில் இடைநிற்போர் விழுக்காடு 2007–2008 ஆம் ஆண்டில் 1.23 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் 13 சதவீதமாக இருந்த நடுநிலைக் கல்வியில் இடைநிற்போர் விழுக்காடு, 2007–2008 ஆம் ஆண்டில் 1.90 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த ஆட்சியின் முதல் இரண்டாண்டுகளில் 15,788 வகுப்பறைகள் கட்டப்பட்டு, 2008–2009 ஆம் ஆண்டில் மேலும் 9,085 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டம் வரும் நிதியாண்டில் ரூபாய் 820 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதற்கான மாநில அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 328 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மத்திய அரசின் புதிய திட்டமான தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் ரூபாய் 800 கோடி மதிப்பீட்டில் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கல்வியின் தரத்தை முன்னேற்ற இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, அண்மையில் தேசிய அளவில் நடத்தப்பட்டுள்ள ஆய்வில் மொழி, கணக்கு மற்றும் வாசித்துப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் நமது மாநிலப் பள்ளிக் குழந்தைகள் இந்தியாவிலேயே சிறந்து விளங்குவதாக வந்துள்ள செய்தி மனநிறைவு அளிக்கிறது.

34. மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டு முதல், ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் கட்டடங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 14,546 பள்ளிகளில் ரூபாய் 188 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டிலும், ரூபாய் 85 கோடி மதிப்பீட்டில் மேலும் 5,000 பள்ளிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.** மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 421 அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

35. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த 3 ஆண்டுகளில் நமது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேனிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் 3 ஆண்டு காலத்தில் கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சென்ற வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2,200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்க ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

36. தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் சுமார் 11 இலட்சம் மாணவ மாணவியர்க்கு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு கட்டணத்தையும், 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 50 இலட்சம் மாணவ மாணவியர் செலுத்தி வந்த சிறப்புக் கட்டணத்தையும், அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவியர்கள் செலுத்திவந்த சிறப்புக் கட்டணத்தையும் இந்த அரசு ரத்து செய்துள்ளது. **இதன் மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முழுமையான இலவசக் கல்வி அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**37. நமது மாநிலத்தில் உள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குக் கண்பார்வைப் பரிசோதனை செய்து, பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான புதிய திட்டம், தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் மூலம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.**

38. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 58 கோடியும், இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 70 கோடியும் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பேருந்துப் பயணச் சீட்டு வழங்குவதற்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானிய உதவியாக ரூபாய் 300 கோடியும்,

பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 112 கோடியும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 4,110 கோடியாக இருந்த பள்ளிக் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு, 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 9,147 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

39. சாதாரண பொதுமக்கள் மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு அனைத்து நூல்களையும் படிக்கும் வாய்ப்பை அளிக்கும் நோக்கத்தோடு, **சென்னையில் சர்வதேசத் தரத்திலான நவீன மாநில நூலகம்** ஒன்று அமைக்கப்படும் என இந்த அரசு அறிவித்திருந்தது. ரூபாய் 166 கோடி மதிப்பீட்டிலான இந்நூலகத்திற்கு 16.8.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. **இப்பணிகள் 2010 மே திங்களில் நிறைவுறும்.**

**உயர்கல்வி**

40. மாணவர்களுக்கான வகுப்பறைத் தேவையைக் கருத்தில் கொண்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,142 வகுப்பறைகள் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **உயர்கல்வி பயில போதிய வசதிகள் இல்லாத பின்தங்கிய மாவட்டங்களில், மத்திய அரசின் நிதியுதவியுடன் வரும் ஆண்டுகளில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.**

41. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தடையின்றி உயர்கல்வி பெறும் வகையில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், கல்விக் கட்டணத்தை ரத்து செய்ததோடு, அரசுக் கல்லூரிகளில் இருந்த சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்தையும் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றி அமைத்தது. இத்துடன், மாணவர்களுக்குத் தேவையற்ற சுமையாக இருந்த பொது நுழைவுத் தேர்வும் அகற்றப்பட்டு, கிராமப்புர மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தொழிற்கல்வி பெற வகை செய்யப்பட்டுள்ளது.




42. இந்த ஆட்சியில், திருச்சி, கோவை மற்றும் திருநெல்வேலியில் அண்ணா பல்கலைக்கழகங்கள் மூன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளான திண்டிவனம், விழுப்புரம்,




பண்ணுருட்டி, திருக்குவளை, இராமநாதபுரம் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் ஆறு புதிய பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் இல்லாத, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகங்கள் மூலமாகத் தொடங்கப்படும்.** மேலும், தற்போதுள்ள அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, உலக வங்கி நிதியுதவியுடன் தொழிற்கல்வித் தரமேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் செயல்படுத்தப்படும். மொத்தமாக, உயர்கல்வித் துறைக்கான ஒதுக்கீடு 2005–2006 ஆம்




ஆண்டில் இருந்த ரூபாய் 745 கோடியிலிருந்து, வரும் நிதியாண்டில் ரூபாய் 1,463 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**மக்கள் நலவாழ்வு**

43. மனிதநேய மருத்துவ சேவையை மகேசன் சேவையெனக் கருதும் இந்த அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் 4,156 மருத்துவர்களையும், 5,183 செவிலியர்களையும் நியமனம் செய்துள்ளது. மேலும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தலா 3 செவிலியர்களைப் பணியமர்த்தி, இந்த அரசு ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு 24 மணி நேர மருத்துவ சேவை கிடைக்கச் செய்துள்ளது. இதுமட்டுமன்றி, 125 அரசு மருத்துவமனைகள் அவசரகால சிகிச்சை மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளால், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கையானது, 2006 ஆம் ஆண்டில் இருந்த 80,776 என்ற அளவிலிருந்து 2008 ஆம் ஆண்டில் 2,41,078 என உயர்ந்துள்ளது.

44. நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெற உதவும் முன்னோடித் திட்டமான 'வருமுன் காப்போம் திட்டம்' இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு, மாநிலமெங்கும் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த மருத்துவ முகாம்களில் சுமார் 91 இலட்சம் ஏழை எளியோர் பயனடைந்துள்ளனர். **வரும் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 4,500 முகாம்கள் தொடங்கி தொடர்ந்து நடத்தப்படும்.**

45. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் முதல் கட்டத்தில் 35 அரசு மருத்துவமனைகளிலும், இரண்டாம் கட்டத்தில் 224 மருத்துவமனைகளிலும் ரூபாய் 276 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்த மருத்துவமனைகளுக்குத் தேவையான கருவிகள், மருத்துவ ஊர்திகள் ரூபாய் 140 கோடி செலவில் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி, தேவைப்படும் இடங்களில் கூடுதலான சிறப்பு மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 279 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு, ரூபாய் 5 கோடி செலவில் புதிய MRI கருவியும், சென்னை பொது மருத்துவமனைக்கு ரூபாய் 4 கோடி செலவில் புதிய Cath Lab கருவியும் வழங்கப்படும். மொத்தமாக, வரும் நிதியாண்டில் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு கருவிகள் வாங்க ரூபாய் 53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**46. சென்னை மத்திய சிறைச்சாலை புழலுக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னை பொது மருத்துவமனையில்**




**புறநோயாளிகளும், பிற நோயாளிகளும் இடப்பற்றாக்குறையால் இடருறுவதைக் கருத்தில் கொண்டு, சிறைச்சாலை இருந்த இடத்தைச் சென்னை பொது மருத்துவமனையின் விரிவாக்கத்திற்காகப் பயன்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த இடத்தில், ரூபாய் 70 கோடி செலவில் சென்னை பொது மருத்துவமனைப் புறநோயாளிகளுக்கான பெரும் வளாகம் அமைக்கப்படும். இதுதவிர, எஞ்சியுள்ள இடத்தில் மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 400 கோடி மதிப்பீட்டிலான மிகப் பெரிய இரத்த வங்கி ஒன்றும் நிறுவப்படும்.**

**47. தென்மாவட்ட மக்கள் பயனடையும் வகையில், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையினை, புது டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனை போன்ற பல சிறப்புப் பிரிவுகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற இந்த அரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு அண்மையில் இசைவளித்துள்ளது. இதன்படி, தற்போதுள்ள இராஜாஜி மருத்துவமனை மேம்படுத்தப்படுவதோடு, மதுரைக்கு அருகே உள்ள தோப்பூரில் இந்த மருத்துவமனையின் சிறப்புப் பிரிவு வளாகம் அமைக்கப்படும். ரூபாய் 150 கோடி மதிப்பீட்டிலான இப்பணிகளுக்குத் தேவைப்படும் நிலத்தையும், மாநில அரசின் பங்காக ரூபாய் 25 கோடி நிதியையும் இந்த அரசு வழங்கும்.**

**48. தமிழ்நாட்டில் நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இச்சிகிச்சை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஏழை எளியோருக்கும் கிடைக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு அரசு மருத்துவமனையில், இச்சிகிச்சை வழங்கப்படுவதற்கு உறுதி செய்ய, ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் டயாலிசிஸ் கருவிகள் அரசு மருத்துவமனைகளுக்கு அளிக்கப்படும்.**

49. இந்த அரசு பொறுப்பேற்ற பின் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க ஆணையிட்டுள்ளது. இந்த மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 307 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 224 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 1,487 கோடியாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 3,391 கோடியாக உயர்ந்துள்ளது.

### தொழில் துறை

50. தொழில் முனைவோரை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாக, கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய, ரூபாய் 37,595 கோடி முதலீட்டிலான 29 புதிய தொழிற்சாலைகளை நிறுவ தொழில் முனைவோர் முன்வந்துள்ளனர். இவற்றில் 8 தொழிற்சாலைகள் ஏற்கெனவே தமது உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. குறிப்பாக, இந்த குறுகிய




காலத்திலேயே, முக்கியத் தொழில்களான மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தி ஆகியவற்றில் நமது நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது. உலக அளவில் தலைசிறந்து விளங்கும், டெய்ம்லர்–ஹீரோ, அசோக்லேலண்ட்–நிசான், கேட்டர்பில்லர் போன்ற கனரக வாகன உற்பத்தியாளர்களும், டெல்ஃபி, அலிசன், போன்ற வாகன பாகங்கள் உற்பத்தியாளர்களும் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளனர். இவ்வாறே டெல் கம்ப்யூட்டர், மோட்டரோலா, சாம்சங், நோக்கியா–சீமென்ஸ் நெட்வொர்க் போன்ற முன்னணி நிறுவனங்கள் மின்னணு சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன.

51. தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, இம்மாவட்டங்களில் ரூபாய் 50 கோடிக்கு மேல் முதலீடு செய்தாலே, மாநிலத்தின் மற்ற மாவட்டங்களில் ரூபாய் 250 கோடிக்கு மேலான முதலீடுகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை இந்த அரசு வழங்கி வருவதன் விளைவாக; திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் ATC டயர்ஸ் நிறுவனம் டயர் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி வருகிறது. மேலும், இதே இடத்தில் டி.வி.எஸ். ஸ்ரீசக்கரா டயர்ஸ் மற்றும் எல்ஜி டிரெட் போன்ற முன்னணி நிறுவனங்களும், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் கெப்பாரோ இன்ஜினியரிங் மற்றும்

ஃப்பென்னர் இந்தியா நிறுவனங்களும் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன.

52. தொழில்களைத் தொடங்க தொழில் முனைவோரை ஊக்குவிப்பதோடு, இத்தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேம்படுத்தும். **மாநிலத்தில் உள்ள தொழிற்பேட்டைகளுக்குச் செல்லும் அணுகு சாலைகள் ரூபாய் 10 கோடி செலவில் மேம்படுத்தப்படும். தொழிலாளர்கள் அதிகம் உள்ள இடங்களான திருப்பெரும்புதூரிலும், திருப்பூரிலும், தலா 1,000 தொழிலாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் கூடிய தங்குமிடங்கள் (Dormitories) அமைக்கப்படும்.**

**53. சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்காக ஒரு ஏக்கருக்கு கூடுதலான நிலம் அளித்த குடும்பங்களில், குறைந்தபட்சம் ஒருவருக்காவது, அப்பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட இந்த அரசு உறுதியாக ஆவன செய்யும். இதற்காக தொழிற்பூங்காக்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை அமைத்து, அத்தகைய குடும்பங்களில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பணிகளை சிப்காட் நிறுவனம் மேற்கொள்ளும்.**




54. சிறப்பாக இயங்கிவரும் பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு காகிதத் தொழிற்சாலை நிறுவனம் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நிறைவுறும்போது, இத்தொழிற்சாலையின் காகித உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2.55 இலட்சம் டன் என்பதிலிருந்து, 4 இலட்சம் டன்னாக உயரும்.

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

55. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்கப்படுத்த, நமது நாட்டிலேயே முதல் முறையாக இத்தொழில்களுக்கான தனிக் கொள்கை ஒன்றை இந்த அரசு வெளியிட்டுள்ளது. இக்கொள்கையின்படி மாநிலத்தில் உள்ள பின்தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு வழங்கப்படவுள்ள மூலதன மானியத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், குறு தொழில்களுக்கு மதிப்புக் கூட்டுவரியைத் திருப்பி அளிக்கும் சலுகைக்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்பம்

56. தகவல் தொழில்நுட்பத் துறையில் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், இந்த வளர்ச்சியின் பயன்களை நமது மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் வசிப்போருக்கும் கிடைக்கச் செய்யவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குப் பல்வேறு சலுகைகளுடன் கூடிய புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. **கோயம்புத்தூரில் ரூபாய் 380 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கானப் பணிகள் வரும் செப்டம்பர் திங்களில்**



**நிறைவுறும்**. மேலும், மதுரை திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் வேலூர் நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளினால், 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 13,615 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 28,490 கோடியாக உயர்ந்துள்ளது.

57. அரசின் பல்வேறு துறைகளின் அடிப்படைத் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை ஒருங்கே சேமித்து, இத்தகவல்கள் மற்றும் ஏனைய சேவைகளை இணையம் மூலம் அளிக்க ஏதுவாக மாநில தகவல் மையம் (State Data Centre) ரூபாய் 56 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல் முதலாக, முழு மாநில இணைய வலை அமைப்பு (State Wide Area Network) ஏற்படுத்திய பெருமையும் தமிழகத்தையே சாரும். இந்த இணைய வலை அமைப்பின் கீழ், மாவட்ட, வருவாய்க் கோட்ட, வட்ட மற்றும் வட்டாரத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைநகருடன் இணைக்கப்பட்டுள்ளன.

58. இந்த அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றின்படி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் நான்கு கட்டங்களில் 1 கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, அவை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. **வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத மீதமுள்ள குடும்பங்களுக்கும் சுமார் 25,00,000 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை வழங்கிட, வரும் நிதியாண்டில் ரூபாய் 500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### சாலை மேம்பாடு

59. மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் நல்ல சாலை வசதி இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, கடந்த 3 ஆண்டுகளில் சாலைகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும் போதிய நிதி ஒதுக்கீடு செய்து இந்த அரசு பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2001–2006 ஆம் ஆண்டுக் காலத்தில், 5 ஆண்டுகளில் ரூபாய் 4,328 கோடி மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூபாய் 1,534 கோடி செலவில் சாலைப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஒப்பிடும்போது, கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே சாலை மேம்பாட்டிற்கு ரூபாய் 6,617 கோடி அளவிலும், சாலை பராமரிப்பிற்கு ரூபாய் 2,503 கோடி அளவிலும் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

60. இந்த அரசு பொறுப்பேற்ற பின் இதுவரை 45,943 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 4,730 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித் தடங்களாக அகலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 551 சிறு மற்றும் பெரிய பாலங்கள் ரூபாய் 577 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. **2009–2010 ஆம் நிதியாண்டில் சாலை மேம்பாடு மற்றும் பாலப்பணிகளுக்கான மூலதனச் செலவிற்காக ரூபாய் 3,087 கோடியும், சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக ரூபாய் 880 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 12,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படுவதோடு, சுமார் 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித்தடங்களாக மாற்றப்படும். மேலும், 194 பெரிய மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்படும்.**

61. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த ஆட்சிக் காலங்களின் போது, சென்னையில் அண்ணா மேம்பாலம், நெல்லையில் ஈரடுக்கு மேம்பாலம்,




கோவையில் மூன்றடுக்கு மேம்பாலம், காவிரியின் குறுக்கே திருமானூர் மற்றும் குளித்தலையில் பாலங்கள் என பல பெரும்பாலங்கள் கட்டப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். **இதுபோன்றே, கடந்த மூன்று ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத அளவில்**

**ரூபாய் 1,730 கோடி மதிப்பீட்டில் பல்வேறு இரயில்வே மேம்பாலங்களை கட்ட இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணிகளுக்காக ரூபாய் 400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

62. உலகவங்கி உதவியுடன் ரூபாய் 2,442 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள், புறவழிச் சாலைகள் அமைத்தல் மற்றும் சாலை பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இத்திட்டத்தின் இரு முக்கியக் கூறுகளான, ஆற்காடு–திருவண்ணாமலை–விருத்தாச்சலம்–திருவாரூர் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், நாகப்பட்டினம்–இராமநாதபுரம்–தூத்துக்குடி சாலை ஆகியவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் வரும் நிதியாண்டில் நிறைவடையும். கிழக்குக் கடற்கரைச் சாலையில் எஞ்சியுள்ள பகுதியான, 120 கிலோமீட்டர் நீளமுள்ள தூத்துக்குடி–கன்னியாகுமரி சாலையையும் ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்படும். இப்பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.**

63. **சென்னைப் புறநகர்ப் பகுதிகளின் வளர்ச்சியையும், அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு, முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளான சென்னை–திருச்சி நெடுஞ்சாலை, சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலை மற்றும் சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலை ஆகியவற்றை இணைக்கும் வெளி வட்டச் சாலை (Outer Ring Road) ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ரூபாய் 858 கோடி மதிப்பீட்டில், வண்டலூர்–நசரத்பேட்டை–நெமிலிச்சேரி இடையிலான 30 கிலோமீட்டர் நீளச் சாலையை அமைப்பதற்கான பணிகள் வரும் நிதியாண்டிலேயே தொடங்கப்படும். இதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### மின்சாரம்

64. மாநிலத்தின் மின்தேவை கணிசமான அளவு உயர்ந்துள்ளதையும், எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க உள்ளதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் கூடுதல் மின் உற்பத்தித் திறனை நிறுவுவதற்கான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மேட்டூரில் 600 மெகாவாட் மற்றும் வடசென்னையில் 1200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட நிலையங்களை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் (BHEL) இணைந்து, தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். வரும் நிதியாண்டில், கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் ஆகியன செயல்படத் தொடங்க இருப்பதால், தமிழகத்தின் மின் உற்பத்தித் திறன் 11,533 மெகாவாட்டாக உயரும்.

65. சென்னையில் உள்ள மின் நுகர்வோர் தாங்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை இணைய தளத்தின் மூலம் செலுத்தும் வசதி இந்த நிதியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கும் இந்த வசதியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜீவ் காந்தி ஊரக மின்மயமாக்கல் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் ரூபாய் 447 கோடி செலவில் 11,284 மின் மாற்றிகள் மற்றும் 45,911 கிலோ மீட்டர் நீளமுள்ள மின் பாதைகள் ஆகியன புதிதாக அமைக்கப்பட்டு, சுமார் ஐந்தரை இலட்சம் ஊரகக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும்.** குடிசைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கான இலவச மின் இணைப்புகள், வீடுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சலுகைக் கட்டண இணைப்புகள் ஆகியவற்றுக்கான மானியமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,251 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### போக்குவரத்து

66. இந்த அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இதுவரை 9,248 புதிய பேருந்துகளை வாங்கி இயக்கி



3.500 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.

வருகின்றன. இவற்றை வாங்குவதற்கு அரசு நிதியுதவியாக ரூபாய் 729 கோடி இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. **மாநில அரசின் நிதியுதவி மற்றும் ஜவஹர்லால் நேரு நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியுதவி ஆகியவற்றின் மூலமாக, வரும் நிதியாண்டில் மேலும் 3,500 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.** இதற்கான அரசு நிதியுதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாகம்

67. மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில், நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களின் விழுக்காடு நாட்டிலேயே மிகவும் அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும். இதைக் கருத்தில் கொண்டு நகர்ப்புரப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து செயல்படுத்தும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை ரூபாய் 8,364 கோடி மதிப்பீட்டிலான 223 திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1,374 கோடி மதிப்பீட்டில் 98 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

68. நகர்ப்புரப் பகுதிகளுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்குப் போதிய நிதியாதாரம் கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையிடமிருந்து ரூபாய் 345 கோடி நிதியுதவியும், ஜெர்மனி நாட்டு கே.எப்.டபிள்யு. நிறுவனத்திடமிருந்து ரூபாய் 500 கோடி நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது. இந்த நிதியுதவிகளின் மூலமாக இதுவரை ரூபாய் 732 கோடி மதிப்பீட்டிலான 11 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இதற்காக ரூபாய் 170 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

69. மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதென்ற இந்த அரசின் முடிவின்படி, முதற்கட்டமாக தற்போது ஆறு மாவட்டத் தலைநகரங்களில் இப்பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள மாவட்டத் தலைநகரங்களில் இப்பணிகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக முக்கிய நகராட்சிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. **இதன்கீழ், வரும் நிதியாண்டில் காரைக்குடி, சாத்தூர், மன்னார்குடி, பொள்ளாச்சி, கொடைக்கானல், பெரியகுளம், பழனி, கீழக்கரை, சிவகாசி மற்றும் மேலூர் ஆகிய நகராட்சிகளில் ரூபாய் 408 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

70. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இதுவரை 280 பேரூராட்சிகளில் ரூபாய் 140 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் **இத்திட்டத்தின் கீழ், மேலும் 140 பேரூராட்சிகளில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படும்.**

### மெட்ரோ இரயில் திட்டம்

71. **இந்த அரசின் அயராத முயற்சியின் காரணமாக, பிற இந்திய நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவைப்பட்ட காலஅளவைவிட, மிகக் குறைந்த கால அளவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்தும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு இணையத்திடமிருந்தும் திட்ட ஒப்புதல் மற்றும் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டம், 'சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்' என்ற பொதுத்துறை நிறுவனம் மூலமாகவே செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடாகிய ரூபாய் 14,600 கோடியில், மாநில அரசின் பங்கு ரூபாய் 11,680 கோடியாகவும், மத்திய அரசின் பங்கு**




**ரூபாய் 2,920 கோடியாகவும் இருக்கும். மாநில அரசின் பங்கில், ரூபாய் 8,646 கோடி ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு இணையத்திடமிருந்து பெறப்படும் கடன்**

தொகையும், ரூபாய் 3,034 கோடி தமிழக அரசின் நிதியுமாகச் செலவிடப்படும். **இதற்கான மாநில அரசின் பங்கில், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

72. மெட்ரோ இரயில் **திட்டத்தின் முதல் பணியாக, கோயம்பேட்டிலிருந்து அசோக்நகர் வரை உயர்த்தப்பட்ட இருப்புப் பாதை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், ஆளுநர் உரையில் அறிவித்தவாறே இத்திட்டத்தில் திருவொற்றியூர் இணைக்கப்படுவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு, விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.**

குடிநீர் வழங்கல்

73. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு 2008–2009 ஆம் ஆண்டில், 10,255 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை 6,092 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பணிகள் இந்த நிதியாண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். **வரும் நிதியாண்டில் மேலும் 8,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு, ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் குடிநீர்வசதி அளிக்கப்படும்.** நடப்பு நிதியாண்டில், 30 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் 45 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பணிகள் நிறைவடையும். **வரும் நிதியாண்டில், மேலும் 30 கூட்டுக் குடிநீர் திட்டங்களும், 50 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.**

74. ரூபாய் 1,330 கோடி மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏற்கெனவே அறிவித்தவாறு குறித்த காலத்தில் நிறைவுறும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு பெறும்.** மொத்தமாக, குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக முன் எப்போதும் இல்லாத அளவில், ரூபாய் 1,064 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதி

75. இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், கட்டப்படும் வீடுகளின் மதிப்பீட்டை ரூபாய் 25,000 லிருந்து ரூபாய் 35,000 ஆக மத்திய அரசு கடந்த ஆண்டு உயர்த்தியது. இந்த மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்கு 26,250 ரூபாய் ஆகும். மாநில அரசின் பங்கான 8,750 ரூபாய் மட்டுமல்லாது, கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழக அரசால் வழங்கப்படும் கூடுதல் உதவியையும், இந்த அரசு ரூபாய் 12,000 லிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தி வழங்கியதையொட்டி; இத்திட்டத்தில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கு மத்திய




அரசின் பங்கு ரூபாய் 26,250 ஆகவும், மாநில அரசின் பங்கு ரூபாய் 28,750 ஆகவும் உள்ளது. இந்த ஆண்டு தலா ரூபாய் 55,000 மதிப்பீட்டில் 70,000 வீடுகள் ஊரகப் பகுதிகளில் கட்டி அமைக்கப்பட்டு வருகின்றன. **ஏழை எளிய சாமானிய மக்களுக்கு நிரந்தர வீடுகள் அதிக எண்ணிக்கையில் அமைத்துத் தரும் நோக்கத்தோடு, வரும் நிதியாண்டில் முன் எப்போதும் இல்லாத அளவில் ஊரகப் பகுதிகளில் 1,35,000 கான்கிரீட் வீடுகள் ரூபாய் 742 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். மனித நேயம்மிக்க இந்த மாபெரும் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு ரூபாய் 354 கோடியாகும். மாநில அரசின் பங்காக ரூபாய் 390 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

76. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், 1,05,373 கான்கிரீட் வீடுகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் நகர்ப்புரப் பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும்**

**குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 441 கோடி மதிப்பீட்டில் மேலும் 21,000 புதிய குடியிருப்புகள் நகர்ப்புரப் பகுதிகளில் அமைக்கப்படும்.**

**ஊரக வளர்ச்சி**

77. அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும், மாநிலத்தின் வளர்ச்சியிலும் உள்ளாட்சி அமைப்புகள் உரிய பங்காற்றும் வகையில் அவற்றிற்கு கூடுதல் பொறுப்புகளையும், தேவையான அதிகாரங்களையும் வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்து ஆய்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

78. இந்த அரசின் ஒப்புயர்வற்ற சாதனைத் திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 1,524 கோடி செலவில் 7,585 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. **இத்திட்டத்திற்காக 2009–2010 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 509 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக, வரும் நிதியாண்டில் மேலும் 2,511 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

79. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகளும் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் கீழ், இதுவரை ரூபாய் 884 கோடி மதிப்பீட்டில் 5,000 கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. **வரும் நிதியாண்டில், மேலும் 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள சாலைகள் ரூபாய் 401 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 350 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**80.** தேவையான வளர்ச்சிப் பணிகளை மக்களே தேர்ந்தெடுத்து, அவர்களின் பங்களிப்போடு பணிகளைச் செயல்படுத்த வழிவகுக்கும் 'நமக்கு நாமே திட்டம்', இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,333 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான அரசின் பங்களிப்பாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**81.** தந்தை பெரியார் அவர்களின் சமத்துவக் கொள்கையைப் பரப்பும் வகையில், அவரது திருவுருவச் சிலையுடன் கூடிய 95 சமத்துவபுரங்கள் 3 ஆண்டு காலத்தில் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவித்ததற்கேற்ப,




29 சமத்துவபுரங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் மேலும் 29 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**82.** திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு – மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைத் திட்டமான, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதில் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரிவோருக்குக் குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு நமது மாநிலத்தில் உடனடியாக ஊதியம் வழங்கப்பட்டு வரும் முறை குறித்து அனைவரும் பாராட்டியுள்ளனர். இந்த வகையில், தேசிய அளவில் சிறந்த செயல்பாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 22 மாவட்டங்களில், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் கடலூர் ஆகிய தமிழகத்தின் மூன்று மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன என்பது மனநிறைவளிக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில்

உள்ள ஆதிதிராவிடர்களுக்கும் ஏழைப் பெண்களுக்கும் பெரிதும் பயனளித்துள்ள இத்திட்டத்தின் கீழ், இதுவரை ரூபாய் 1,412 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் ரூபாய் 1,750 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

83. **மூன்றாவது மாநிலக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று இந்த அரசு அறிவித்ததற்கேற்ப, மாநில அரசின் சொந்த வரி வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பங்கீடு, தற்போதுள்ள 9 சதவீதத்திலிருந்து வரும் நிதியாண்டில் 9.5 சதவீதமாக உயர்த்தப்படும். இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரும் நிதியாண்டில் கூடுதலாக ரூபாய் 187 கோடி கிடைக்கும்.** நிதிப்பங்கீடு (Devolution) நேரடியாக மாற்றப்படும் வருவாய் (Assigned Revenue) மற்றும் திட்டங்களுக்கான நிதியுதவி (Assistance for Scheme) ஆகியவற்றின் கீழ் நடப்பு நிதியாண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூபாய் 6,241 கோடி வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இது ரூபாய் 6,928 கோடியாக உயர்த்தப்படும். இது தவிர தொடக்கக் கல்வி, குடிநீர் வழங்குதல், பொதுச் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் சார்பாக அரசே மேற்கொள்வதற்கான செலவினங்களையும் சேர்த்து, இந்த அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நேரடி நிதியுதவி மற்றும் அவை மேற்கொள்ளவேண்டிய பணிகளுக்காக, மாநில அரசு செலவிடும் மொத்தத் தொகை, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் சுமார் 31 சதவீதமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

### வருவாய் நிருவாகம்

84. **நீண்டகாலமாக நடைமுறையில் இருந்துவரும் தற்போதைய நிலவரி வசூல் முறையில், நிலவரியோடு சேர்த்து தலவரி, தலமேல்வரி, தண்ணீர் தீர்வை போன்றவையும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்த வரிகள் அனைத்தும் சேர்ந்து விவசாயிகளுக்கு நில உடைமைக்குச் சான்றாக விளங்கத்தக்க வகையில் 'நிலவரி' என்ற பெயரால் இனி பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும். சிக்கலான தற்போதைய முறையை எளிமைப்படுத்தி, வரும் பசலி ஆண்டிலிருந்து, புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் 15 ரூபாய் தொகையை, இனி ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு சாராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் ரூபாய் 50 என்பதை இனி ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்கப்படும். தலவரி, தலமேல்வரி என்று இனி எந்த வரியும் விவசாயிகளின் தலையில் சுமத்தப்பட மாட்டாது. இதனால் 50 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்.**

85. இந்த அரசு ஏற்கெனவே அறிவித்தவாறு ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில், வருவாய்த் துறைக்குத் தேவையான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக வரும் நிதியாண்டில் ரூபாய் 34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, வருவாய்த் துறைக்கான நிதி ஒதுக்கீடு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,416 கோடியாக உயர்ந்துள்ளது.

### மகளிர் நலன்

86. கருவுற்றிருக்கும் பெண்களுக்கு சத்தான உணவு கிடைக்கச்செய்ய அவர்களுக்கு மகப்பேறுகால உதவியாக ரூபாய் 6,000 வழங்கிடும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. முதலில் இருந்த விதிமுறைகளின்படி குடும்ப வருமானச் சான்றிதழ் பெறுவதற்கு கர்ப்பிணிப் பெண்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, வருமானச் சான்றிதழின்றி கிராம மருத்துவச் செவிலியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அவர்கள் மகப்பேறு உதவி பெறவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 10 இலட்சம் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர். **வரும் நிதியாண்டில் மேலும் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தாய்மார்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்கு ரூபாய் 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

87. இந்த அரசு பொறுப்பேற்ற பின், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தியதோடு, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 10,000 லிருந்து ரூபாய் 20,000 ஆக, இருமடங்காக உயர்த்தி வழங்கி வருகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வரும் இத்திட்டத்தின் கீழ், இதுவரை இரண்டு இலட்சம் ஏழைப் பெண்கள் பயன்பெற்றுள்ளனர். **வரும் நிதியாண்டில் மேலும் 75,000 ஏழைப் பெண்கள் பயன்பெறும் வண்ணம், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

88. ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு உதவும் வகையில், சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவச எரிவாயு




அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடங்கிச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 10,84,866 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகளும், இலவச எரிவாயு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டிலும் மேலும் 6 இலட்சம் எரிவாயு அடுப்புகள் மற்றும் இணைப்புகள் வழங்க, ரூபாய் 140 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

89. 1989 ஆம் ஆண்டு இந்த அரசால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், இன்று ஆல் போல் தழைத்து மாநிலமெங்கும் 62 இலட்சம் உறுப்பினர்கள் உள்ள 3,91,000 சுயஉதவிக் குழுக்களைக் கொண்ட மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது.




இவற்றில் 2,74,000 குழுக்கள் கிராமப்புர பகுதிகளிலும், 1,17,000 குழுக்கள் நகர்ப்புரப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. இக்குழுக்களை ஊக்கப்படுத்தும் வகையில், முதல் முறையாக நகர்ப்புரங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதோடு, ரூபாய் 150 கோடி செலவில் தகுதியுடைய அனைத்து சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பல பெண்கள் இன்னும் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைய இயலாதிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. **வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுயஉதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமெனில், சுமார் ஒரு இலட்சம் புதிய சுயஉதவிக் குழுக்கள் நமது மாநிலத்தில் அமைக்கப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை வரும் இரண்டு ஆண்டுகளில் எய்தும் வகையில், 2009–2010 ஆம் ஆண்டில் 50 ஆயிரம் புதிய சுயஉதவிக் குழுக்களும், 2010–2011 ஆம் ஆண்டில் மேலும் 50 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களும் அமைக்கப்படும். இப்பணி நிறைவடைந்த பின், நமது நாட்டிலேயே வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து மகளிரையும் சுயஉதவிக் குழு இயக்கத்தில் உறுப்பினர்களாக இடம்பெறச் செய்த முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும்.**

90. ஊராட்சி அளவிலான இணையங்களில் உறுப்பினர்களாக உள்ள சுயஉதவிக் குழுக்கள், எளிதில் வங்கிக் கடன் பெற்று நல்ல பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதற்காக, இத்தகைய இணையங்களை அமைத்து அவற்றிற்குத் தேவையான உதவிகளையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக அளித்து வருகிறது. **இந்த இணையங்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் 1,000 ஊராட்சி அளவிலான இணையங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

91. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆக உயர்த்தியது. இத்துடன் மத்திய அரசு உதவியுடன், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் உதவித்

தொகை வழங்கும் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதியத் திட்டத்தையும் மத்திய அரசுடன் இணைந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களினால் 7,39,541 முதியோரும், 7,90,041 ஆதரவற்றோரும் பயனடைந்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளில் இந்த அரசு வழங்கியுள்ள இத்தகைய சலுகைகளினால், முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கான ஒய்வூதியச் செலவினம் 2005–2006 ஆம் ஆண்டு ரூபாய் 303 கோடியிலிருந்து, 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 911 கோடியாக உயர்ந்துள்ளது.

92. **வயது முதிர்ந்தோருக்குத் தேவையான தனி சிகிச்சைகளை அளிக்கவும், அவை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வசதிவாய்ப்புகள் கொண்ட தேசிய வயது முதிர்வு ஆராய்ச்சி மையம், மத்திய அரசின் நிதியுதவியுடன், சென்னையில் உள்ள கலைஞர் கருணாநிதி நகரில் ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

### ஊனமுற்றோர் நலன்

93. ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசு தனி நலவாரியம் ஒன்றை அமைத்து, சட்டம் இயற்றி அனைத்து நல உதவிகளும் தொடர்ந்து வழங்கப்பட ஆவன செய்துள்ளது. ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கும் உதவித் தொகை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 500 ஆகவும் உயர்த்தப்பட்டு, 10,000 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இது தவிர, தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கும் மாதாந்திர உதவித் தொகையாக ரூபாய் 500 வழங்கப்பட்டு வருகிறது. **ஊனமுற்றோர் சுயதொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு வரும் நிதியாண்டில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும்.** ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் பல்வேறு உதவித் தொகைகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




### மனவளர்ச்சி குன்றியோர் நலன்

94. தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளக் கூட இயலாத மனவளர்ச்சி குன்றியோருக்கு, எண்ணிக்கை வரையறை மற்றும் வருமான உச்ச வரம்பின்றி மாதாந்திர உதவித் தொகை வழங்கிட ஆணையிடப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 20,000 மனவளர்ச்சி குன்றியோர், பராமரிப்பு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூபாய் 500 பெற்று வருகின்றனர். இவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே பயிற்சி அளிப்பதற்கும், சிறப்புப் பள்ளிகள் மூலம் அடிப்படைக் கல்வி புகட்டுவதற்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

### அரவாணிகள் நலன்

95. திருநங்கையர் எனப்படும் அரவாணிகளின் துயர் துடைக்க அவர்களுக்கென தனி நலவாரியம் அமைத்தும், குடும்ப அட்டைகள் வழங்கியும், வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தும் இந்த அரசு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இது மட்டுமன்றி, அவர்கள் தனியாகவோ அல்லது இணைந்து சுய உதவிக் குழுக்களாகவோ தொழில் துவக்குவதற்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. **வீட்டுவசதியின்றி இருக்கும் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில், வரும் நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும்.**

### நெசவாளர் நலன்

96. கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஏழை எளியோருக்குப் பொங்கல் திருநாளையொட்டி, இலவச வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 256 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு தனி நலவாரியம் அமைக்கப் பட்டுள்ளதோடு, முதுமையடைந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியத் தொகையும் ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

97. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் இந்த அரசின் திட்டம் தொய்வின்றித் தொடரும். இது தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் வட்டி மானியம் மீண்டும் வழங்கப்பட்டு, வட்டி வீதம் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்காக ரூபாய் 90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீனவர் நலன்**

98. மீனவர்களின் நலனில் இந்த அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. மீன் பிடிக்கச் செல்லும்போது காணாமல் போகும் மீனவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தையும், கடலில் மீன் பிடிக்கச்செல்ல தடை உள்ள காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்காகவும், பருவமழைக் காலங்களில் வழங்கப்படும் நிவாரண உதவிக்காகவும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

99. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 37,947 மிதிவண்டிகளும், 1,20,306 உயிர் காக்கும் கவசங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு ரூபாய் 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. **மேலும், கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டினத்தில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்.**

**கைவினைஞர் நலன்**

100.கைவினைஞர்களுக்கென தனி நலவாரியம் ஒன்றை அமைத்து, அவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறோம். **அவர்களுக்கு கலைப் பொருட்களை வடிவமைக்கத் தேவையான தரமான மூலப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய, சுவாமிமலையில் மூலப்பொருள் வங்கி ஒன்று அமைக்கப்படும்.**

**சிறு வணிகர் நலன்**

101. சிறு வணிகர்களுக்குக் கடன் அட்டைகள் வழங்கி, அவர்களை சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக அவர்கள் கடன் பெற்றிட இந்த அரசு ஆவன செய்துள்ளது.




**பாதையோர வணிகர்கள், பொருட்களைக் கூடைகளில் சுமந்தோ அல்லது வண்டிகளில் வைத்தோ விற்போர், வெற்றிலை பாக்கு கடை வைத்திருப்போர் போன்ற சிறு வணிகர்களுக்கென, தனி நலவாரியம் ஒன்றை அமைத்து இந்த அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கும்.**

**பத்திரிகையாளர் நலன்**

102.பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தையும், அவர்களது குடும்பத்தினர் பெறும் குடும்ப ஓய்வூதியத்தையும் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், ஒரு கோடி நிதி வழங்கி, பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கடும் நோய்வாய்ப்படும் பத்திரிகையாளர்களின் மருத்துவச் சிகிச்சைக்கு நிதியுதவி அளிக்கப்படவும் இந்த அரசு ஆவன செய்துள்ளது. பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் சேலத்தில் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களின் மற்ற கோரிக்கைகளை ஆய்வு செய்து ஆவன செய்யப்படும்.

**அமைப்புசாராத் தொழிலாளர் நலன்**

103.1996–2001 ஆம் ஆண்டு காலத்தில் இந்த அரசால் அமைக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்ட நல வாரியங்களை மீண்டும் அமைத்து, 39 இலட்சம் உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல துறையின் மூலமாக இயங்கும் இந்த வாரியங்கள் வாயிலாக இதுவரை ரூபாய் 105 கோடி அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான அரசு உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பனைத் தொழிலாளர் நலன்

104.பனைத் தொழில் செய்வோருக்குத் தேவைப்படும் தொழிற் கருவிகள் வாங்க நிதியுதவி அளித்தும் அவர்களுக்கெனத் தனி நலவாரியம் ஒன்றை அமைத்தும் இந்த அரசு உதவியுள்ளது. வரும் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் உள்ள பதநீர் விற்பனை நிலையத்திற்கு, பதநீர் குளிர்பதன இயந்திரம் வழங்கப்படும்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

105.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பெற்று, உரிய வேலைவாய்ப்புகளை அடைந்தால் மட்டுமே அவர்களின் வாழ்க்கைத் தரமும், சமூகப் பொருளாதார நிலையும் உயரும். இதைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக மாநில அரசின் சிறப்பு நிதி உதவியாக ஆண்டுதோறும் ரூபாய் 25 கோடி ஒதுக்கி, இந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு பட்ட மேற்படிப்புத் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான சிறப்புப் பயிற்சிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன. வரும் 2009–2010 ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

106.மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருவாய் உச்சவரம்பு ரூபாய் 50,000 லிருந்து ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தப்பட்டு, நடப்பு நிதியாண்டில் மூன்று இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூபாய் 177 கோடி வழங்கப்பட்டுள்ளது. **தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 25 மாணவரில்லங்களுக்கு ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.**

107.ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம், ரூபாய் 111 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 61 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தூய்மைப் பணிபுரிவோர் நலன்

108.ஆதிதிராவிடர்களுள் மிக மிகப் பின்தங்கியுள்ள அருந்ததியர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அவசியம் என்ற அடிப்படையில், தற்போது ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஆராய நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம் அவர்களை கொண்ட ஒரு நபர் குழுவை அமைத்து, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 3 சதவீத உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. **இதற்கான சட்டமுன்வடிவு இந்த வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.**

109.தூய்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் நலன் கருதி அவர்களுக்கென தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு, மனிதக் கழிவை அகற்றித் தூய்மைப்படுத்தும் பணிகளில் முன்னர் ஈடுபட்டிருந்தோருக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபட உதவுவதற்காக ரூபாய் 22 கோடி மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டமும் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இப்பணியாளர்கள் கழிவுநீர்க் குழாய்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்க, சென்னை மாநகராட்சியிலும், மற்ற 9 நகராட்சிகளிலும் பயன்படுத்துவதற்கு ரூபாய் 6.3 கோடி மதிப்பீட்டில் அடைப்புகளை அகற்றும் இயந்திரங்கள் வரும் நிதியாண்டில் வாங்கப்படும்.**

110. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக, மாநில அரசின் திட்டப்பணிகளில் பிரித்தளிக்கக் கூடியவற்றில், ஆதிதிராவிடர் துணைக்கூறுத் திட்டத்திற்கென (Scheduled Caste Sub Plan) தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 567 கோடியாக இருந்த இந்த ஒதுக்கீடு, வரும் 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2,615 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

111. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான, பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பை ரூபாய் 50,000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக இந்த அரசு உயர்த்தியது. இந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பள்ளி

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுப் படியை ரூபாய் 450 ஆகவும், கல்லூரி விடுதிகளில் உள்ளவர்களுக்கு ரூபாய் 550 ஆகவும் இந்த அரசு சென்ற ஆண்டு உயர்த்தி வழங்கியது. இதனால், 66,652 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். **ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இந்த மாணவர்களுக்கு உதவும் வகையில், தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 25 மாணவரில்லங்களுக்கு, ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.**

112. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இளைஞர்கள் தகுந்த வேலைவாய்ப்புகளைப் பெற அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் மேலும் 10,000 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மொத்தமாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 435 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினர் நலன்

113. சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கியதோடு, சிறுபான்மையினர் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்துவதற்காக, சிறுபான்மையினருக்கான தனி இயக்குநரகம் ஒன்றையும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மையின இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சுமார் 8,000 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 10,000 சிறுபான்மையினருக்கு ரூபாய் 30 கோடி கடனுதவி வழங்கப்படும். மேலும், மாநிலத்தில் உள்ள பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் மதரஸாக்களில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கென, 'உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம்' ஒன்று அமைக்கப்படும்.**

**" புதிதாக 1,539 குழந்தைகள் மையங்களும், 3,168 குழந்தைகள் குறு மையங்களும் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிகளிலும் குழந்தைகள் மையங்களிலும் உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு முட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் 73 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். "**

### குழந்தைகள் நலன்

114. தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு உண்ணும் 73 இலட்சம் குழந்தைகளுக்கு, வாரம் 3 முறை முட்டையும், முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழமும், இந்த அரசு வழங்கி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக, குழந்தைகளும், உணவு சமைக்கும் பணியாளர்களும் புகையால் பாதிக்கப்படாமல் இருக்க சமையல் அறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1,850 சத்துணவு மையங்கள், 5,940 குழந்தைகள் மையங்களுக்கு ரூபாய் 805 இலட்சம் செலவில் எரிவாயு அடுப்பு, பிரஷர்குக்கர் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் 224 இலட்சம் செலவில், மேலும் 350 சத்துணவு மையங்களுக்கும், 2,000 குழந்தைகள் மையங்களுக்கும் இவை வழங்கப்படும்.** மொத்தமாக சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 830 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

115. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவை அளித்துவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பயன்களை, மேலும் அதிக எண்ணிக்கையிலானோர் பெறும் வகையில், புதிதாக 1,539 குழந்தைகள் மையங்களும், 3,168 குழந்தைகள் குறு மையங்களும் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிகளிலும் குழந்தைகள் மையங்களிலும் உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு முட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் 73 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 176 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் வளர்ச்சி

116. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களும், தமிழ்மொழியைக் கற்பதை உறுதி செய்திடவும், தமிழ்மொழி செம்மொழி என்பதை மத்திய அரசு அறிவிக்கச் செய்யவும், தமிழ்ச் செம்மொழி ஆய்வுக்கான மத்திய நிறுவனத்தைச் சென்னையில் அமைத்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்திட்ட அயராத முயற்சிகள் வெற்றியடைந்திருப்பது நம் அனைவருக்கும் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. தமிழ் மொழியை மத்திய அரசில் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக




அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கு மொழியாக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும்.

117. தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழர் மேன்மைக்கும் பாடுபட்டுள்ள தூய தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும், சிந்தனைகளும் இன்று வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி வரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்க வேண்டும் என்னும் விழைவோடு, தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் இதுவரை 95 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இவர்களில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டும் 87 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை யாக்கியுள்ளது. 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின், பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், இலக்குவனார், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, வ.சுப.மாணிக்கம் முதலான 65 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகையாக 4 கோடியே 86 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. **அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா, கவியரசு கண்ணதாசன், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், மு.இராகவையங்கார், பம்மல் சம்பந்தனார், அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.சு.பூரணலிங்கம் பிள்ளை, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், பாலூர் கண்ணப்ப முதலியார், இராய.சொக்கலிங்கனார், டாக்டர் மு.வரதராசனார், முனைவர் ச.அகத்தியலிங்கம், பாவலர் நாரா.நாச்சியப்பன், புலியூர்க் கேசிகன், எழுத்தாளர் சாண்டில்யன், எழுத்தாளர் வை.மு.கோதைநாயகி, சின்ன அண்ணாமலை, பூவை. எஸ்.ஆறுமுகம், என்.வி.கலைமணி, கவிஞர் முருகு சுந்தரம், புலவர் த.கோவேந்தன், எழுத்தாளர் சுந்தர ராமசாமி, திருக்குறள்மணி அ.க.நவநீத கிருட்டிணன், இலட்சுமி, வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜமதக்னி மற்றும் ஜெ.ஆர்.ரங்கராஜு ஆகிய 28 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.**

## சுற்றுலா

118. தமிழகத்தில் உள்ள பல முக்கிய சுற்றுலாத் தலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவரங்கம், ஏலகிரி,



இராமேஸ்வரம், சப்தவிடங்கத் திருத்தலங்கள், நீலகிரி, கொடைக்கானல், கோவைக் குற்றாலம், முதுமலை, ஆனைமலை, செட்டிநாடு, புளியஞ்சோலை, வேலூர் கோட்டை ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தவிர, தரங்கம்பாடி, பழவேற்காடு, கொல்லிமலை, மாமல்லபுரம், குற்றாலம், திருச்செந்தூர், ஒகேனக்கல் ஆகிய இடங்களில், ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் வால்பாறை, கல்லணை, ஏற்காடு, திருவானைக்காவல், திருவில்லிபுத்தூர், சிக்கல், வேளாங்கண்ணி மற்றும் நாகூர் ஆகிய சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும்.** மேலும், முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### வனம் மற்றும் சுற்றுச்சூழல்

119. தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதிகளை மேம்படுத்த, ரூபாய் 567 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் ரூபாய் 63 கோடி செலவில் வன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் கீழ், 450 தடுப்பணைகள் மற்றும் 150 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்படும்.**

120. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அரசு செயல்படுத்திவரும், தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம், தமிழக விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. **மாநிலத்தின் வனப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு வரும் ஆண்டிலும் சுமார் ஒரு கோடி மரக்கன்றுகள் இத்திட்டத்தின் கீழ் நடப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### இந்து சமய அறநிலையத் துறை

121. இந்துக்களில் தகுதிபெற்ற அனைத்துச் சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டி, தந்தை பெரியார் அவர்களின் கனவை இந்த அரசு நனவாக்கியுள்ளது. 6 அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு இவற்றில், அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த 207 மாணவர்கள் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சியை முடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் அர்ச்சகர்களாக திருக்கோயில்களில் பணியாற்ற இந்த அரசு ஆவன செய்யும்.




### விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

122. கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ரூபாய் 5 கோடி செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. **விளையாட்டுத் திறன்கொண்ட இளைஞர்கள் உரிய பயிற்சிகளைப் பெற ஏதுவாக, திருநெல்வேலியில் ரூபாய் 300 இலட்சம் மதிப்பீட்டில், புதிய செயற்கை இழை ஓடுதளம் ஒன்று அமைக்கப்படும். மேலும், கோவை மாவட்டத்தில் ரூபாய் 175 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் ஒன்று அமைக்கப்படும்.**

### அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர் நலன்

123. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பல்வேறு துறைகளில் காலியாக இருந்த பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி வருவதோடு, கடந்த ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்ட உரிமைகளை அரசு அலுவலர்களுக்கு மீட்டெடுத்துத் தந்துள்ளது. அரசு அலுவலர்களுக்காக மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு



வந்த மருத்துவ உதவித் திட்டத்தின் பலன்களை உயர்த்தி, இப்பலன்களை, பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பணிபுரிவோரும் பெற்றுப் பயனடைந்திடும் வகையில் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. முன்னர் இருந்த மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு சராசரியாக 2,000 அலுவலர்கள் ரூபாய் 18 கோடி அளவிலான மருத்துவ உதவிகளைப் பெற்று வந்ததோடு ஒப்பிடும்போது, இந்த அரசு செயல்படுத்தியுள்ள புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், முதல் எட்டு மாதங்களிலேயே 19,311 அலுவலர்கள் ரூபாய் 70 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையாக ரூபாய் 66 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

124. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை மாநில அரசு அலுவலர்களுக்கும் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய இந்த அரசால் அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு, பல்வேறு சங்கங்களையும், அமைப்புகளையும் சந்தித்து அவர்களின் கோரிக்கைளைப் பெற்று பரிசீலனை செய்து வருகிறது. இந்த நிலையில், முன் எப்போதும், எந்த மாநிலத்திலும் அளிக்கப்படாத அளவில் ரூபாய் 4,247 கோடியை இடைக்கால நிலுவைத் தொகையாக அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. **அதிகாரிகள் குழுவின் அறிக்கையைப் பெற்று, ஆய்ந்து, திருத்திய ஊதிய விகிதங்களை இந்த அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும்.**

125. ஓய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சைத் திட்டத்தின் கீழ், அவர்களிடமிருந்து திரட்டப்படும் நிதி போதுமானதாக இல்லாததால், அப்பற்றாக்குறையை ஈடுசெய்ய கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 24 கோடி இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளதோடு, ஈட்டுத்தொகைக்கான உச்சவரம்பும் ரூபாய் 50,000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. **ஓய்வூதியதாரர்களின் மனைவி அல்லது கணவர் நோய்வாய்ப்படும்போது அவர்களின் மருத்துவச் செலவிற்கும் இத்திட்டத்தின் கீழ் ஈட்டுத்தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நெடுநாளையக் கோரிக்கையை ஏற்று, இனி அவர்களின் மருத்துவச் செலவிற்கான ஈட்டுத்தொகையையும் இந்த அரசு வழங்கும்.**

## ஆண்டுத் திட்டம்

126. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல், ரூபாய் 85,344 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதல் ஆண்டான 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 14,000 கோடி ஒதுக்கீட்டிலும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 16,000 கோடி மதிப்பீட்டிலும் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. **இந்தத் திட்ட ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்பட்டு, வரும் 2009–2010 ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 17,500 கோடி அளவில் திட்டப்பணிகளைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.**

## வரிகள்

127. கடந்த மூன்று ஆண்டுகளில் மின் கட்டணமும், போக்குவரத்துக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. இதுமட்டுமன்றி, கடந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளில் பல்வேறு பொருட்களின்மீதான விற்பனை வரி மற்றும் மதிப்புக்கூட்டுவரி ஆகியவற்றிற்கு விலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும் மட்டுமே அறிவித்துள்ளது. இதுபோன்றே, இந்த நிதிநிலை அறிக்கையிலும் அனைவருக்கும் பலனளிக்கும் வகையில் வரி விலக்குகளையும், வரி குறைப்புகளையும் செய்திடக் கருதியுள்ளது. இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடித்துவரும் முறைப்படி, 4.2.2009 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு, மதிப்புக்கூட்டு வரி விதிப்பில் பின்வரும் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன.

- சென்ற ஆண்டு அஞ்சறைப் பெட்டி மளிகைப் பொருட்களான கடுகு, வெந்தயம் மற்றும் சோம்பு ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட விற்றுமுதல் வரை வரி



விலக்கு அளிக்கப்பட்டது. இவற்றில் விட்டுப்போன இரு மளிகைப் பொருட்களான மிளகு மற்றும் சீரகம் ஆகியவற்றிற்கும் அதே விற்றுமுதல் நிபந்தனையுடன் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களின் விற்பனைக்கு ஏற்கனவே நிபந்தனையுடன் கூடிய வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும், இப்பொருட்களை மாவு பேன்ற பொருட்களின் உற்பத்திக்காக கொள்முதல் செய்யும்பொழுது, கொள்முதல் வரி விதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்க, பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களுக்கு கொள்முதல் வரியிலிருந்து 1.1.2007 முதல் விலக்களிக்கப்படும்.

- கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டி (trunk box)க்கு தற்பொழுது 12.5 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. இப்பொருளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- கையினால் தயாரிக்கப்படும் தகர டின்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- வணிகச் சின்னமிடப்பட்ட நெய்யின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- வணிகச் சின்னமிடப்பட்ட ஊறுகாயின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டகத்தின்மீது (Iron safe) விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- உலர்ந்த திராட்சையின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- சலவைத் தண்ணீரின் (Bleach liquid)மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- இணைப்பான்களாகப் பயன்படுத்தப்படும் குண்டூசி, ஊக்கு, ஜெம் கிளிப்புகள், அடையாள அட்டை கிளிப்புகள், தேர்வு அட்டை கிளிப்புகள், இரப்பர் பேண்ட், ஸ்டேப்ளர் பின் ஆகிய பொருட்களின் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.




- தகவல் தொழில்நுட்பப் பொருளான ஐ–பாட் (i-pod), MP3 மற்றும் MP4 பிளேயர்கள் மீது தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படும்.

- சேலம் சேகோசர்வ் (Sagoserve) மூலம் விற்கப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாகக் குறைத்து விதிக்கப்படும்.

- செங்கல் உற்பத்தியாளர்கள் எளிதான முறையில் வரி செலுத்தும் வகையில், வணிகரின் விருப்பத்தின்பேரில் அவர்கள் அமைத்திருக்கும் செங்கல் சூளை அடுப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் வரி விதிக்கப்படும்.

- 1.1.2007 முதல் 31.3.2007 முடிய உள்ள காலத்திற்கு ரூ.5 இலட்சம் மற்றும் ரூ.10 இலட்சம் தொகைக்குக் குறைவான விற்றுமுதல் தொகை கொண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழான சலுகைகளை தங்களுக்கும் அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இக் கோரிக்கையினை ஏற்று இவர்களின் 1.4.2006 முதல் 31.12.2006 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் உண்டான விற்பனைத் தொகையினையும் சேர்த்து கணக்கிட்டு, மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் ஆண்டு மொத்த விற்பனைத் தொகையாகக் கருதி மதிப்புக் கூட்டு வரி விதிப்பு செய்யப்படும். இது மேற்குறிப்பிட்ட

காலத்தில் மதிப்புக் கூட்டு வரி வசூல் செய்த வணிகர்களுக்கு மட்டும் பொருந்தும். இதனால் சுமார் 10 ஆயிரம் சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் பயன் பெறுவார்கள்.

- மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறையை மேலும் எளிமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளில் தேவையான உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப் படும். இது தொடர்பான விவரங்கள் வணிகவரித்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.

தற்போது அறிவிக்கப்பட்ட வரிவிலக்கு மற்றும் வரிக்குறைப்பு சலுகைகள் 1.4.2009லிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இச்சலுகைகளால் அரசுக்கு ரூபாய் 100 கோடி வரி இழப்பு ஏற்படுமெனினும், பொதுமக்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களின் நலன் கருதி இச்சலுகைகளை இந்த அரசு அறிவிக்கிறது.

128.திரைப்படத்துறைக்கு உதவும் வகையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தை இந்த அரசு குறைத்ததோடு, பொதுமக்கள் திரையரங்குகளுக்கு வந்து திரைப்படங்களைக் காணச் செய்து இத்தொழிலுக்கு புத்துயிரூட்டும் நோக்கோடு, தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கும் அளித்துள்ளது. **திரைப்படத்துறைக்கு இவ்வளவு சலுகைகள் அளித்தும், இவற்றின் பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடையாத நிலை தொடர்வதால், இச்சலுகையை மறு பரிசீலனை செய்ய இவ்வரசு குழு ஒன்றை அமைக்கும்.**

### ஒட்டுமொத்த நிதிநிலை

129.மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–2010 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின், நிதிநிலை பற்றிய கணிப்புகளை தற்போது நான் அளிக்கின்றேன். 2009–2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 58,270.93 கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூபாய் 59,295.28 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும், வரும் நிதியாண்டில், நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட அரசின் மூலதனச் செலவு ரூபாய் 10,799.30 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

130.மேற்கூறிய சூழ்நிலையில் வரும் நிதியாண்டில் தமிழக அரசின் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 1,024.34 கோடியாகவும், நிதிப்பற்றாக்குறை ரூபாய் 11,823.64 கோடியாகவும் இருக்கும். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலையால் அரசின் வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரிவு, ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைகளின்படி ஊதிய உயர்வு மற்றும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான உயர் ஒதுக்கீடுகள் ஆகியவற்றால் இந்த வருவாய்ப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நாட்டில் கடினமான பொருளாதார நிலை நிலவிவரும் இவ்வேளையில், இதனால் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர் பாதிக்கப்படாது பாதுகாக்கவும், மாநிலம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடவும், அரசின் வளர்ச்சிச் செலவினங்களை உயர்த்துவதே ஒரே வழி என்பதை உணர்ந்து, பல்வேறு திட்டங்களுக்கும் போதிய நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இத்தகைய சூழ்நிலையிலும்கூட, மொத்த நிதிப் பற்றாக்குறை 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறே, நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு உள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். பொதுக் கணக்கின் நிகரத்தோடு எடுத்துக்கொண்டால் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபாய் 6.36 கோடியாக இருக்கும். செலவினங்களில் சிக்கனத்தைக் கடைபிடித்தும், வரி வசூலை மேம்படுத்தியும் இந்தப் பற்றாக்குறை ஈடுகட்டப்படும்.

131. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் (Medium Term Fiscal Plan – MTFP), மாநிலத்தின் எதிர்கால நிதிநிலை செயல்திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இந்த அரசு செம்மையாகப் பின்பற்றும்.

132.பேரறிஞர் அண்ணா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, உறுதிபெற்று, நீடித்து நிலைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்; செந்தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பேற்று; சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும், குறிப்பாகவும் சிறப்பாகவும் சாதாரண சாமான்ய மக்களும் நலமும் வளமும் பெற்று மேம்பாடடையத் தொடர்ந்து திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழினத்தின் மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை கண்ணெனப் போற்றிக் காப்பதிலும், காத்து வளர்ப்பதிலும்

முனைப்போடு பணியாற்றி வருகின்றது என்பதற்கு அடையாளமாக – ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த மூன்றாண்டு காலத்தில் எண்ண எண்ண இனித்திடும் வகையில் புரிந்துள்ள சாதனைகள் ஏராளம்; ஏராளம்!

133.பின்வரும் அந்தச் சாதனைப் பட்டியலை ஒரு கணம் நினைவு கூர்ந்தால், நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களின் எண்ணங்களும், செயல்பாடுகளும் இந்த நாட்டிலே வாழும் அடித்தட்டு மக்களையே சுற்றி சுற்றி சுழன்று வருவதை தெரிந்து கொள்ள முடியும். சான்றுக்கு சாதனைப் பட்டியலில் சில :–

❖ ஒரு கோடியே 86 லட்சம் குடும்பங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி; ஒரு கிலோ ஒரு ரூபாய் வீதம்.

❖ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கச் செய்து, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இத்திருநாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, ஒரு கோடியே 84 இலட்சம் குடும்பங்களுக்கு 80 கோடி ரூபாய் செலவில் பொங்கல் பரிசாக அரிசி, பருப்பு, வெல்லம் ஆகியன.

❖ 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7000 கோடி ரூபாய் கூட்டுறவு கடன் ரத்து.

❖ உழவரும் நுகர்வோரும் பெரும்பயன் அடைந்திட மாநிலமெங்கும் 117 உழவர் சந்தைகள் மீண்டும் புதுப்பொலிவுடன் திறப்பு.

❖ 3 லட்சத்து 74 ஆயிரத்து 357 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 104 கோடியே 97 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.

❖ 1374 கோடியே 54 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் இதுவரை 56 லட்சத்து 26 ஆயிரத்து 557 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்.

❖ 220 கோடி ரூபாய் செலவில் 11 லட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்

❖ 2 லட்சத்து 10 ஆயிரத்து 289 ஏக்கர் நிலம் 1 லட்சத்து 75 ஆயிரத்து 159 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசம்.

❖ 6 இலட்சத்து 54 ஆயிரத்து 308 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.

❖ 73 இலட்சம் குழந்தைகள், மாணவர்களுக்கு வாரம் 3 முறை முட்டைகள், வாழைப்பழங்கள்.

❖ தமிழ் வழியில் பயிலும் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும் 10, 12ஆம் வகுப்புகளின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.

❖ 24 லட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 2லட்சத்து 99 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பஸ் பாஸ்.

❖ 2 லட்சத்து 14 ஆயிரத்து 189 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 335 கோடியே 89 லட்சம் ரூபாய் திருமண நிதி உதவி.

❖ 10 லட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் நிதி உதவி.

❖ 1 லட்சத்து 42 ஆயிரத்து 369 கைத்தறி நெசவாளர்களுக்கும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 182 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சுயநிதித் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்ற 2 லட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.

❖ 3 லட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 176 கோடியே 15 லட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித்தொகை.

❖ 3 லட்சம் இளைஞர்களுக்கு அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள்.

❖ 15 லட்சத்து 29 ஆயிரத்து 582 முதியோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை.

❖ 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம்.

134.``கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகி விடக் கூடாது`` என்ற பொன்மொழியை தமிழகத்திற்கு அளித்த கலைஞரின் ஆட்சியில் இந்த மூன்றாண்டு காலத்தில் 3,072 திருக்கோயில்கள் 65 கோடி ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. பழைய தேர்களைப் புதுப்பித்தல், பொன்னாலான புதிய தேர்களைச் செய்தல், திருக்கோயில் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை செய்தல் போன்ற பணிகள் 2,790

திருக்கோயில்களில் 257 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க 46 புராதனத் திருக்கோயில்களை பத்து கோடி ரூபாய்ச் செலவில் சீரமைத்து, புதுப்பித்திடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திக்கெட்டும் புகழ்பெற்ற தில்லை நடராஜர் திருக்கோயில் அரசுப் பொறுப்புக்கு வருகின்ற அற்புத நீதியும் கிடைத்துள்ளது.

135. "திங்களொடும், செழும்பரிதி தன்னோடும், விண்ணோடும், உடுக்களோடும் – மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த" பழம்பெரும் தமிழ்ப் பண்பாட்டின் பன்முகக் கூறுகளை நினைவுபடுத்திடும் வகையிலும்; ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகத்தின் நீள அகலத்தை எண்ணத்தால் அளந்து – மானுடத்தின் உச்சத்தை எட்டிப் பிடித்து, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்!' என உணர்த்திய சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனார் முதல் – கொடி காத்த குமரன் வரை – சரித்திரமாகிவிட்ட சான்றோர், அரசியல் ஆன்றோர், தியாகச் செம்மல்கள், இலக்கிய ஏந்தல்கள் அனைவரையும், இன்றைய தலைமுறையினரும் இனிவரும் தலைமுறையினரும் நினைந்து நினைந்து போற்றிடும் வகையிலும் – நிலைத்திருக்கும் நினைவுச் சின்னங்கள் இன்றைய அரசால் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆட்சியில் – தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார், தியாகி செண்பகராமன், வீரன் அழகுமுத்துக்கோன், எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார், தியாகி கக்கன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்றோரின் திருவுருவச் சிலைகளையும் – பூலித்தேவன், கட்டபொம்மன், சுந்தரலிங்கம், விசுவநாத தாஸ், ஜீவானந்தம், தில்லையாடி வள்ளியம்மை, மகாகவி பாரதியார், அண்ணல் அம்பேத்கர், மூதறிஞர் ராஜாஜி, நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார், உடுமலையார், பட்டுக்கோட்டையார், கவிஞர் கண்ணதாசன், போன்றோரின் நினைவுபோற்றும் மணிமண்டபங் களையும், நினைவுச் சின்னங்களையும் – மருதுபாண்டியர், பசும்பொன் தேவர் திருமகனார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். (முதல் நினைவிடம்) போன்ற தியாக சீலர்களுக்கு நினைவிடங்களையும் – ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம், கலைவாணர் அரங்கம் போன்றவற்றையும் அமைத்துள்ளதோடு; பூம்புகாரில் சிலப்பதிகார எழுநிலை மாடம், சென்னையில் வள்ளுவர் கோட்டம், சூழும் தென்கடல் ஆடும் குமரியில் வான்புகழ் வள்ளுவருக்கு வானுயரச் சிலை ஆகியவற்றையும் எழுப்பி அவர்களைத் தமிழகம் என்றென்றும் மறக்காவண்ணம் நிலைநிறுத்தியுள்ளோம்.

136. சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வஜ்னாவின் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்ததையொட்டி, இந்தப் பெருந்தன்மையை உணர்ந்து பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு ஒத்துழைப்பு தர கர்நாடக முதலமைச்சர் அவர்கள் இசைவளித்துள்ளார். இதையடுத்து, தமிழகத்தில் வாழும் கன்னடர்களும், கர்நாடகத்தில் வாழும் தமிழர்களும் நீண்டகாலமாக கண்டுவரும் கனவு நிறைவேறிடும் வண்ணம், பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவர் சிலையும், சென்னையில் கவிஞர் சர்வஜ்னாவின் சிலையும் விரைவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்திற்கு மாநிலம் இதுபோன்று நல்லுறவு செழித்தோங்கி வளர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் விருப்பமும் நோக்கமுமாகும்.

137. வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கங்கொண்டு கண்ட கனவை நனவாக்க நாளும் உழைத்து வரும் இந்த அரசு; நாடும் வீடும் நலம் பெறவும்; இனமும் மொழியும் ஏற்றம் பெறவும்; மதச்சார்பின்மை போற்றி, மதநல்லிணக்கம் நிலை பெறவும்; அண்ணா அவர்களின் அரிய எண்ணமும், நமது கலைஞர் அவர்களின் சிறப்பான செயல்பாடுகளும் நிறைவேறவும், தமிழக மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையோடு கழக அரசு, மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் துணையுடன் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறது.

138. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு என்னுடன் ஒய்வின்றி ஒத்துழைத்த நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு 2009–2010ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

**வணக்கம்**

**க. அன்பழகன்**
நிதி அமைச்சர்

# தமிழகம் முழுதும் இந்தக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்

'சென்னை சங்கமம்' தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை!



**நா**ட்டுப்புறக் கலை வடிவங்களை மீண்டும் நிகழ்த்தி, தமிழ்க் கலைஞர்களை மரியாதை செய்திடும் மகத்தான நிகழ்ச்சியான 'சென்னை சங்கமம்' கலைப் பண்பாட்டு விழாவின் தொடக்க விழா 10.1.2009 அன்று மாலை சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

"திருவிழா–தெரு விழா" என்ற விளம்பரங்களோடு "சங்கமம்" பரப்பப்பட்டு – சென்னையிலே, அதனுடைய தொடக்க விழா இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. திருவிழா, தெருவிழா என்று அழகாகச் சுட்டிக் காட்டிய என் மகள் கனிமொழி, இதை இன்றைக்குப் பெருவிழாவாகவே ஆக்கியிருப்பதைக்கண்டு நான் பெருமை அடைகின்றேன்.

கனிமொழிக்கு மாத்திரம் இன்னும் நேரம் கிடைத்திருந்தால் – இதைவிட இன்னும் அற்புதமாக இந்த விழாவை நடத்திக் காட்டியிருப்பார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நேரம் என்று நான் தவறாகச் சொல்லிவிட்டேன், பணம் கிடைத்திருந்தால்



என்று சொல்லியிருக்க வேண்டும். அது கிடைக்காத காரணத்தால்தான், நான் உதவிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதைத்தான் நம்முடைய ஜெகத் கஸ்பர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

"நடந்தாய் வாழி காவேரி" என்பது இன்றைய நிகழ்ச்சியின் தலைப்பு. ஏறத்தாழ இந்த ஒன்ணே முக்கால் மணி நேரத்தில் காவேரி எங்கேயாவது நடக்கிறாளா என்று பார்த்தால் குதிக்கிறாள். நடக்கவில்லை, நடந்தாய் வாழி காவேரி என்பதை மாற்றி, குதித்தாள் வாழி காவேரி என்கின்ற அளவிற்கு குதித்த காட்சியை நாம் கண்டோம்.

காவேரி ஒடும்போது எப்படி அந்த ஒலி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் நாட்டியமாடிய காவேரியாக நடந்தாய் வாழி காவேரி அமைந்திருக்கின்றது. சிலப்பதிகாரத்தில் "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப" என்று தொடங்கி, நடந்தாய் வாழி காவேரி என்று அந்தப் பாடல் முடியும். அதை சிறப்பாக எடுத்துத் தொகுத்து – நடந்தாய் வாழி காவேரி – என்ற தலைப்பில் இந்தத் தொடக்க விழாவினை கனிமொழியும் நண்பர்களும் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

### பெருவிழாவாக மாறிய திருவிழா

நான் முதலிலே சொன்னேன், திருமங்கலம் என்ற ஒரு ஊரை நீங்கள் எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்தத் திருமங்கலம் வேலையாக நான் அண்மையில் சென்றிருந்தபோது, இங்கே இந்த வேலையை கனிமொழி கவனித்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டுச் சென்றேன். திருமங்கலம் எப்படி எனக்கு நல்ல செய்தியைச் சொல்லப்போகிறதோ அதைப்போல இந்தத் திருவிழா, பெரு விழாவாக மாறி நல்ல செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

பல நகரங்களில் – பல கிராமங்களில் – தமிழகம் முழுதும் இந்தக் கலை நிகழ்ச்சி நடைபெற வேண்டும் என்பது என்னுடைய ஆவல். சென்ற ஆண்டும் இதைச் சொன்னேன். இதை ஒரு கலை விழாவிற்கு வந்திருந்த திருமதி. அம்பிகா சோனி அவர்கள் கூட பெரிதும் பாராட்டி, நான் மத்திய அரசின் சார்பாக என்ன உதவி செய்ய வேண்டுமோ அதையெல்லாம் இந்த மன்றத்திற்குச் செய்வேன் என்று சொன்னார்கள், மறந்திருக்க மாட்டார்கள், ஒரு வேளை மறந்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தால், இப்போது நான் நினைவு படுத்துகிறேன். ஏனென்றால் டெல்லிக்கு அமைச்சர்களாகப் போய்விட்டாலே அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் நம்மையே குற்றம் சாட்டுவார்கள்–நீங்கள் ஞாபகப்படுத்தவில்லையே என்பார்கள். அதனால்தான் பகிரங்கமாக, வெளிப்படையாக உங்களையெல்லாம் சாட்சியாக வைத்துக் கொண்டு, கடந்த ஆண்டு சொன்னீர்களே, இது போன்ற அமைப்புகளுக்கு உதவி செய்வதாக, அதைச் செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



**கலை, கலாச்சாரம் வளர்க்கும் பூமி**

இந்த நிகழ்ச்சியில் எல்லா கலைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்றாலுங்கூட, எல்லோருடைய கலை நுணுக்கமும் நம்முடைய உள்ளத்திலே பதிந்திருந்தாலுங்கூட, மறக்க முடியாத ஒருவர் சிவமணி என்பதை நான் சொல்லித்தான் தீரவேண்டும். சிவமணியை இந்த நடன மேடையில் இரண்டாவது முறையாக நான் காண்கிறேன். அவர் வெறும் சிவமணி அல்ல – ஜீவ மணி – எப்படித்தான் இவ்வளவு தாளக்கட்டு, ராகம், பாவம் இவைகளோடு இணைந்து ஒலிக்கிறது என்று எண்ணும்போது – நானும் இசைக் குடும்பத்திலே பிறந்தவன் என்ற முறையில் ஆச்சரியப்படுகிறேன். அந்த அளவிற்கு தாளக் கட்டோடு, அவர் இங்கே நடத்திக் காட்டிய இந்த அற்புதமான ஒலி முழக்கம் – சிவமணி பல மின்னல்களை, இடிகளை, அருவியின் ஒலிகளை இத்தனையையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிற ஒரு அபூர்வ மனிதர் என்று சொல்லத்தான் தோன்றுகிறது.

இந்த நிகழ்ச்சியிலே வந்து கலந்துகொண்டுள்ள நம்முடைய அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய வயலார் ரவி அவர்கள் சொன்னார்கள் – கலை, கலாச்சாரம் இவைகளையெல்லாம் வளர்க்கின்ற பூமியாக தமிழ்நாடு இருக்கிறது என்று சொல்லி, பெருமைப்பட்டுக் கொண்டார்கள். நான் இந்த நேரத்திலே என்னுடைய நண்பர் வயலார் ரவி அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவருக்குத் தெரியாமல் இருக்காது, இருந்தாலும் நினைவு படுத்துகின்றேன். ஆண்டுதோறும் ஓணம் பண்டிகை என்று கேரளத்திலே கொண்டாடப் படுகின்றது. அந்த ஓணம் பண்டிகைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பெல்லாம் தமிழ்நாட்டிலே உள்ள மலையாளிகளுக்கு, கேரளக்காரர்களுக்கு விடுமுறை கிடையாது. நான் இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு கேரள மக்களுடைய வேண்டுகோளையேற்று – அந்த வேண்டுகோளையே ஆணையாக ஏற்று – ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளித்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதையும் எப்படி பொங்கலுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோமோ, அதைப் போல ஓணம் பண்டிகைக்கும் மதிப்பளிக்கிறோம்.

**ஓணம் பண்டிகையின் கதை**

ஏனென்றால் ஓணம் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது என்ற ரகசியம், உண்மை, தத்துவம் எனக்குத் தெரியும். அதை நான் மலையாளப் புத்தகத்திலேயே படித்திருக்கிறேன். கேரளத்தில் ஒரு மாமன்னர் இருந்தார். மாவலி என்பது அவருடைய பெயர்.

அந்த மாவலி மன்னர் நல்லவர். ஆனால் தமிழ்நாட்டிலே அவரைக் கெட்டவராக ஆக்கி வைத்திருக்கிறார்கள். அவன் அசுரன், தேவர்களுக்கு விரோதி, ஆகவே மாவலி மன்னரை, கெட்டவனாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். அங்கே அந்த மன்னர் நல்லவராக, புகழ் பெற்றவராக, எல்லோருக்கும் நன்மை செய்தவராக, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாதனை புரிபவராக, அரிசி விலையைக் குறைத்துக் கொடுத்தாரோ என்னவோ, அது எனக்குத் தெரியாது ஒவ்வொரு நாளும் சாதனை புரிபவராக கேரளத்திலே அவர் ஆண்டு கொண்டிருந்தார். இவரை இப்படியே விட்டால் – ரொம்ப நல்ல பெயர் எடுத்து, நம்மை பிறகு ஆளவே விடமாட்டார் போலிருக்கிறதே என்று அங்கேயுள்ள தேவர்கள் எல்லாம் சேர்ந்து மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார்கள். இவரை விடக்கூடாது, ஏன் ? இவர் நல்லவராக இருக்கிறார், ஆகவே விடக்கூடாது. எப்படி தேவர்களுடைய எண்ணம் பாருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அவருக்கு முடிவு கட்ட வேண்டும், அப்போதுதான் நாம் ஆட்சிக்கு வர முடியும் என்று சொன்னார்கள்.

உடனே மகாவிஷ்ணு தந்திரமாக வாமனா அவதாரம் எடுத்து – மூன்றடி மண் வேண்டுமென்று கேட்டு – இரண்டு அடிகளை பூமியிலும், வானத்திலும் அளந்து மூன்றாவது அடிக்கு இடமில்லாத காரணத்தால், அவர் தலையிலே காலை வைத்து, கொன்றார் என்று ஒரு கதை உண்டு.

அந்த மன்னர் இறந்தபோது, அவர் கேட்டுக் கொண்ட வரம்தான், ஆண்டு தோறும் ஓணம் பண்டிகையின்போது, தான் தன்னுடைய மக்களைப் பார்க்க வரவேண்டும், அப்படி வரும்போது ஆடவர், பெண்டிர் அனைவரும் புதுக்கோலம் இட்டு, புத்தாடை புனைந்து, நீராடி என்னை வரவேற்று மகிழ வேண்டும், நான் என்னுடைய மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் காணவேண்டும் என்று வரம் கேட்டதாகவும், அந்த வரம் கொடுக்கப்பட்டு, அதுதான் ஓணம் பண்டிகை என்றும் சொல்வார்கள். அந்த நல்லவர், மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்து ஆண்டு கொண்டிருந்தால், அது பிடிக்காத ஒரு கூட்டம் இன்று மாத்திரமல்ல, அன்றைக்கே இருந்திருக்கிறது –அப்படி இருந்த



**அண்ணாவின் பொன்மொழிகள்**

**தனிப் பண்பாடு**

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தவர்களுக்கு ஏற்பட்ட பழக்க வழக்கத்தைத்தான் நாம் பண்பாடு என்கிறோம்.

காரணத்தால், அவரை வீழ்த்த எண்ணி சூழ்ச்சி செய்தார்கள். ஆனால் மக்கள் மனதிலே இன்றைக்கும் மாவலி மன்னர் இருக்கிறார். சிலர் கூட மகாபலி என்று அவரைச் சொன்னார்கள். மாவலி என்றால் மிகுந்த வலிமை வாய்ந்தவர் – மா என்றால் பெரிய – வலி என்றால் வலிமை – வலிமை வாய்ந்தவர் என்ற அந்தப் பெயரை மாற்றி மகாபலி என்று மாற்றியிருக்கிறோம்.

**மாமல்லன்–மாவலி**

அப்படி மாற்றியது மாத்திரமல்ல – மகாபலிபுரம் என்று ஒரு ஊரையே தவறாக இன்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அது மாமல்லபுரம்–மாமல்லன் என்ற ஒரு மன்னர் – அவர் வீரத்தை நிலைநாட்டியவர் – அதற்காக அவர் உருவாக்கிய அந்த இடத்திற்கு மாமல்லபுரம் என்று பெயர் சூட்டினார். மாமல்லன் வேறு – மாவலி வேறு. மகாபலி சக்கரவர்த்தி என்பது வேறு. இந்தப் பெயர்களையெல்லாம் புராணத்திலே குழப்பி, அவர் ஒரு தமிழர், அவர் ஒரு திராவிடர், அவர் தேவர் இனத்திற்கு விரோதி – தேவர் என்றால் வேறு தேவர்கள்



அல்ல – பூ தேவர்களுக்கு விரோதி – என்றெல்லாம் சொல்லி, அவரை ஒழித்துக் கட்டப் பார்த்தார்கள்.

**ஒருவருக்கொருவர் துணை**

ஆனால் இன்றைக்கும் வரலாற்றிலே அவன் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஓணம் பண்டிகைக்கு உரிய உத்தமன், மாவலி சக்கரவர்த்தி – அவருடைய புகழ் பாடுகின்ற பிரதேசத்திலிருந்து நம்முடைய நண்பர் வயலார் ரவி அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கதையை ஆமாம், உண்மை என்று சொல்லியிருக்கிறார். ஆகவே அந்த உண்மையை உணர்ந்த வயலார் ரவி போன்றவர்கள் – இங்கேயிருக்கின்ற இந்த அரசுக்கும் துணை நிற்க வேண்டும் நான் துணை கேட்பது என் ஒருவனுக்காக அல்ல – இங்கே ஆட்சியில் உள்ள பத்து, பதினைந்து அமைச்சர்களுக்காக அல்ல – இந்த நாட்டு மக்கள் அடிமைகளாக ஆகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக – தமிழகத்துக்கு நீங்கள் துணைபுரிந்தால் கேரளத்திற்கு நாங்கள் துணைவர்களாக இருப்போம். இப்படி ஒருவருக்கொருவர் துணை நிற்கின்ற நிலை ஏற்படும்.

இங்கே ஒலி முழக்கத்திலே எல்லோருடைய காதுகளிலும் விழுந்திருக்காது–ஒரு பாடல் வரி–மக்களுக்காக மதமா–மதத்திற்காக மனிதனா என்ற பாடல் பாரதிதாசன் பாடல்–இது இங்கே ஒலி முழக்கத்தில் பலருடைய காதுகளில் விழுந்திருக்காது. அது பாரதிதாசன் பாடல் என்ற காரணத்தால் என் காதுகளுக்குள் அது நுழைந்தது. அதைக் கேட்டு சரியாகத் தெரிந்து கொண்டேன். அப்படிப்பட்ட கருத்தமைந்த பாடல்களும் இன்றைய நிகழ்ச்சியிலே இடம்பெற்றிருக்கின்றது. இதிலே பாடுபட்டவர்கள், பணியாற்றியவர்கள், கலை விருந்து அளித்தவர்கள் அனைவரும் வெறும் ஒப்புக்கு–சொன்னதற்கு – கேட்டதற்கு–ஒப்புக்கொண்டதற்கு ஏற்ப நடிக்கிறோம் என்று இல்லாமல் உண்மையிலேயே தங்களுடைய ஆற்றலை, திறனை, வியர்வை சொட்டச் சொட்ட இங்கே விருந்தாக நமக்கு அளித்திருக்கிறார்கள். அந்த விருந்திலே சிகரமாக நம்முடைய சிவமணியின் விருந்தும் அமைந்தது என்பதை மீண்டும் ஒரு முறை சொல்லி, அவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை அளித்து இந்த அளவில் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன். ★

# மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு இந்த அரசு நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளது

21.2.2009 அன்று, சிவகங்கையில் நடைபெற்ற அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவின்போது, சென்னை இராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்தவாறே காணொலித்திரை மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை



நீண்ட நாள் ஒய்வுக்குப் பிறகு மருத்துவமனையிலே இருந்து உங்களை எல்லாம் காணுகின்ற, உங்களோடு பேசுகின்ற ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவை ஏற்பாடு செய்து, என்னைப் பலமுறை அழைத்து, நான் வர இயலாத நிலையில், அழைப்பதை ஒரு பெரிய ஆர்வமான தொண்டாகக் கருதி இந்தப் பகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய செயலை ஆற்றிட முனைந்த நம்முடைய அன்புக்குரிய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் தற்போது எவ்வளவு மகிழ்ச்சி அடைவார் என்பதையும், அந்த மகிழ்ச்சியிலே ஒரு பகுதி மகிழ்ச்சி எனக்கும் உண்டு என்பதையும் இந்தப் பகுதி மக்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

**5 மருத்துவக் கல்லூரிகள்**

பொதுவாக மருத்துவக் கல்லூரிகள், மருத்துவத்துறை வளர்ச்சிக்கு – அங்கிருந்து புறப்படுகின்ற மாணவர்கள் மூலம் பெரும்பயன் அடைந்து மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்தர வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம்.

அதனால்தான், கடந்த கால ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2005–06 ஆம் ஆண்டில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி 1,487 கோடி ரூபாய். ஆனால்,

இப்பொழுது 2009–10 ஆம் ஆண்டில் அந்த நிதியினை 3,391 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளது இந்த அரசு. இதன்மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்த அரசு அளித்து வரும் முக்கியத்துவத்தை உணரலாம்.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதற்கிணங்க– விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், பெரம்பலூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் புதிதாக 5 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி கடந்த ஆண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. விழுப்புரம், திருவாரூர் மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளை வரும் ஆண்டில் தொடங்கிடக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்காக 97 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டுவதற்குரிய அடிக்கல் நாட்டுவிழா இன்று நடைபெறுகிறது. இந்த அரசு 2006இல் பொறுப்பேற்றபொழுது, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் காலியாக இருந்த மருத்துவர் பணியிடங்களில் 4,156 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு இப்பொழுது புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், 5,183 செவிலியர்களையும் இந்த அரசு நியமனம் செய்துள்ளது.

அத்துடன், தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,249 மருத்துவர்கள், 3,768 செவிலியர்கள் ஆகியோருக்கு காலமுறை ஊதிய விகிதம் வழங்கப்பட்டு, பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வருமுன் காப்போம் திட்டம்**

'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்' என்று இந்த அரசு நடத்திவரும் திட்டத்தின்கீழ், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 12 இலட்சத்து 96 ஆயிரத்து 803

> **“1,454 குழந்தைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, அவர்களின் விலை மதிப்பில்லாத உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.”**

தாய்மார்களுக்கு 619 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களின் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை வழங்கும் பொருட்டு 'வருமுன் காப்போம் திட்டம்' 2006ஆம் ஆண்டு முதல் இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆற்றல் வாய்ந்த மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு, இதுவரை 9 ஆயிரம் மருத்துவ முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன.

இத்தகைய மருத்துவ முகாம்களை ஆங்காங்கு தற்காலிகமாக ஏற்பாடு செய்து நடத்துவதைவிட மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகளை அமைத்து, அந்தக் கல்லூரி களின் உதவியோடு– அந்தக் கல்லூரிகளின் ஆற்றலைப் பயன்படுத்தி மருத்துவமனைகளை ஆங்காங்கு நடத்துவது தேவை என்பதற்காகத் தான் இத்தகைய மருத்துவமனைகளை இந்தத் திட்டத்திலே நாம் அமைக்கப் போகிறோம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்தின் வாயிலாக இன்றைய தினம் இங்கே– சிவகங்கையிலே, இந்த மருத்துவக் கல்லூரி தொடங்கப் பட்டிருக்கிறது.

**சிறார் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம்**

இந்த அரசின் மற்றும் ஒரு திட்டமாக, புகழ்வாய்ந்த 22 தனியார் மருத்துவ மனைகளுடன்



ஒப்பந்தம் செய்துகொண்டு சிறுவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை–சிறுவர்கள், பள்ளி மாணவர்கள்– இவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்கு தலா 1 இலட்சம் ரூபாய் வரையிலே தேவை – அவர்கள் மீண்டும் மறுபிறவி எடுக்க வேண்டுமேயானால் அதற்கான உதவியும் இப்போது செய்யப்பட்டு இந்த இரண்டாண்டு காலத்திலே அதன் வாயிலாக 1,454 குழந்தைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, அவர்களின் விலை மதிப்பில்லாத உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அடுத்து இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், ஏறத்தாழ ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மக்கள் உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் அரசு மற்றும் தனியார் மருத்துவ மனையில் இலவச உயர் சிகிச்சை செய்து கொள்ள வகைசெய்யும் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான "முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்" புதிதாக அறிமுகப்படுத்தப் படுகிறது. வரும் ஜூன் திங்களில் தொடங்கப்பட உள்ள இத்திட்டத்திற்கு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய திட்டங்களின் மூலம் தமிழகத்தில் வாழும் மக்களுக்கு முறையான மருத்துவ வசதிகள் தகுதியான மருத்துவர்களிடம் இருந்து கிடைக்கவேண்டும் என்பதற்காக மாவட்டந் தோறும் மருத்துவக் கல்லூரிகளை இந்த அரசு தொடங்கி வருகிறது.

இதிலே பிடிவாதமாக இருந்து – ஆர்வமாக இருந்து – தொகுதி மக்கள்பால் கொண்டிருக்கின்ற தொடர்பின் காரணமாக மக்கள் பிரச்சினையை உணர்ந்து, அந்த மக்கள் நன்மைக்காக என்னுடைய அருமை நண்பரும், இந்தியாவினுடைய பொருளாதார மேதைகளில் ஒருவரும், இன்றைய உள்துறை அமைச்சருமான நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் இந்த மருத்துவக் கல்லூரி இங்கே உருவாக அதற்கு அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளை எல்லாம் எண்ணி எண்ணி நான் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்.

இப்படிப்பட்டவர்கள்–மக்களோடு தொடர்புடைய நம்முடைய மாண்புமிகு ப. சிதம்பரம் போன்றவர்கள் இருக்கின்ற வரையில் மக்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. இவர்களைப் போன்ற நல்லவர்கள்–வல்லவர்கள் இந்த ஆட்சியில் டெல்லியிலும், தமிழகத்திலே சென்னையிலும் தொடர்புகொண்டு இரு அரசுகளும் மக்களுக்காகப் பாடுபடுகிற நிலையில் இந்த விழாவிலே கலந்து கொண்டுள்ள தமிழக அமைச்சர்கள் தம்பிகள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோரையும், மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களையும் வாழ்த்தி, வணங்கி நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* * *

# நம்முடைய பயணம் நேர்மையான பயணம், நியாயமான பயணம் – அந்தப் பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை இராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்தவாறே காணொலித்திரை மூலம் 20.2.2009 அன்று சென்னை பாடி சந்திப்பில் கட்டப்பட்டுள்ள புதிய உயர் மட்ட சுற்று வட்ட மேம்பாலத்தினைத் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:–



இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் சென்னை பாடி சந்திப்பில் ரூபாய் 125 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய உயர்மட்ட சுற்று வட்ட மேம்பாலம் திறப்பு விழா நிகழ்ச்சியின் தலைவர், தம்பி மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள அன்பிற்கும், பண்பிற்கும் உரிய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களே, முன்னிலையேற்றுள்ள மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களே, வாழ்த்துரை வழங்க வந்துள்ள மீன்வளத்துறை அமைச்சர் கே.பி.பி.சாமி அவர்களே, சென்னை மாநகர மேயர் திரு. சுப்பிரமணியன் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு அதிகாரிகளே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே..... இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த நல்ல விழாவில் நேரில் கலந்துகொண்டு உங்களோடு பங்குபெற முடியாமல், உடல் நிலை காரணமாக சென்னை போரூர் மருத்துவமனையிலிருந்தவாறு–இந்த உயர் மட்ட சுற்று மேம்பாலத்தை நாட்டிற்கு அர்ப்பணிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.






2005ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதிதான் இந்த மேம்பாலத்திற்கான அடிக்கல் என்னால் நாட்டப்பட்டது என்பதும் – இந்த நான்காண்டு காலத்திற்குள் இந்த மேம்பாலப் பணிகள் முடிவுற்று அதன் திறப்பு விழா அதுவும் என்னால் நடைபெறுகிறது என்பதும் – பாராட்டுதற்குரிய போற்றுதற்குரிய பாலுவை வாழ்த்துவதற்குரிய செய்திகளாகும்.

எத்தனையோ அடிக்கல்கள்– அடிக்கல்களாகவே ஆண்டுக்கணக்கில் இருந்திடும் நிலையில் – இந்த ஆட்சியின் பெருமைக்குரிய சாதனைகளாக பல மேம்பாலங்கள், சாலைகள் ஒரு சில ஆண்டுகளுக்குள் நடைபெற்று முடிந்து அதன் திறப்பு விழாக்கள் நடைபெறுவது நாம் கண்கூடாகக் கண்டு வருகின்ற ஒன்றாக தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவுகளில் –மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராகப் பணியாற்றும் தம்பி திரு. டி.ஆர். பாலுவின் சாதனைகளுக்கு எடுத்துக்காட்டாக இது போன்ற பணிகள் தொடர்ந்து நடைபெறுவது என் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்ற செயலாகும். அதற்குக் காரணமான அவ்வரைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

## அண்ணாவின் பொன்மொழி

### தமிழ்ப் பண்பு

வாழ்க என்பது தமிழ்ச் சொல் மட்டுமல்ல, தமிழ்ப் பண்பு. கனிந்த மனத்துடன், மற்றவரின் வாழ்க்கை செழித்து அவர் இன்புற்று இருப்பது அவருக்கு மட்டுமல்லாமல், சமூகத்துக்கு நல்லணி என்பதால், வாழ்த்துவது தமிழ் மரபு – அந்தச் சொல்லிலே இசை ஒலியும் இதயக் குழைவும் இருப்பதனை இதயமுள்ளோர் எவரும் உணர்வர்.



இத்தகைய அரும்பணிகள் பல தி.மு. கழக ஆட்சியிலே தமிழகத்தில் நடைபெற்று, மக்களுக்காகவே இந்த ஆட்சி அமைந்து – மக்களுக்காகவே பாடுபட்டு வருகின்ற இந்த நேரத்தில் இந்தச் சர்க்காரை கவிழ்க்க வேண்டுமென்று சில சதிகாரர்கள் திட்டமிட்டுச் செய்கின்ற வேலைகளை– திட்டமிட்டு நடத்துகின்ற வன்முறைச் செயல்களை மருத்துவமனையிலே இருந்தவாறே நான் கேட்டுக் கொண்டும், பார்த்துக்கொண்டும்தான் இருக்கின்றேன். அவர்களுக்கென்று சில பத்திரிகைகள் துணை போகின்றன என்பதை எண்ணும் போதும், சில கட்சிக்காரர்கள் துணை போவதாக இருப்பதும் நாட்டில் நல்ல பரிபாலனத்தைச் செய்து வருகின்ற ஒரு அரசுக்கு இதுபோன்ற தொல்லைகளைத் தர நினைப்பதும் சரியல்ல. அவர்கள் என்னதான் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டாலும், சதி வேலைகளில் ஈடுபட்டாலும், அதற்காகப் பயப்படாமல் நம்முடைய பயணம் நேர்மையான பயணம், நியாயமான பயணம்– அந்தப் பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம், அதற்கு இந்த மேம்பாலங்கள் பயன்படும் என்று கூறி, தம்பி பாலுவை இதற்காக வாழ்த்தி, பேராசிரியருக்கும் மற்ற விருந்தினர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கங்களையும் கூறி விடைபெறுகிறேன். ★

## அண்ணாவின் பொன்மொழி

**அன்புடைமை!**

அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை!

# மாநிலத்திற்குள்ளேயே நதிகளை இணைத்து நம்முடைய தேவையை நிறைவுசெய்து கொள்ளவேண்டும்




**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னை, இராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்தவாறே காணொலித்திரை மூலமாக 21.2.2009 அன்று பாளையங்கோட்டையில் நடைபெற்ற ரூ.369 கோடி மதிப்பீட்டிலான தாமிரபரணியாறு, கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்பு வெள்ளக் கால்வாய் பணிகள் தொடக்கவிழாவின்போது ஆற்றிய உரை வருமாறு :–

இன்று, நீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளும், நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளும் அதிகமுள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு தேசிய நதிநீர் இணைப்புத் திட்டம்தான் ஒரு நிரந்தரத் தீர்வாக அமைந்திடமுடியும். ஆனால் தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையில் ஒருமித்த கருத்து எட்டப்படாத நிலையில்; முதற்கட்டமாக மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களையாவது செயல்படுத்திட மத்திய அரசு நிதியுதவி வழங்கவேண்டும் என 29.5.2007 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற 53ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மத்திய அரசுக்கு வலியுறுத்தல்**

அந்தத் தீர்மானத்தின்படி 19.12.2007 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் 54ஆவது கூட்டத்தில், ''மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கிட வேண்டும்'' எனத் தமிழக அரசின் சார்பில் நான் பேசும்போது வேண்டுகோள் விடுத்தேன். அதைத் தொடர்ந்து அடுத்த கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் அதை வலியுறுத்திப் பேசினார். இந்த வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின்கீழ், இத்தகைய பணிகளுக்கு நிதியுதவி வழங்க, தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்தது.

அதன்படி, மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி, தமிழகத்திற்குள் ஓடும் ஆறுகளை இணைக்கும் முதல் திட்டமாக, வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்காக காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தினை நிறைவேற்றிட முடிவு செய்யப்பட்டது. அத்திட்டப்படி, காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் திட்டத்தினை நிறைவேற்றிட 24.6.2008 அன்று திருச்சியில் நடைபெற்ற விழாவில் அடிக்கல் நாட்டி, பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

அதனை அடுத்து இரண்டாவது திட்டமாகத் தற்போது, தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, அதன் தொடக்கவிழா இன்று (21.2.2009) பாளையங்கோட்டையில் நடைபெறுகிறது.

**பாளையங்கோட்டை எனக்கு வாழ்நாளில் நினைவிற்குரிய ஒரு பெரும் இடம்**

பாளையங்கோட்டை எனக்கு வாழ்நாளில் நினைவிற்குரிய ஒரு பெரும் இடம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்கே வந்து, என்னைத் தட்டிக்கொடுத்து தைரியமூட்டிய இடம் பாளையங்கோட்டை. பாளையங்கோட்டை சிறைச்சாலை என்னுடைய வாழ்நாளிலே ஒரு முக்கியமான பகுதி.

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மூன்றாவது அணைக்கட்டான கன்னடியன் அணைக்கட்டில் வெள்ளத் தடுப்புக்கரை (Flood Bank) அமைப்பது உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்;

கன்னடியன் கால்வாய் தலைப்பில் இருந்து ஆறரை கிலோ மீட்டர் தொலைவு வரை, கால்வாயின் தண்ணீர் கடத்தும் திறனை அதிகப்படுத்தி, கன்னடியன் கால்வாய் ஆயக்கட்டுதாரர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படும்;

அதன்பின், ஆறரை கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பால், எம்.எல்.தேரி வரை, 73 கிலோமீட்டர் நீளத்திற்கு வெள்ள நீர் எடுத்துச்செல்லும் கால்வாய் (flood carrier channel) புதிதாக அமைக்கப்படும்;

இவ்வாறு கால்வாய்கள் மூலம் கருமேனியாறு, பச்சையாறு, நம்பியாறு ஆகிய நதிகள் இணைக்கப்பட்டு, நெல்லை , தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள சாத்தான்குளம், திசையன்விளை போன்ற வறண்ட பகுதிகளுக்குத் தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ள நீர் கொண்டு செல்லப்படும்;

இத்தகைய முறையில் நாம் இந்தியாவின் ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பேசினாலுங்கூட, மற்ற மாநிலங்கள் அதைப்பற்றி பெருமையாகப் பேசினாலும் கூட, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான நீர் வேண்டும் என்று கேட்கிறபோது எவ்வளவோ தடங்கல்கள் – ஏறத்தாழ நாற்பது ஐம்பதாண்டு காலமாக காவேரி பிரச்சினை தீர்ந்தபாடில்லை. எனவேதான் இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களில் உள்ள ஆறுகளின் இணைப்பைவிட, நமக்கு நாமே நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே நதிகளை இணைத்து கூடுமானவரை நம்முடைய தேவையை நிறைவு செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்தை நான் டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிலே எடுத்துரைத்து, அதையேற்றுக்கொண்டு தற்போது நமக்கு நிதி உதவி அளிப்பதற்கும் மத்திய அரசு முன்வரும் என்று எதிர்பார்த்து, மத்திய அரசுக்கு என்னுடைய நன்றியை அதற்காகத் தெரிவித்துக்கொண்டு, அந்த நிதியை விரைவிலே அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருடைய வாழ்த்துகளோடு இந்தத் திட்டத்தை இன்றைக்குத் தொடங்கி வைக்கின்றேன், வணக்கம். ❖

## அண்ணாவின் பொன்மொழி

**கற்றறிவது அவசியம்**

நமது நாகரிகமும் பண்பாடும்
மிகத் தொன்மை வாய்ந்தவை
ஆயினும் அதில் தொய்வு
உண்டாகச் செய்துவிட்டோம்.
காலத்தால் அதில் வடுக்கள்
தோன்றி விட்டன. நமது
உண்மை நாகரிகத்தை
மீண்டும் நிலைநாட்டுவதுடன்
மற்றைய நாட்டாரின்
சாதனைகளிலிருந்தும் நாம்
கற்றறிந்து முன்னேற
வேண்டியது அவசியம்.

# என்னுடைய உடம்பிலே கடைசி மூச்சு இருக்கிற வரையில் மக்கள் பிரச்சினைகளுக்காக, ஏழை, எளியவர்களுக்காக, நாட்டு நன்மைக்காக பாடுபடுவேன்

சென்னை, இராமச்சந்திரா மருத்துவமனையில்
இருந்தவாறே காணொலித்திரை மூலம்,
22.2.2009 அன்று நடைபெற்ற
பி.எஸ்.என்.எல். 3 ஜி மூன்றாம் தலைமுறை சேவையினைத்
தொடங்கிவைத்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை :–

அன்பார்ந்த பி.எஸ்.என்.எல். 3 ஜி மூன்றாம் தலைமுறை சேவையின் முதல் அழைப்பைப் பெறும் மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர், தம்பி ஆ. இராசா அவர்களே, அமைச்சர் அருமைத் தம்பி பொன்முடி அவர்களே, தொலை தொடர்புத் துறையின் செயலாளர், பெகூரா, ஐ.ஏ.எஸ்., அவர்களே, பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் தலைவர் கோயல் அவர்களே, சென்னை தொலைத் தொடர்பு மண்டலத்தின் மேலாளர் வேலுச்சாமி அவர்களே, அரசு அதிகாரிகளே, அருமை உடன்பிறப்புக்களே, இன்று தகவல் தொழில் நுட்பத்தில் நவீன சேவையான – செல்போனில் – வீடியோ வசதி வழங்கும் 3 ஜி எனப்படும் மூன்றாம் தலைமுறை சேவையை பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் மூலம் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

சில வளர்ந்த நாடுகளில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டு – நடப்பில் உள்ள இச்சேவை – தற்போது முதன் முதலாக இந்தியாவிலும் – பொதுத்துறை






நிறுவனமான – பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் மூலம் – குறிப்பாக இந்தியாவிலேயே சென்னையிலே தொடங்கப்படுவது எனக்கு மிகுந்த மனநிறைவை அளிப்பதாகும்.

கடந்த சில வாரங்களாக நான் மருத்துவமனையிலே இருக்கும் நிலையில் – நேரடியாக இந்த விழாவில் கலந்து கொண்டு உங்களைச் சந்திக்க இயலாமல் – ஏற்கெனவே தம்பி ராஜாவிடம் கொடுத்த ஒப்புதலுக்கேற்ப – மருத்துவமனையிலே இருந்தாலும் மக்கள் பணி தொடர வேண்டுமென்ற எண்ணத்தோடு, கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்றுகின்ற வகையிலும் இந்தத் தொலை ஒளிபரப்பு மூலமாக இந்தச் சேவையை தொடங்கி வைப்பதிலும், உங்களிடம் சில வார்த்தைகளைப் பேசுவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தச் சேவை இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகத்திற்கு வரக் காரணமாக இருந்த தம்பி ராஜாவிற்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு – டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பல்வேறு சாதனைகளோடு கலந்து தமிழகத்தில் நடைபெறுகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைகளும் இணைந்து இன்று இந்திய நாட்டு மக்கள், தென்னாட்டு மக்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்தோடு, உவகையோடு இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து ஒரே நேரத்தில் ஏழையெளிய மக்களுக்காக நடத்துகின்ற இது போன்ற சாதனைகளை நாம் என்றைக்கும் நிரந்தர சரித்திரக் கல்வெட்டுக்களாக ஆக்குகின்றோம்.

இவ்வளவு நெருக்கடியான நேரத்திலும் என்னுடைய உடல் நிலையில் பெரியதோர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் எல்லாம் வலியுறுத்தியிருந்த போதிலும் அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல், நான் இங்கே வந்திருப்பது – என்னுடைய உடம்பிலே ஒரு துளி ரத்தம் ஓட்டிக் கொண்டிருந்தாலும் என்னுடைய உடம்பிலே கடைசி மூச்சு இருக்கிற வரையில் மக்கள் பிரச்சினைகளுக்காக, ஏழையெளியவர்களுக்காக, நாட்டு நன்மைக்காக பாடுபடுவேன் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு அடையாளமாகத்தான் நான் உங்களிடத்திலே இன்னொரு செய்தியையும் சொல்லவேண்டும்.

**மார்ச் முதல் 50 காசில் பேச பி.எஸ்.என்.எல் – நிறுவனம் திட்டம்**

புதிய தொழில்நுட்ப சேவையை ஏழையெளிய மக்களுக்கு பயன்படத்தக்க வகையில் அறிமுகப்படுத்தும் பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கும் – இதற்கு முழு முதல் காரணமாக இருந்து பணியாற்றும் தம்பி ராஜாவிற்கும் – இதனைக் கொண்டுவரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவில் எங்கிருந்தும் செல்போனில் ஒரு ரூபாயில் பேச ஏற்கெனவே அமைச்சராக இருந்த தம்பி தயாநிதி மாறன் அறிமுகப்படுத்திய "ஒன் இண்டியா" (One India) திட்டம் போல் – மற்றொரு திட்டம், பி.எஸ்.என்.எல். நிறுவனத்தால் வரும் மார்ச் திங்கள் 1ஆம் தேதி முதல் – "இண்டியா கோல்டன் 50" (India-Golden 50) என்ற பெயரில் அறிமுகமாக உள்ளது.

இந்தியாவில் எங்கிருந்தும் ஐம்பது பைசாவில் பேச வாய்ப்பளிக்கும் இத்திட்டம் மக்களின் பயன்பாட்டிற்கும் – பி.எஸ்.என்.எல். வளர்ச்சிக்கும் உதவிடும் என நம்புகிறேன். ஒரு ரூபாய்க்குப் பேசலாம், ஐம்பது பைசாவிற்குப் பேசலாம் என்றெல்லாம் சொல்வது யார் என்றால், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு தர முடியுமென்று இந்தியாவிலேயே இன்றைக்கு நிரூபித்துக்காட்டிய கருணாநிதி என்பதை தெரிவித்து – கருணாநிதி என்றைக்கும் ஏழையெளியவர்களுடைய அன்பனாக – பாட்டாளி மக்களின் தோழனாக இருப்பான் என்பதற்கும் உறுதி கூறி, இந்த அரசை நீடிக்க விடுங்கள், மத்திய அரசை வாழ விடுங்கள், மத்திய அரசையும் மாநில அரசையும் ஒன்றுபடுத்தி யிருக்கின்ற ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுங்கள், இறையாண்மையைக் காப்பாற்ற முன்வாருங்கள். வன்முறைகளால் நாட்டிலே உள்ள நன்முறைகளைக் கெடுக்காதீர்கள் என்று எல்லோருக்கும் வேண்டுகோள் விடுத்து, இந்த இனிய விழாவிலே கலந்து கொள்ளச் செய்த அன்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

## தமிழகத்தைச் சேர்ந்த இசையமைப்பாளர் திரு. ஏ.ஆர்.ரகுமான் அவர்களுக்கு ஆஸ்கர் விருது

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்து



இசை என்றாலே தமிழில் புகழ் என்று தான் பொருள். அந்தப் பொருளுக்கு ஏற்ப பூத்து, மலர்ந்து, புகழ் பெருக்கி இன்று சிகரத்திற்கே சென்று – சிரித்த முகத்தோடு நம்முடைய வாழ்த்துகளைப் பெறுகிற – சென்னையில் பிறந்த செல்வன் ஏ.ஆர்.ரகுமான். இவருக்குக் கிடைத்துள்ள ஆஸ்கர் விருதுகள் கண்டு முத்தமிழே முறுவலிக்கிறது.

சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இந்தச் செல்வம் இன்று ஆஸ்கர் விருதுகளைப் பெற்றதின் மூலம் தரணிவாழ் கலைஞர்கள் உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றுவிட்டார். குறிப்பாகவும் சிறப்பாகவும் உரிமையோடு சொல்ல வேண்டுமானால் இது நம் வீட்டுப் பிள்ளைக்குக் கிடைத்த மிகப் பெரிய கீர்த்தி – சிறப்பு – பெருமை. ரகுமான் புகழ் மகுடத்தில் இந்த ஆஸ்கர் பதித்துள்ள மாணிக்க, மரகதக் கற்களாக இந்த விருதுகளை நான் கருதுகிறேன்.

தமிழ்நாடும், தமிழ்நாடு அரசும், அதற்குத் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிற நானும், தமிழ்நாட்டின் ஆறு கோடி மக்களும், ஏன் இந்தியத் திருநாட்டின் நூறு கோடி மக்களும், உலகக் கலைஞர்களும் மலர் தூவி, வரவேற்று, மகிழ்ச்சியைத் தெரிவித்து – மாசற்ற மனதோடு சேயாகப் பாவித்து – தாயாக நின்று வாழ்த்துகிறபோது – அந்த வாழ்த்துகளில் என் வாழ்த்துகளும் இணைகிறது.

**வாழ்க ரகுமான்!**

ஆஸ்கர் விருதுகள் பெற்ற அருமைத் தம்பி இன்னும் ஆயிரம் ஆயிரம் விருதுகள் பெற வாழ்த்துகிறேன். ❖

# மழை!

– அறிஞர் அண்ணா



## வாழ்த்து

வயலைச் செழிப்பாக்க! வாழ்வைச் செழிப்பாக்க!
வறண்ட இடங்களுக்குப் புத்துயிர், புது எழில்!

நான் என்ன செய்வேன் – என்னால் இயன்ற அளவு ஊட்டம் கொடுத்தேன் – இனி என்னிடம் என்ன இருக்கிறது. உங்களுக்குத் தர! நான் வறண்டு விட்டேன் – நீங்கள் சாய்ந்து போகீறீர்கள்! உங்கள் நிலை கண்டு, என் நெஞ்சம், பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கிறது! என்னை நம்பிப் பயனில்லை – நான் வறண்டு கிடக்கிறேன்!! – என்று கூறிடுவது போலத் தோற்றம் பெற்ற பூமிக்கு, புதுப் பொலிவு தருகிறது மழை! வாடிய செடி கொடிகளுக்கு நீருட்ட முடியும் இனி!

சாய்ந்து கிடந்தவை அனைத்தும் இனி நிமிர்ந்து நின்றிடும்!
வலிவற்றுப் போனவைகளெல்லாம், இனி ஆடி மகிழ்ந்திடும்!

பட்டுப்போக இருந்தவைகளெல்லாம், துளிர்விடுகின்றன. பசுமை! வளம்! பாங்கு! எங்கும்!!
ஏங்கிக் கிடந்தவையாவும் எழில் குலுங்கும் புது நிலை பெற்றுவிட்டன – மங்கி மடிய இருந்ததனைத்தையும் மழை மகிழ்ச்சி பொங்கிடும் நிலைக்குக் கொணர்ந்து விட்டது.

இத்தனை அழகு இதுநாள்வரை எங்கு மறைந்திருந்தது! கோலம் கண்டு களிப்படையாதார் எவர்! எனினும் நேற்றுவரை சோர்ந்து கிடந்தனவே!!

மாமருந்தோ, மழை!
வானளித்த விருந்தோ!
வாழ்வளிக்கும்,
வள்ளலோ, மழை!!

ஓவியனைக் கூவி அழைத்து, உன் திறமனைத்தும் காட்டிட வாய்ப்பு இதோ! வண்ணம் வகை வகையாக! வடிவம் பலப்பலவாக! எண்ணம் பல கொண்டிருந்திருப்பாய், எழில் குறித்து, ஈங்கு காண்பாய், எழிலின் வகையும் வடிவமும்!

இச்சை கொள்ளச் செய்யும் பச்சை

இடையிடையே; வெட்கத்துடன் நிற்கும் வேல் விழியாள் முகம்போன்ற சிகப்பு – சின்னஞ் சிறு மலராகி, சிரித்தபடி இருத்தல் காண்பாய்.

தங்க இடமின்றி தவித்த புள்ளினங்கள், எங்கும் வட்டமிட, இசைபலவும் எழுப்பிடும் சோலை அழகு காண்பாய்! இஃது மழை காணாத போது, பாலை எனக் கிடந்தது; பாங்கு பெற்றது மழையதனால் அறிந்திடுவாய்.

வளம் பொங்கி வழிந்திடுது. வாய்க்கால் எனும் பெயரால்!

வட்டிலில் வடித்த தேனைத் தொட்டு வாயிடை இட்டு மகிழ்ந்திடும் பான்மைபோல, சின்னஞ் சிறு பறவை இனம், சீர் பருகி நிற்பது பார்!

என்ன இனி வேண்டும், நின் எண்ணம், வடிவம் பெற!

நீலநிறம் மேலே! ஆங்கு நீந்திடும் வெண்முகிலும்!

கீழே பச்சை!

அதில், பல வண்ணம், பல வடிவு! அவை மலர்!!

பாடி மகிழ்வது கேள் – பண்பாடும் திறனை, பறவை இனம் மட்டுமல்ல, தாவரத் தருக்களும் தன்னளவில் பெற்றுள்ளன, வாழ்வளித்த மாமழைக்கு வாழ்த்திசைக்கும் வகை, ஒலியாம்!

துள்ளி ஓடிவரும், கன்றினங்கள், தாயமுது இங்கும் உளதென்று நீர்நிலைகள் கண்டியம்பும்!

உண்பீர், உடன் செல்வீர்! யாமோ, மடியிற் புரண்டிருப்போம், மதுரம் பருகிடுவோம் என்று கூறவோதான், கெண்டைகளின் இத்துள்ளல்! எனக்காக உமை வளர்க்கும் என் தாயன்றோ அருவி! என்றுரைக்கக் காணோம், எனினும் எடுத்துண்டு குருகும். என் அன்னை! என் அன்னை! என்றொலித்துப் பறந்து செல்லும்.

ஏற்றம் இறைப்போர்க்கு, இல்லை இடுப்புவலி!
என்செய்வோம், பயிரில்லை எனும் பேச்சுக்கு
இடமில்லை!
மாமழைதான் பெய்தது, மாறிற்று சோகநிலை!

வெற்றி முரசு கொட்டி, விருதுபல ஆடிடவே, கொற்றம் உலாவந்த கோலம்போல், மாமழையும், இடியொடு கிளம்பி, ஏற்றம் பொழிந்தது! மாற்றம் மலர்ந்தது!

என்ன உன் எண்ணம்? எவை வேண்டும், கூறிடுவாய் என்றே இறை கேட்கின், மனை வேண்டும், மணம் வேண்டும், மலர் வேண்டும், மகிழ்ச்சி வேண்டும், பொன் வேண்டும், பொருள் வேண்டும், தொழில் வேண்டும், எழில் வேண்டும், தோகை மயிலனையாள் தொட்டிழுத்து மகவுதனை, என் மடியிற் கிடத்திவிட்டு கன்றை இழுத்துவந்து தொழுவத்தில் விடக்கண்டு, களித்திருக்கும் நிலை வேண்டும்! வந்தார்க்கு உணவளித்து வாழ்வின்பம் பெறல் வேண்டும். வண்ணக் கலைகள் பல வளர்ந்திடவும், நுகர்ந்திடவும், வாய்ப்புப் பெறவேண்டும், சாயாக் கோலும், சருகாகா வாலிபமும், காயா மனமும், கருகா முயற்சிகளும்; பெற்றெவரும் சீர்வாழ்வு நடத்திடக் காணல்வேண்டும்!

ஆடிடும் மாமயிலும், இசை பாடிடும் கருங்குயிலும், இசை மட்டும் பெற்றனையே, என் அழகு உனக்குண்டோ என்று கொஞ்சு மொழியாலே கேட்டிடும் கிள்ளைகளும், தெங்கும் நுங்கும், தேன் சொட்டும் பல கனியும், எங்கும் நிறைந்துள்ள ஏற்றம், எழில், யாவும், கண்டு களிப்பெய்தி, பண்பாடி மகிழ்ந்திட வேண்டும்.

கலக்கம் காலம் விளைவித்தல், காச்சல் கபடம், களவு எனும் கேடுபல, துளியும் இலாதொழிந்து, வாழ்கின்றோம் வாழ்கின்றார் என்று எவரும் கூறி, அமைதியுடன் அகமகிழ்வு பெறத்தக்க வகையுடனே, அமைந்த ஓர் வாழ்வுமுறை வெற்றித் திருவுடனே, விளங்கிட நான் காணல் வேண்டும்! – என்று பலப் பலவும் இயம்பி, பின் எண்ணி, இயம்ப மறந்திட்டேன். இனிக் கேளிர், மேலும் சில, என்று இழுத்துப் பேசி இடர்ப்பட வேண்டாம் – வேண்டுவது என்ன என்பதற்கே, ஒன்று உரைத்திடலாம், உள்ளத்தில் தோன்றிடும் ஒராயிரமும் அதில் அடங்கும்; வேண்டுவது மழை – வேறென்ன வேண்டும் – வேண்டுவது என்னெனினும் பெற்றளிக்கும், மாமழை காண்! எனவே, எமக்கு அது போதும்!! – என்று கூறிலாம்!! எவரும் மறுப்புரைக்கார்.

அரசு, அதுகாக்கும் போர் முரசு, முரசறையும் வீரர் குழாம், அவர், வாழும் சீரூர்கள், யாவும் அமைந்திட வேண்டும், பல பொருட்கள் – ஆம்! ஆயின், எப்பொருளும் ஒருபொருளின் துணையின்றி கிடைத்திடாது அப்பொருளே, – மாமழை இயற்கையின் கருஊலம்!!

தாயின் முகம் காணா சேயனையராவர் காண், மழை காணா மாந்தரவர்!

**ஏருண்டு, சீரில்லை!**
**ஊருண்டு, உணவில்லை!**
**பேருக்கு அரசு உண்டு, பெறும் பலன் யாதும் இல்லை!**
**ஏடுண்டு, எடுப்பார் இல்லை!**
**இசை உண்டு, கேட்பார் இல்லை**

எங்குண்டு இந்நிலையோ வென்னில் எதற்கும் 'விசை' யாகும் மாமழைதான் பொய்த்திடும் இடமதில்! எழுதிக் காட்டிடலாம், காணும் வகைபெறுமோ, ஓவியக் கண்!

அஃதேபோல், இயற்கை அளித்த பல ஏற்றமிகு ஓவியமும், இன்னுயிர் பெற்று மன்னுயிர் காத்திட மாமழை வேண்டும்.

அஃதின்றேல், வயல் உலரும் வாழ்வுலரும், மனம் உலரும் ஆகலினான், உலரும் பண்பு எலாம்!

எனவே மாமழையே, தாயாவாள், அம்மட்டோ! மன்றம் அமைத்து ஆன்றோர் அன்று அளித்திட்ட மாண்புகள் மாய்ந்திடாது காப்பாவாள் காண்கிலையோ!!

அறிந்தே, இளங்கோவும், அழகு தமிழ்க் காப்பியத்தில், அமைத்தார். நல்வாழ்த்து, மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்! என்று.

ஆம்! உண்மை! மறுப்பில்லை! என்பீர்கள்!

எனினும், நண்பர்களே! அம்மழையே, பெய்திடும் வேளைதனில், நலமே பெறுகின்றோம் என்றா, எவரெவரும் வாழ்த்துகின்றார்.

**வசவு**

செய் தொழிலைப் பாழாக்கும் பாழ் மழையே! வழி தடுத்து இடரிழைக்கும் வன்மழையே!

வண்ணம் வகை கெடுத்து தொல்லைதரும் மழையே!

பண்டம் விற்றிடவே பரிந்து சென்ற வேளையிலே, விரைந்து வந்தென் வேலையினை வீணாக்கினாய் மழையே!

ஆடை நனைத்திட்டாய், மாடுமனை கெடுத்திட்டாய், ஓடை உடைந்ததுன்னால், ஒருகேடா, நீ செய்தாய்?

ஏழிசையில் வல்லவளாம், எழில்மிக்க இளமங்கை, கேட்டின்பம் பெற்றிடவே கடுகி நடந்து செய்றேன், காற்றோடு நின்றுவிடும், கனத்திடாது என்றெண்ணி நான் நடக்க, கருத்துப் பெருத்து, கடகடவெனச் சிரித்து, கண்ணைப் பறித்திடும் ஒளி உமிழ்ந்து, கட்டின்றிப் பொழிந்திட்டாய், கலைக்கூடம் சென்ற எனை மீண்டும் மனைக்கூடம் சிறை வைத்தாய், நினைத்தால் உலைக்கூடம் ஆகுது என் மனம் உனக்கென்ன, உமிழ்கின்றாய் ஓயாமல்!

வந்தோம் சென்றோம் என்றால் வாழ்த்தலாம் விருந்தினரை, வந்தேன், நீ நொந்தாலும் செல்லேன் விரைந்து என்று கூறி இருந்திடல் பண்பல்லவே!

வேகம் குறையுது, அளவும் அதுபோல்; வெளுத்திடும் குறிகள் தோன்றின என்பர், நீயோ கூறுவோர் தமைக் கேலி செய்திடும் போக்கிலே, கொட்டுகிறாய் உன் வெற்றி! உள்ளோர், உள்ளிருந்தே உன் தாக்குதலைப் பெறாமல், உண்டு மகிழ்ந்திருப்பர். உரையாடிக் கிடந்திடுவர்; உழைத்துப் பிழைத்திடவே மனித உருவமாய் உள்ளவர்கள், என் செய்வர் வீடிருந்து? எப்படித்தான் உண்பர்? பொழிகின்றாய், சோறும் கறியுமல்ல!!

ஆண்டை அழைத்தாராம் – அவருக்கோ வெகு எளிதில் மூண்டுவிடும் கடுங்கோபம் – சென்று செய்திடல் வேண்டும் வேலை பல – செல்லும் வழியோ நெடுந்தூரம் செல்வது இயலாதே, உன்னாலன்றோ வந்தது இத்தீது!

சாந்து பூசிவிட்டார், நாளை அது உலர்ந்து, நலமளிக்கும் மனிதனுக்கு என்றெண்ணி உறங்குகையில் யான் செய்த தீங்கென்ன, வந்தழித்தாய் பூசினதை.

போதாதோ அக்கேடு? கட்டியது அனைத்தும் கரைந்த தன்றோ வீழ்ந்தது, கனமழையால், வெட்டினேனா இந்தக் குளம்? என் வீடா, இந்தக் கதி? என்று நான் திகைத்து, ஏதோ ஓர் மண்டபம் சென்றன்றோ இருந்திட்டேன் – ஏன் செய்தாய் இக்கொடுமை, பேய் மழையே! பேய் மழையே!

இன்று கூடுது இலுப்பூர் சந்தை! எடுத்துச் சென்று இதனை விற்றால், ஏதோ சிறிது ஈட்டலாம் பொருளென்று, இருப்பதைக் கொடுத்து இப்பொருள் பெற்றேன், என்ன செய்தனை! என்ன செய்தனை! ஏக இயலா நிலையன்றோ உன்னால்

என் பொருள் இங்கே! கொள்வார் எங்கே? இன்று போயினென், நாளை செல் என்பாய்? நாளை நானிருப்பேன், ஒப்பலாம்! என் பொருள் இருக்குமோ, கெட்டிடாமல், கெட்டிடின் எவர் கேட்பர் விரும்பி! விற்பதெங்கனம், விலையன்றோ சரிந்திடும்! ஈட்டலாம் என்ற என் எண்ணம் மண்ணாகிப்போக, நீயோ மண்ணெலாம் குழப்பினாய் என் மனமும் குழப்பினாய், மழையே நன்று என்று கூறினோர்க்கெல்லாம், மனமே இல்லையோ, வெற்றினமோ அவரெலாம்.

மழைக்குறி தோணுது! மாதவா! கடையில், உள்ள சரக்கினை விற்றிடாதே இனி கிடக்கட்டும் கிடங்கில், பெருமழையானால், பலநாள் பொழியும்! பலநாள் பொழியின், புதுச்சரக்கு வாராதொழியும்! வேண்டுவோர் வருவர், கூறிடும் விலைக்குக் கொள்வர்! கூடை கேட்டால், முறம் அளவும் இல்லை என்று கூறி அனுப்பிடு! நாலு நாள் ஆகட்டும் நமக்கு ஆதாயம் கூடும்! நல்ல வேளையாய், மழையும் வந்தது, நம் வாணிபம் செழித்தது! – என்று கூறி இலாபம் தேடிடும் வணிகருக்கருளவா, வந்தனை மழையே! இல்லாதானை இடரில் தள்ளி, பொல்லாதவரைப் பூரிக்கச் செய்ய, சதியன்றோ இது? மழையா இதன் பெயர்?

அன்றந்த முதியவர், அங்கம் வளர்க்க அரும்பாடுபட்டிடும் அவல நிலையினர், உன்போக்கு அறியாது, தன் வழி சென்றார்; வாய்க்காலாக இருந்த இடமதை படுகுழியாக்கி, நீ, வைத்தது அறியார், நடந்ததார், வீழ்ந்தார், மிதந்தார் – அறியாய்!! தாத்தா சென்றார், தனி வழியதனில், என்ன இடரோ, எத்துணை இன்னலோ, என்றெண்ணிச் சிறுவன், இங்கும் அங்கும் அலைந்தனன் தேடி எதிர்ப்பட்டவர்கள் கூறினர் சேதி – என்ன செய்வான் – பொழிந்தான். 'கண்ணீர்', நீ பொழிந்ததனால் மிதந்தார் தாத்தா – அவன் பொழியும் 'கண்ணீர்' உனை என்ன செய்யும்! ஆயின், அறிவாய் இதனை! அந்நீர் சுட்டிடும் தீயினும்!!

அரசுக்கோ இங்கு ஆயிரம் அலுவல்! அணிபணி வகையினை அறிந்து வந்துரைத்திட, உலகில் சுற்றிட அனுப்புவர் சிலரை – அவர்க்காகும் செலவோ அதிகம். நரை முடி மறைக்கத் தைலம் தேடிடும் கனதனவான் போல், ஆட்சி முறைக்கேட்டினை அறியாது செய்திட பல செயல் வேண்டும் – பெரும் பணம் தேவை! கொட்டு முழக்கும் கோலாகலமும், விண்ணை முட்டும் கொடிமரம் தானும் அதில் பட்டொளி வீசும் பாங்கான கொடியும், அதனை வாழ்த்தி வணங்கிட படைவரிசையும், இஃதெலாம், பெற்றிட, பெரும் பணம் வேண்டும்! கட்டுவோம் கோட்டை, காண்பீர் கோலம் என்று கூறிட விழாப்பல உண்டு – அத்தனைக்கும் ஆகும் செலவு சிறிதல்ல! இத்தனைக்கும் போக, ஏது பணம், அவரிடம். எனினும் எதிர்ப்போர் வாயினைச் சிறிது அடக்கிட இங்கொன்றும் அங்கொன்றும் என்ற முறையில், ஏதோ சிற்சில அமைத்தனர். அதனையும் இடித்தாய், உடைத்தாய், இருக்குமிடம் தெரியாது அழித்தாய்; அறமா? அரசு போதாதோ எமக்கு அல்லல் விளைவிக்க! நீயும் வேறு தேவையோ, கூறாய்!!

குடிசையில் குமுறிச் சாகிறோம் என்று கூவிக்கிடந்தனர், கூலிகள் ஏழைகள் பேச்சு கேட்டு, பெரும் பிழை இஃது; இவர் இருக்கு மட்டும் இருக்கும் இப்பேரொலி – என் செயும் அரசு – அதன் ஏக்கம் போக்கிட இவர் பேச்சொழிதல் வேண்டும் – பேச்சொழிய வேண்டுமேல், இவர் மூச்சொழிதல் வேண்டும் என்று எண்ணியோ வெள்ளமாய் வந்து அவர் உயிர் கவர்ந்தாய்! நீயும் அரசு ஏவும் அழிவுக் கருவியோ! நினக்குப் பெயர் மழை எனல் பெரும் பிழையன்றோ!!

நெய்த நேர்த்தியினை எடுத்துக்காட்டி, வேண்டுவோர்க்கு விற்று, தரும் பொருள் பெற்று, மீண்டும் உழைத்திட வாழ்ந்து கிடப்பர், வகைபல கொண்ட நெசவுத் தொழிலினர் – பொழிந்த கொடுமையால், தொழிலெலாம் கெட்டு, இரு கைகூப்பி, எம் குறை கேளீர், இரு நாட்கள் பட்டினி, இருப்பதைக் கொடுப்பீர் இரக்க முள்ளோரே! என்று இரந்தனர் – நீ என்ன செய்தாய்? – என் ஆற்றல் காணீர், ஆறெல்லாம் பெருக, ஊரெல்லாம் மூழ்க, அச்சம் பொழிவேன் என்று ஆர்ப்பரித்தாய் – வலியோர் எளியோரை வாட்டுதல் அறமல்ல என்பது இங்கு அரிச்சுவடி – அதுவும் அறியா மடமைதான் மழையோ!!

கட்டிக் கொடுத்தனர் எட்டடுக்கு! அவர்க்கு காடல்ல, நாடுதான் வாழ்விடம் – எனினும், வீடில்லை, வீதியில்லை, சேறான ஆற்றோரம், அங்கு, சிறு குடில்கள், தானமைத்து, பேருக்கு மானிடராய், பிழைத்திருந்தார், உழைப்பதற்கே! பெருமழையால் ஆறு சீறி பசி கண்டீர், பாதகம் கண்டீர், எட்டிப் போடா

மூடா! எதிர்த்தால் அடைப்பேன் சிறையில்! என்று ஆர்ப்பரிக்கும் ஆதிக்கக்காரர் தம் அமுல் கண்டீர்! எனினும் இருக்கின்றீர்! என்னே உம் துணிவு! எல்லாம் தாங்கிடுவோம் என் செய்வோம் என்றுள்ளீர்! இது பாரீர்! பாய்ந்துவரும் அழிவு இது! தாங்குவதற்கு ஆற்றல் உண்டோ? என்று இரைச்சலிட்டு குடிலெல்லாம் கூளமாகி அடித்துக்கொண்டு போகும் விதம் வெள்ளப் பெருக்கெடுத்து ஏழையரின் நெஞ்சுக்கு நெருப்பானீர் – பெயர் மட்டும் மழையாமே!!

அடக்கம் வேண்டும் என்பார் – அளவறிதல் அறிவென்பார் – இடமறிந்து செயல் புரிதல் இனிய நற்பண்பென்பார் – நீயோ, எதனையும் ஏற்காமல், எங்கும் நுழைந்து அழிவை ஏவி விட்டாய்! நன்றோ சொல்?

கொடுமை பலபுரிய கூசாக் கெடுமதியோன் என்று அறிந்திருந்தும், ஏனோ உனைப் புலவர், வானின்று வாழ்கின்ற பாலென்றும் தேனென்றும், வாயார வாழ்த்தி வழங்கினர் பாமாலை! ஓஹோ! உணர்ந்தனன் உண்மையை! ஊரழிக்கும் உனைத்தடுக்க ஒரு வழியும் அறியாமல், உச்சி குளிர மெச்சிச் சில சொன்னால், அழிவுத்தொழில் நிறுத்தி, அக மகிழ்ந்து கிடந்திடுவாய், அது நன்று என்றெண்ணி, இடக்கர் அடக்கல் எனும் முறைப்படியே, இன்னல் பொழியும் உன்னையும் அன்னார் கன்னல் தமிழில் வாழ்த்தினர் முந்நாள்!

**விளக்கம்**

அழைத்தார் வருந்தி, ஆகவே வந்தேன்! தூயதோர் இடம், தொலைவு, மிகத் தொலைவு! மிகத் தொலைவு! அங்கு நான் இருந்து மகிழ்ந்திட எத்தனை எழிலகம்! எல்லாம் விட்டு இறங்கி வந்து, கடும் கரம்பும் கண்டு வருந்தாது, வளமது சுரக்க, நிலமெலாம் சிறக்க, வள்ளல்கள் எல்லாம் வகையிலே தோற்க, வழங்கினேன், மகிழ! ஏதோ சிற்சில நேர்ந்தன – அழிவு!

ஆயினென்? இத்தனை வளமும் என்னால் என்பதை ஏனோ மறந்து, எனைச்சாடுகின்றீர்? நெருப்போ, நீரும்? முன்னது அழிக்கும் – நீரோ, அழிவைத் தடுக்கும், ஆயிரத்தில் ஏழெட்டுக் குறைய! அஃதும், கூடா நட்புக்கேடாய் முடியும் எனும் பாடம் படித்திடும், உமக்கு நானுரைக்கவோ என்னுடன், காற்றெனும் கொடியோன் கூடிடின், என் செய்வேன்!

பொழிவது அழிவையும் தருவது காண்கிறீர்! இனிமை பயப்பதே இயல்பு எனினும், தேனில் வீழ்ந்திடும் எட்டியைக் கொண்டு, தேனைக் குறைசொலல், தெளிவாகாதலவோ? பொழிவது பலநாள் – அழிவோ சிற்சில! பிறப்பது பலவினும், மாய்வது இவையோ? உழைப்பிலே, ஓர் அளவு வீணாகிடல் இவையோ? பிறவியே கேடோ? உழைப்பே வீணோ? உள்ளம் உண்டு; சொல்வீர் இன்று; எண்ணும் எண்ணம் யாவுமே நன்றோ? தீயன எண்ணுதல், இலையோ அறவே! ஆமெனில், உள்ளம் வேண்டாம், இருப்பின் கேடு, என்றா கூறுவர் நன்மையும் தீமையும் கலந்ததே பொருளே யாயினும் செயலே எனினும், தீமை அகற்றிட வேண்டும், உண்மை! எனினும் முள்ளை நீக்கி மலர் கொள்வதுவும், தோலை நீக்கிப் பழம் உண்பதுவும், முறை எனக்கொண்ட மூதறிவு இலையோ – எனையும் நீவிர் அதுபோற் கொள்வீர். மேலும், வேகம் காட்டிப் பாய்ந்திடும் வேளை, அழிவு நேரிடாது அமைந்திட வழிகள், ஆயிரம் உண்டு அமைத்தது எவரே? குடில்கள் மூழ்கின – கொடுமை – ஒப்புவன் – எனில், கண்டதால் கொண்ட அறிவுதான், என்னை? அழிவு பாய்ந்திடும் வழிதனை விடுத்து, ஏற்றதோர் இடமதில் இருப்பிடம் அமைத்து, ஏழையர் வாழ்விலும் இன்பம் இருந்திட என்ன, நீர் செய்தீர்? எங்கே அவ்வரசு? பண்டம் பதுக்கிடும் பாவிகள் தமக்கு, வாய்ப்பு என்னால் வருகுது என்கிறீர். முற்றிலும் அஃதே உண்மை என்று கொள்வதற்கில்லை, எனினும் சரியென்று கூறி, கேட்கிறேன் உம்மை, எனைச்சாடிட நீவிர் தேடிடல் மடைமை, கொடியர் உம்மெதிர் உளரே, அவர்தம் கொட்டம் அடக்குதல் அரசுக்குக் கடனே! ஏன் உம் அரசு ஏதும் செய்திலை? நானா தடுத்தேன். நல்லரசு வழி! காரணம் ஏதோ தேடி அலைகிறீர் – காண்கிறீர் என்னை, கடிந்துரைக்கிறீர், மழையே இல்லை, மழையே இல்லை என்று கசிந்து நிற்கிறீர்! மழைதான், மழைதான்! என்று மகிழ்ந்துரைக்கிறீர், மழை! இனிக் குறைவிலை! என்று பேசிக் களிக்கிறீர்.

மழை, அதனால்! என்று மயக்கிப் பேசி வணிகன் இலாபம், பறிக்கப்பார்க்கிறான் – மழை! அதனால் என்ன? அதனால் என்ன? என்று அதட்டிப் பேசிட ஆற்றல் உமக்கு இல்லை! அரசு எவர் பக்கமோ என்று புரியா நிலை உமக்கு. அதனால் வருவதே, பல தொல்லை! அதற்கு என் மீதோ கடும்சொல்லை

வீசுவது. அது கேட்டு, நான் பொழிவதை நிறுத்திக் கொள்ளவா முடிகிறது!

சூல்கொண்ட மேகம், துடிக்கிறது, பாரம் தாங்கமாட்டாமல், என் செய்யும்? நான் வெளியேறினால் தான், வேதனை தீருகிறது மேகத் திரளுக்கு வருகிறேன், பொழிகிறேன்; வாழ்த்துகிறீர் சிலவேலை; தூற்றுகிறீர் சில சமயம். வாழ்த்தும்போது தேனாகவும் மாறிட முடியாது, தூற்றும்போது, மீண்டும் மேகத்துக்குள் சென்று ஒளிந்து கொண்டு விடவும் இயலாது. கீழே வருகிறேன்! வரவேற்புப் பெறுகிறேன்! ஆனால் நான் செல்லச் சரியான பாதை உண்டா? இல்லை! தங்கிட முறையான இடங்கள் உள்ளனவா? கிடையாது! விரிந்து, நெடுந்தூரம் பரந்து கிடக்கும் வழியை நாடிச் செல்கிறேன் – ஆறு என்கிறீர்களே, அதனைத்தான் கூறுகிறேன்; அதனை ஒழுங்குற வைத்திருந்தால், எனக்கும் இல்லை தொல்லை; ஊருக்கும் ஆபத்து இல்லை. மண்மேடுகள் தடுக்கின்றன! என் வேகத்தைத் தடுத்து, தேக்கி வைத்துப் பயன் பெறலாம் – அதனையும் செய்கின்றிர்களில்லை, ஏரி என்கிறீர்கள் – கரை, காப்பளிக்கவில்லை, குளம் என்கிறீர்கள், என் வேகம் பொறாமல் குமுறி உடைபட்டுப் போகிறது நான் – என்ன செய்வேன்.

என்னை வாழ்த்தி, வரவேற்றுப் பயன்பெற்ற மக்கள் ஒரு ஊர் என்றால், அதற்கு உள்ளேயும், வெளிப்புறங்களிலும், நான் வந்து இருக்க ஏரிகளையும், குளங்களையும் அமைத்து வைத்திருந்தனர், இப்போது? ஏரிகள் தூர்க்கப்பட்டுப் புது ஊர்களாக்கப்பட்டு விடுகின்றன! ஆற்றோரம், குடில்கள் மயமாகி விடுகின்றன! கடல் ஒன்றே அன்றுபோல் இன்றும் அளித்திடுது அடைக்கலம்.

ஊர்களிலே, எனக்கென்று முன்பு இருந்த இடமெல்லாம் பறித்துக் கொண்டீர்கள், ஒவ்வொன்றாய்; என்செய்வேன்? ஒழுங்காகத் தங்கி இருக்க இடமில்லை! கண்ட இடத்தில் நடமாடக் காலம் வந்தது, அதனால் காண்கிறீர், அழிவு என் மீதோ குற்றம்! காரணம் புரியாமல் கடுமொழி பேசுகிறீர் கவலை நான் கொள்ள கருத்தற்றோ உள்ளேன்? குறைமதியாளரின் கூற்று அதுவென்று தள்ளிவிடுகிறேன். நிறைமதியாளர்களாம், நீடுபுகழ் புலவோர்கள் வாழ்த்திப் பாடியுள்ள பாடல் வகை எல்லாம் நான் எண்ணி மகிழ்ந்து உலவுகின்றேன். மாந்தர்தம் தோழனாய் தம் குறை அறியாது தூற்றும் பேதைகள் என்றெண்ணிக் கொள்கிறேன். உச்சிமேல்வைத்து, நீவிர் போற்றும் புலவர்களின் பாவினிலே, நல்லிடம் நான் பெற்றுத் திகழ்கிறேன் அது போதும் எனக்கு.

'வான் சிறப்பு' கூறியவர், வள்ளுவர் அவர் தாமும் இறை வணக்கம் கூறியதும், எனைத்தான் அழைத்தார் காண். அகர முதல எழுத்தென்று ஆதாரம்தனைக் காட்டி, ஆதிபகவனை நினைவூட்டி நின்ற பின்னர், உலகுய்ய மழை தேவை, என்றுணர்ந்த பெரியோனும், நற்றாள் தொழுதிடுவோர் நல்வாழ்வு தானும்பெற, வானம் பொய்த்திடாத நிலைவேண்டும் என்றறிந்து, வான் சிறப்பு தானுரைத்து, தந்தார் நல்லிடம் எனக்கே! எனினும் அவர்கூட நற்றாளை வணங்கென்று நவின்றார் இறை குறித்து, பொன்னாடாய் எந்நாடும் பொலிவு பெற ஏற்றதோர் நலம் பொழியும் எனை வணங்கக் கூறிடாதது, குறையே! ஆம்! அன்று! குறையுண்டோ குறளதனில்! தனக்கு வலிமையில்லாதவன், தாள்சேர்ந்தார்க்கன்றி, தாரான் பெரு மகிழ்வு என்று, கொடுத்துப்பெற்றிடும் வாணிபம் ஆக்கினார்! எனக்கோ என்னில், ஏத்திட வேண்டாம், தாள் பணிந்திட வேண்டாம், எல்லா வளமும் என்னால் பெறலாம், எனக்கென ஏதும் தாராமலேதான்! இந்த என் இயல்பை அனைவரும் அறிந்ததிடவன்றோ வள்ளுவர், எனக்கெனப் பூசனை கூறாது நின்றார்.

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என் ஆற்றுங் கொல்லோ · உலகு.**

என்றுரைத்தார் பெருந்தகையார்.

இத்தகு மேலோன்! என்னும் எனையும் ஏசுவதுண்டெனில், மாசுடை மனதினர் மாந்தர் ஆதலால், மழையையும் தூற்றித் தம் தாழ்நிலை காட்டுவர். இடி இடியென்ற சிரிப்பொலி கேட்டிடும்போதெலாம், எண்ணுவது இதனையோ, எங்ஙனம் அறிவீர், நீவிர், பிழை பல பொறுத்து யாம், பொழிகுவம் மீண்டும்! வாழ்க நீவிர், வழங்கினோம் பல்வளம்.

(திராவிடநாடு பொங்கல் மலர் – 1961)

* * *

# திருப்பூர் மாவட்டம் உதயமானது!

தமிழகத்தின் 32–ஆவது மாவட்டமாக உதயமாகியுள்ள திருப்பூர் மாவட்டத்தினை எழில்ததும்ப நடைபெற்ற பிரமாண்டமான விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும் இவ்விழாவில் ஏறத்தாழ 103 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டப் பணிகளையும் புதிதாக சூலூர் வருவாய் வட்டத்தினையும் மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் 32–ஆவது மாவட்டமாக உதயமாகியுள்ளது, திருப்பூர் மாவட்டம்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி

மற்றும்

உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தொடங்கி வைத்தார்.




தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் திருப்பூர் மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாகியுள்ள இம்மாவட்டத்தின் தொடக்க விழா 22.2.2009 அன்று மாலை 4 மணிக்கு திருப்பூர் இடுவம்பாளையம் அரசு மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் வருகையையொட்டி கோவை, திருப்பூர் மாவட்டங்களே விழாக்கோலம் பூண்டன.

“விழா நடைபெற்ற இடுவம்பாளையத்தில் திருப்பூர் மாவட்ட மக்களெலாம் திரண்டனரோ!” என வியக்கும் வகையில் எங்கு நோக்கினும் மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர்.

பல்லாயிரவர் கலந்து கொள்ளும்படியாக அமைக்கப்பட்டிருந்த விழா அரங்கில், எள் விழவும் இடமிலாத வகையில் மக்கள் குழுமியிருந்தார்கள்.

விழாவில் பங்கேற்க வருகை தந்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுச்சிமிகு வரவேற்பளிக்கப்பட்டது.

வழி நெடுக பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் சாலைகள் நெடுகிலும் அரண்போல் அணிவகுத்து நின்று கரம் அசைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை வரவேற்றார்கள்.

திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்திய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டியது தங்களது கடமை எனும் கடப்பாட்டுணர்வோடு மக்கள் திரண்டிருந்தது, எழுச்சி மிகு காட்சியாகும்.

விழா மாலை 4 மணியளவில் சீரோடும் சிறப்போடும் தொடங்கியது.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் தலைமை வகித்து உரையாற்றினார்.

மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை இணை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பொங்கலூர் திரு. பழனிச்சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோவில் திரு. மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை உரையாற்றினர்.

விழாவில் அரசின் சார்பில் மாவட்டத்தில் நடைபெறும் 1,686 பணிகள் மற்றும் 3,891 பயனாளிகளுக்கு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் என 102 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேருரையாற்றினார்.

நிறைவாக திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.சமயமூர்த்தி,இ.ஆ.ப., நன்றி கூறினார்.

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழிகள்

**ஆசிரியர்களுக்கு...**



ஏழ்மை நிலையிலும் பெற்றோர்கள் எவ்வளவோ இன்னல்களையும், இடுக்கண்களையும், இழப்புகளையும் தாங்கிக்கொண்டு நம்மைப் படிக்க வைக்கிறார்கள் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நல்லமுறையில் பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும். ஆசிரியர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்று கூறிக்கொள்வேன். எவ்வளவோ ஏழ்மை நிலையிலும் பிள்ளைகள் நம்மிடம் படிக்க வருகிறார்கள். அவர்களின் ஏழ்மையையும் அறியாமையையும் போக்கும் விதத்தில் சீரிய முறையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும்.

# அருந்ததியர் சமுதாயத்தினருக்கு மூன்று சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டம்

அருந்ததியர் சமுதாயத்தினருக்கு மூன்று சதவிகித இடஒதுக்கீடு வழங்கிட வகை செய்யும் சட்ட முன்வடிவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சார்பில் சட்டப்பேரவையில் 26.2.2009 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து தாக்கல் செய்து ஆற்றிய உரை :–

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சட்ட முன்வடிவை முதல்வர் அவர்களே இந்த அவைக்கு வருகைதந்து முன்மொழிவதாக இருந்தார்கள். மருத்துவர்களின் ஆலோசனைப் படி இங்கே அவர் வரமுடியா விட்டாலும் இந்த மன்றத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு மடலை தன் கைப்பட எழுதி அனுப்பி இருக்கிறார்.

**முதல்வர் கலைஞர் அவர்களின் கடித விவரம் வருமாறு:–**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை முன்னவர் அருமைப் பேராசிரியர் அவர்களே,

சட்டப்பேரவை அனைத்துக் கட்சி அன்பு உடன்பிறப்புகளே,

இன்று வந்து உங்களைச் சந்திப்பதாக இருந்தும் கூட டெல்லி மருத்துவரும் சென்னை மருத்துவ நண்பர்கள் குழுவும் அளித்த அறிவுரையாலும் அச்சுறுத்தலாலும் வர இயலவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன்.

நிமிர முடியாமலும், திரும்ப முடியாமலும் ''நங்கூரம்'' போட்டது போல நரம்பிணைந்து முதுகுத் தண்டில் வலி! வலி!

ஒன்று உடல் வலி – பிறிதொன்று நீங்கள் வழங்கியுள்ள மன வலி! கருத்து மாறுபாடு களுக்கிடையிலேயும் நீங்கள் காட்டும் கனிவு– அரசியல் மாச்சரியங்களை மீறி நீங்கள் காட்டும் அன்பு – இன்று நம்மை மீண்டும் இணைக்கிறது – தமிழ்த்தாயின் கரம் நம்மை ஒருசேர அணைக்கிறது. அறிவியக்கம் – ஆன்மீகம் – நாத்திகம் ஆத்திகம் – இந்த வேறுபாடுகள் மாறுபாடுகள் கடந்த நன்றியுணர்வும் நன் மனித நேயமும் வளர்த்திடுவோம்.

ஆரம்பகாலப் பொதுவுடைமைவாதி என்ற முறையிலும் பெரியார், அண்ணா, காமராசர், அண்ணன் ஜீவா போன்றோரின் அருமைத் தொண்டர்களில் ஒருவன் என்ற முறையிலும் – அடிமட்டத்துக்கெல்லாம் அடிமட்டமாகக் கிடந்து அவதியுறும் ''மனித ஜீவன்கள்'' ''அருந்ததி'' மக்கள், புதிய உலகம் – புரட்சியுகம் – காண்பதற்காக; இன்று



அவையில் நான் முன்வைக்கும் சட்ட முன்வடிவை; உங்கள் ஆதரவு வழங்கி; நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்

உங்கள் அன்பு நதியில் – என்றும் நனைந்திடவே விரும்பி வாழும்;

உடன்பிறப்பு – உங்களில் ஒருவன்

அன்பு மறவாத

**(மு. கருணாநிதி)**
26.2.2009

இராமச்சந்திரா மருத்துவமனை,
போரூர்.

இந்த மசோதாவை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, இச்சட்ட முன்வடிவின்மீது விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் பா.ம.க. தலைவர் திரு. ஜி.கே.மணி, காங்கிரஸ் சார்பில் திரு. பீட்டர் அல்போன்ஸ், அ.தி.மு.க. சார்பில் செங்கோட்டையன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பாலபாரதி, ஜி. கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் பத்மாவதி, சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் ரவிகுமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் வி.பி.துரைசாமி ஆகியோர் பேசினர்.

நிறைவாக அவ்விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

அவரது பதிலுரையை அடுத்து, சட்ட முன்வடிவு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. பேரவையில் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும், சட்ட முன்வடிவை வரவேற்று ஒருமனதாக நிறைவேற்றித் தந்தனர். ★

# சமூக நீதிக்கான அடித்தளத்தை உருவாக்கியவர்களின் வழித்தோன்றல்கள் நாம்



மாண்புமிகு
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
26.2.2009 அன்று
சட்டப்பேரவையில் அருந்ததியர்
இட ஒதுக்கீடு
சட்ட முன்வடிவின் மீதான
விவாதத்திற்குப்
பதிலளித்து
ஆற்றிய
உரைவருமாறு:-

"**பா**தி நகரம்–பாதி கிராமம் என இன்றும்கூட பகுதிகள் பல இருக்கவே செய்கின்றன.

அங்கெல்லாம்;

வைரமணி, முத்துவடம்,

வயிறு மறையும் வரையில்

பச்சை மரகதப் பதக்கம்

இச்சை அடங்கப் பூட்டிக் கொண்டு

எடுப்பு சிறப்பாக வாழுகின்ற ஏழடுக்கு வீட்டுக்காரன்

எப்படியோ ஆனவன் திடீர்ப் பணக்காரன் –

"இயற்கை உபாதை" கழிப்பதற்கு – அவன்

இல்லத்துத் தோட்டத்துக் கழிவறை செல்லும்போது,

மூக்கைத் துளைக்கும் துர்நாற்றத்தால்

மூச்சடைக்கும் எனப் பயந்து – அந்த

வீச்சத்தை மறைப்பதற்கு, வேலையாளர்;

வாசனைத் தைலத்தை ஊற்றித் தெளிப்பார்.

கழிவுற்ற மலத்தைக் கைகளில் அள்ளி –

கண்கலங்க ஒரு தொழிலாளி;

தலையில் சுமந்து தன் நிலையை நினைந்து

நடக்கும் காட்சி இன்னமும் நடக்குதே நாட்டில்!

– என்று; சுயமரியதைச் சுடரொளியைப் பின்பற்றும் நாமெல்லாம் பெரிதும் பதை பதைக்கும் அளவுக்கு, மனித மலத்தைக் கைகளால் அள்ளி, தலையால் சுமந்தும்; கழிவுநீருக்குள் மூச்சடக்கி மூழ்கியும்; தாழ்த்தப்பட்டோருள் மிகவும் தாழ்த்தப்பட்டோராய்– கடைசிப் பிரிவினருள் கடைக்கோடிப் பிரிவினராய் வாழ்ந்துவரும் அருந்ததியர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது

ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்கு தனி உள்ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது'' என்று 23.1.2008 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது.

**ஓய்வு பெற்ற நீதியரசரைக் கொண்ட ஒரு நபர் குழு**

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக 12.3.2008 அன்று சென்னை–தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தில், "அருந்ததியர்களுக்கு தனி உள்ஒதுக்கீடு வழங்கிட, அரசுக்குப் பரிந்துரை செய்ய உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வுபெற்ற நீதியரசரைக் கொண்ட ஒருநபர் குழு அமைப்பதென்றும்; அந்தக் குழுவின் அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் பெற்று, அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவெடுப்பது என்றும்'' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அருந்ததியர் சமுதாயத்தினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் எம். எஸ். ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒருநபர் குழு 25.3.2008 அன்று அமைக்கப்பட்டது.

**இடஒதுக்கீட்டின் பல்வேறு பரிமாணங்கள் விரிவான முறையில் ஆய்வு!**

நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள், அருந்ததியருக்கு தனி இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான அனைத்துப் பரிமாணங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்து; அருந்ததியர் எனப்படுவோருள் அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதி ஆந்திரர், பகடை, மடிகா, தோட்டி ஆகிய பிரிவினரையும் உள்ளடக்கி; அவர்களின் மொத்த மக்கள் தொகை அடிப்படையில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில் – 3 சதவிகித உள் ஒதுக்கீட்டினை வழங்கலாம் எனப் பரிந்துரை செய்து அறிக்கை ஒன்றினை 22.12.2008 அன்று தமிழக அரசுக்கு அளித்தார்.

**அருந்ததியினருக்கு 3 சதவிகிதம் இடஒதுக்கீடு**

2001ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பட்டியல் சாதிகளின் (Scheduled Castes) மொத்த மக்கள் தொகை 1 கோடியே 18 இலட்சத்து 57 ஆயிரத்து 504 என்றும்; அதில் அருந்ததியர்களின் மக்கள் தொகை 18 இலட்சத்து 61 ஆயிரத்து 457 என்றும்; இது பட்டியல் சாதிகளின் மொத்த மக்கள் தொகையில் 15.70 சதவிகிதம் என்றும்; எனவே, நேரடி நியமனங்களில் பட்டியல் சாதிகளுக்கு கிடைக்கத்தக்க இடங்களிலும், கல்வி நிலையங்களின் அனுமதியிலும் அருந்ததியினருக்கு 16 சதவிகிதம் ஒதுக்கீட்டினை வழங்கலாம் என்றும்; அதாவது, பட்டியல் சாதிகளுக்கு வழங்கப்படும் 18 சதவிகித ஒதுக்கீட்டிற்குள் அருந்ததியினருக்கான ஒதுக்கீடு 3 சதவிகிதம் என்ற அளவிற்கு வழங்கலாம் என்றும்; அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ளது.

**தமிழக அமைச்சரவை ஏற்பு**

27.11.2008 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் அளித்த அறிக்கை விரிவாக விவாதிக்கப்பட்டு, அவரது பரிந்துரையை ஏற்றுக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு வழங்குவது சம்பந்தமாக – இந்திய அரசியலைப்புச் சட்டத்தின் பிரிவு – 338(9)இல் குறிப்பிட்டுள்ளபடி, ஆதிதிராவிடர்களுக்கான தேசிய கமிஷனுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

**அருந்ததியர் சமுதாயத்தினர் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்து, வாழ்வாதாரங்களை வலுப்படுத்தி, வளப்படுத்திக் கொள்வதற்காக; அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு பல்வேறு வகையான திட்டங்களை கழக அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபட உதவுவதற்காக 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டமும் கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

இப்படி சட்டரீதியான நடவடிக்கைகள் அனைத்தையும் படிப்படியாக மேற்கொண்டதற்குப் பிறகுதான்; இந்த சட்ட முன்வடிவு இங்கே பேரவையின் பரிசீலனைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

### அருந்ததியருக்கு ரூ.22 கோடியில் மறுவாழ்வுத் திட்டம்!

அருந்ததியர் சமுதாயத்தினர் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்து, வாழ்வாதாரங்களை வலுப்படுத்தி, வளப்படுத்திக் கொள்வதற்காக; அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு பல்வேறு வகையான திட்டங்களை கழக அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபட உதவுவதற்காக 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டமும் கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கருவில் இருக்கும் காலம் முதல் கடைசிக் காலம் வரை வாழ்க்கையின் அனைத்துக் கட்டங்களிலும் அரசின் நிதி உதவி பெற்று அவர்கள் நிம்மதியாக இருப்பதற்கு துப்புரவுப் பணியாளர்கள் நலவாரியம் – காலணி, தோல் பொருள்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நலவாரியம் என நலவாரியங்களையும் கழக அரசு தோற்றுவித்து, பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெற வழி வகுத்தளித்துள்ளது.

மேலும், 2009–2010ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவித்துள்ளபடி, "துப்புரவுப் பணியாளர்கள் கழிவுநீர்க் குழாய்களில் இறங்கி பணிபுரிவதைத் தவிர்க்க, சென்னை மாநகராட்சியிலும் மற்ற 9 நகராட்சிகளிலும் பயன்படுத்துவதற்கு 6.3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடைப்புகளை அகற்றும் இயந்திரங்கள் வரும் நிதியாண்டில் வாங்கப்படும்".

### நீதிக் கட்சியின் வழித்தோன்றல்கள் நாம்!

இந்தியாவிலேயே முதலாவதாக 1921ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கான அரசாணையை வெளியிட்டு, சமூக நீதிக்கான அடித்தளத்தை உருவாக்கிய நீதிக்கட்சியின் வழித்தோன்றல்கள் நாம். இந்தியாவிலேயே முதலாவதாக 1969ஆம் ஆண்டிலேயே சட்டநாதன் அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவை அமைத்தவர்கள் நாம்.

சட்டநாதன் குழு பரிந்துரையின் அடிப்படையில் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவிகிதம் என்றிருந்த இடஒதுக்கீட்டினை 18 சதவிகிதமாகவும்; பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றிருந்த இடஒதுக்கீட்டினை 31 சதவிகிதமாகவும் உயர்த்தி வழங்கியவர்கள் நாம்.

1989ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவிகித இடஒதுக்கீட்டில், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவிகிதம் ஒதுக்கியும், மீதமுள்ள 30 சதவிகிதத்தை பிற்படுத்தப் பட்டோருக்கு ஒதுக்கியும் ஆணையிட்டவர்கள் நாம்.

1990ஆம் ஆண்டில் பழங்குடியினர்தம் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு, பொதுப் போட்டிக்கான ஒதுக்கீட்டிலிருந்த தனியே ஒரு சதவிகிதம் பழங்குடியினருக்கும், மீதமுள்ள 31 சதவிகிதம் பொதுப் போட்டிக்கும் வைத்து ஆணை வெளியிட்டவர்கள் நாம்.

### இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியவர்கள் நாம்!

முஸ்லிம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கென்று தனியே 3.5 சதவிகித இடஒதுக்கீட்டை சென்ற ஆண்டு வழங்கியவர்கள் நாம். அதுமட்டுமல்ல; அகில இந்திய அளவில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நமது கோரிக்கையை ஏற்றுத்தான் சமூகநீதிக் காவலர் இந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கிட முன்வந்தார் என்பதும்; அதைப்போலவே, நமது வேண்டுகோளின் அடிப்படையிலேயே, மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இடஒதுக்கீட்டினை வழங்கிட– திருமதி. சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலிலும், டாக்டர். மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலும் இயங்கிடும் – ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு முன்வந்தது என்பதும் வரலாறு.

### அவலமும் இழிவும் நிறைந்த பிழைப்பிலிருந்து அருந்ததிய சகோதரனை மீட்டெடுக்கும் பணி!

அந்த சமூகநீதியின் தொடர்ச்சியாகவே இன்றைக்கு, கடைக்கோடி மனிதனை கைதூக்கிவிட; அவலமும் இழிவும் நிறைந்த பிழைப்பிலிருந்து அருந்ததிய சகோதரனை மீட்டெடுத்து; தன்மானம் மிக்க வாழ்க்கையை அவனுக்குத் தர; இந்த சட்ட முன்வடிவு பேரவையின் பரிசீலனைக்கு வைக்கப் பட்டுள்ளது. அருந்ததியரை உயர்த்துவதில் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் என்பதை அகிலத்துக்கும் உணர்த்திடும் வகையில், இந்த சட்ட முன்வடிவினை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ★

# தமிழக அரசு வழங்கிய இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஒரு புள்ளி விவரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் அளித்த விளக்கம்

1996–2001 தி.மு.க ஆட்சிக்காலத்தில் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 9 இலட்சத்து 50 ஆயிரத்து 449.

ஆனால், 2001–2006 அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 60 ஆயிரத்து 625.

13.5.2006 முதல் இதுவரை கழக ஆட்சியில், இந்த இரண்டரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள இலவச வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 46 ஆயிரத்து 785.

வாக்குறுதியை நிறைவேற்றிடும் வாய்மையோடு கழக அரசு அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது.

அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமித்து, வீடுகள் கட்டிக் குடியிருப்போருக்கு– அந்த நிலங்கள் அரசின் பயன்பாட்டுக்கு எந்த வகையிலும் தேவையில்லையெனில் – அவர்களுக்கு ஆக்கிரமிப்பை முறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் கழக அரசில்தான் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் ஆறுமாத காலம் என்று கால வரையறை செய்து அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம்; கம்யூனிஸ்டு இயக்கங்களின் கோரிக்கையினை ஏற்றுக் காலவரையறை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு, இன்றளவும் அந்தத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

இலவச வீட்டுமனை மட்டுமல்லாமல்; தமிழகம் முழுவதிலும் 13.5.2006க்குப் பின்னர் கழக ஆட்சியில்



இதுவரை 1 இலட்சத்து 74 ஆயிரத்து 475 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு, 2 இலட்சத்து 9 ஆயிரத்து 564 ஏக்கர் நிலம் இலவசமாகப் பண்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இடித்துக் காட்டுவதற்காக அல்ல; ஓர் ஒப்பீட்டுக்காக; கம்யூனிஸ்டு கட்சி ஆளும் மேற்குவங்கம், கேரளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கையையும் கவனத்தில் கொண்டால், நடுநிலையாளர்களுக்கு நிலைமை மேலும் நன்றாகத் தெளிவாகும்.

மேற்குவங்க மாநிலத்தில் 2006, ஜனவரி முதல் டிசம்பர் வரை வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 1,577; 2007ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 1,839.

கேரள மாநிலத்தில், 2006–07ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 3,773; 2007–08ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 1,772.

திரிபுரா மாநிலத்தில், 2006ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 291; 2007ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 431.

இலவச வீட்டுமனைப் பட்டா, இலவச நிலம் மட்டுமல்லாமல், கொடுத்த வாக்குறுதிகளை– குறிக்கோளாகக் கொண்டு, தொடர்ந்து நிறைவேற்றி வருவது கழக அரசு, தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட வாக்குறுதிகளானாலும்; ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளானாலும்; அந்த வாக்குறுதிகளையே வழிகாட்டிகளாகக் கொண்டு கழக அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை நல்லெண்ணம் கொண்டோர் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். அன்று முதல் இன்றுவரை கழக அரசின் முழக்கமே "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்'' என்பதுதான்.

2006, தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் 177. அவற்றில் இதுவரை நிறைவேற்றப்பட்டவை 125; தொடர் நடவடிக்கையில் உள்ளவை 52.

2006–07ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மொத்தம் 186 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில், அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முடிந்தவை 139; அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருபவை 40; இன்னும் அரசாணை வெளியிடப்படாமல் பரிசீல்லனையில் உள்ளவை 7.

2007–08ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், செய்யப்பட்ட மொத்த அறிவிப்புகள் 167. அவற்றில், 118 அறிவிப்புகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகளும் முற்றுப் பெற்றுள்ளன; 40 அறிவிப்புகளின்மீது அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன; 9 அறிவிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

2008–09ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மொத்தம் 116 அறிவிப்புகள் செய்யப்பட்டன. அவற்றில், 42 அறிவிப்புகளைப் பற்றி அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகளும் நிறைவடைந்துள்ளன; 41 அறிவிப்புகளைப் பற்றி அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன; 33 அறிவிப்புகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. ★

## அண்ணாவின் பொன்மொழி

★ இலக்கியம் மனிதனது அறிவை
வளர்க்கிறது;
நன்மை தீமைகளை
எடுத்துக்காட்டுகிறது;
மனிதனது சிந்தனையைக் கிளறி
விடுகிறது!

★ கலை என்பது நெறிமுறை, வீரம்,
ஒழுக்கம், கற்பு, காதல்
என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக
இருந்தல் வேண்டும்!

★ ரேடியோவும் டெலிபோனும்
ஒலிபெருக்கியும் மின்சாரமும்
ஞானப்பால் உண்டதால் வந்த
வல்லமைகள் அல்ல.
அசரீரி அடி எடுத்துக் கொடுத்ததால்
உண்டான அற்புதங்களுமல்ல;
தன்னலமற்ற அறிவாளிகளின்
உழைப்பால் விளைந்த உன்னதப்
பொருள்கள் அவை.

# ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணி நியமனம்

சென்னை கலைவாணர் அரங்கில் 18.02.2009 அன்று நடைபெற்ற வருவாய்த்துறை சார்பில் கிராம நிருவாக அலுவலர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை :–

தமிழகத்தில் 1980 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த பகுதி நேர கிராம நிருவாக அமைப்பு முறையானது மாற்றப்பட்டு முழுநேர கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப் பட்டன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்படுகிற நலத்திட்ட உதவிகள் அனைத்தும் அடித்தளத்து மக்களின் மேம்பாட்டிற்காக கிராம நிருவாக அலுவலர்கள் மூலமாகவே செயல்படுத்தப் படுவதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டம், முதியோர் உதவித் தொகை வழங்குதல், இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்குதல் இப்படி ஒவ்வொரு சமூக மேம்பாட்டுத் திட்டங்களும் கிராம நிருவாக அலுவலர்களின் செயல்பாடுகள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மட்டுமல்லாது, இயற்கை இடர்பாடுகள் ஏற்படும்போது உரிய நிவாரண நடவடிக்கைகள் அனைத்தும் கிராம நிருவாக அலுவலர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் ஆகியவற்றுடன் கடந்த டிசம்பர் 2004இல் ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்கான நிவாரணப் பணிகளும் கிராம நிருவாக அலுவலர்கள் மூலமாக சிறப்புடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டதை யாரும் மறந்து இருக்க முடியாது.

கிராமத்தினுடைய வளர்ச்சி ஆனது இரண்டு முக்கிய அமைப்புகளைச் சேர்ந்தது என்றால் மிகையாகாது. ஒன்று எனது துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைப்பு. மற்றொன்று கிராம நிருவாக வருவாய் அமைப்பு. இந்த இரண்டு அமைப்புகளும் அரசு நிருவாகத்தின் இரண்டு கண்கள் போன்றவை. ஊரக வளர்ச்சித் துறையானது முன்பு வருவாய்த் துறையுடன் இணைந்தே செயல்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு அமைப்புகளும் சரிவர இயங்கினால், கோட்டையில் தீட்டக்கூடிய சிறந்த திட்டங்கள் மக்களிடம் சிறப்பாகச் சென்றடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

**பணியிடங்களை நிரப்புதல்**

வருவாய்த்துறையில் அமைச்சுப்பணியில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் போன்ற பதவிகளும் மற்றும் இதரப் பணிகளான ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் மற்றும் தொலைபேசி இயக்குபவர்கள் போன்ற பணியிடங்கள் அடங்கும். நேரடி நியமனம் மூலமாக நிரப்பிட கடந்த ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த தடையாணை 2001 முதல் 2005 வரையில் அமுலில் இருந்த காரணத்தால், மேற்படி பணிகளில் காலியாக இருந்த பணியிடங்கள் நிரப்பப்பட இயலாமல் இருந்தது.

இதனை உணர்ந்த நிலையில் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றதும், முந்தைய ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த வேலைவாய்ப்பிற்கான தடையாணைகளை விலக்கினார்கள். மேற்படி தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு வருவர்ய்த்துறையில் பெருமளவு காலியாக இருந்த காலிப்பணியிடங்களை கணக்கிட்டு, உதவியாளர் முதல் இரவுக் காவலர் வரையிலான 3,173 பணியிடங்களை 2006-07ஆம் ஆண்டிலும், 1,835 பணியிடங்களை 2007-08ஆம் ஆண்டிலும் நிரப்பிட தமிழக அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கிராம நிருவாகம்**

அதில், 2,500 கிராம நிருவாக அலுவலர் காலிப்பணியிடங்களைக் கணக்கில் கொண்டு நேரடி நியமனம் மூலம் தகுதியான நபர்களைக் கொண்டு தேர்வு செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அதன்படி, கடந்த 10.06.2007இல் தேர்வு நடத்தப்பட்டு 2,427 நபர்கள் தேர்வுப் பட்டியல் வெளியிடப்பட்டது. அந்த 2,427 நபர்களில் 2,212 நபர்கள் பணியில் உள்ளனர்.

14.11.80க்கு முன்னர் கிராம முன்சீப் /ஹெட்மேன் மற்றும் கிராமக் கர்ணம் பதவிக்காக வருவாய் கோட்டாட்சியர்களால் நடத்தப்பட்ட சிறப்புத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பணிநியமனத்திற்காக காத்திருந்த சமயத்தில் மேற்படி பணியிடங்கள் ஒழிக்கப்பட்டதால் பணி நியமனம் பெற இயலாத நிலை ஏற்பட்டு, இவர்களின் தகுதியை அறிந்து கிராம நிருவாக அலுவலராகப் பணி நியமனம் வழங்கலாம் என முடிவு செய்து இவர்களுக்கு சிறப்பு தகுதிகாண் தேர்வு நடத்துமாறு தலைவர் கலைஞர் அவர்களால் 15.07.08இல் ஆணையிடப்பட்டது. அதன்படி 07.09.08 மற்றும் 05.10.08 ஆகிய இருதினங்களில் ஆறு மையங்களில் சிறப்பு தகுதிகாண் தேர்வு நடத்தப்பட்டது.

சிறப்பு தகுதிகாண் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற 792 நபர்கள் கிராம நிருவாக அலுவலர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதன்படி தேர்ச்சிபெற்ற 792 நபர்களில் அசல் சான்றிதழ்களை ஆய்வுக்கு சமர்ப்பித்துள்ள 778 நபர்கள் இன்று பணி நியமன ஆணை பெற உள்ளனர். இவர்களில் 38 பெண்களும் அடங்கும்.

கிராம நிருவாக அலுவலர் மட்டுமல்லாமல், இவர்களுக்கு உதவிட ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணியிடம் என்ற அடிப்படையில் 3,674 கிராம உதவியாளர் காலியிடங்களை நிரப்பவும் 2006இல் அரசு ஆணையிடப்பட்டு, அதனடிப்படையில் 30.11.08 வரை 2,567 நபர்கள் கிராம உதவியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம நிருவாக அலுவலர் மட்டுமல்லாமல், இவர்களுக்கு உதவிட ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணியிடம் என்ற அடிப்படையில் 3,674 கிராம உதவியாளர் காலியிடங்களை நிரப்பவும் 2006இல் அரசு ஆணையிடப்பட்டு, அதனடிப்படையில் 30.11.08 வரை 2,567 நபர்கள் கிராம உதவியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன், நீங்கள் பணிபுரிந்தால் கழக அரசு உங்களுக்கு தாயுள்ளத்துடன் உதவிடத் தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே கழக ஆட்சியால் வருவாய்த்துறை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட சில சலுகைகளை மட்டும் பட்டியலிட விரும்புகிறேன்.

**ஓய்வூதியம்**

24.01.08 முதல் கிராம உதவியாளர்களின் குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.150/-லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 1,503 கிராம உதவியாளர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள்.

முன்னாள் கிராம அலுவலர்களின் சிறப்பு ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.250/–லிருந்து ரூ.350/– ஆக 1.07.07 முதல் உயர்த்தி வழங்கப் படுகிறது. 50 ரூபாய் அகவிலைப்படியை, அகவிலை ஊதியமாகவும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணைப்படி 5,326 முன்னாள் கிராம அலுவலர்கள் உயர்த்தப்பட்ட சிறப்பு ஓய்வூதியத்தைப் பெறுகின்றனர்.

குடும்ப ஓய்வூதியமும் ரூ.150/–லிருந்து ரூ.400/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணைப்படி 4,169 குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

தற்காலிகமாக நியமிக்கப்பட்டு பத்தாண்டுகள் பணி நிறைவு செய்யாது ஓய்வு பெற்ற 285 முன்னாள் கிராம நிருவாக அலுவலர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியம் (ரூ.1,275/–) வழங்க 20.09.08இல் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 12,506 கிராம நிருவாக அலுவலர்கள் அலுவலங்களில் 2007–08ஆம் ஆண்டில் முதல்கட்டமாக 3,000 கிராம நிருவாக அலுவலகங்களுக்கு இரும்புத் தளவாடங்கள் ரூ. 3 கோடி செலவில் வழங்கப்பட்டன.

தற்போது இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு கிராம நிருவாக அலுவலகத்திற்கு ரூ.11,308/– வீதம் 3,000 கிராம நிருவாக அலுவலர்கள் அலுவலகங்களுக்கு தளவாடங்கள் (மேஜை, நாற்காலி) வாங்க அனுமதியும் மற்றும் ரூ.3,39,24,000/– (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து 9.1.2009இல் ஆணையிடப்பட்டுள்ளது.

**பேரறிஞர் அண்ணா**

**31.12.1968** அன்று நடைபெற்ற இந்திய அதிகாரிகள் சங்க வைர விழாவில் உரையாற்றியபோது பேரறிஞர் அண்ணா தெரிவித்த சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"மக்கள் அதிகாரிகளிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் இந்தக் கனிவும் மரியாதையும் நெருக்கமான நட்புமே.

அவர்கள் கேட்கிற எல்லாவற்றையும் அதிகாரிகளால் செய்ய இயலாமல் போகலாம்.

ஆனால் அவர்களுக்கு ஏன் செய்ய இயலவில்லை என்பதைக் கனிவோடும், மரியாதையோடும், எடுத்துரைக்கப்படுமேயானால் அதையே மக்கள் மிகப்பெரியதாக எண்ணி மகிழ்வர்".

அந்த அளவுக்கு நம் மக்கள் வெகுகாலமாக புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு யாரேனும் ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய மரியாதையைக் காட்டினால் அதைப் பெரியதாக மரியாதையைக் காட்டினால் அதைப் பெரியதாக மதிக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத்தில், இந்தக் கருத்தினை உறுதிமொழியாக நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, அண்ணாவின் அன்புத் தம்பிகளாகிய எங்களுக்கெல்லாம் ஒரு சில அறிவுரைகளை தனது கடிதத்தின் வாயிலாக அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அதாவது,

"அருமைத்தம்பி
மக்களிடம் சென்றிடு
அவர்களோடு வாழ்ந்திடு
அவர்களிடமிருந்து அறிந்திடு
அவர்களை நேசித்திடு
அவர்களுக்காக உன் உழைப்பை நல்கிடு

அவர்களோடு இணைந்து அவர்களுக்காகத் திட்டமிடு.

அவர்களுக்குத் தெரிந்ததில் இருந்து பணியைத் துவக்கிடு

அவர்களிடம் இருப்பதில் இருந்து தக்க வேலையை தொடர்ந்திடு"

பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்துக்களும் கிராம நிருவாக அலுவலர்களாக பணியேற்க இருக்கும் உங்களுக்கும் பொருத்தமான அறிவுரையாக கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் வழியில் ஆட்சி நடத்திவரும், தலைவர் கலைஞர் அவர்கள்,

"பதவிகள் பணிபுரிவதற்கு கிடைக்கும் வாய்ப்புகளாகக் கருதப்படவேண்டும்" என்றும்,

"அதிகாரங்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் என்ற உணர்வும் வந்தாக வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

அப்போதுதான் பொதுவாழ்வு சிறக்கும்– பொதுத்தொண்டு வெற்றி பெறும்; புத்தொளி நாடெங்கும் பரவும். ★

# பொதுச்சுகாதாரப் பணிகளில் முன்னணியில் உள்ள வேலூர் மாவட்டம்



நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

– என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப விளங்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை, மக்கள் சேவையில் பல சாதனைகளை வேலூர் மாவட்டத்தில் செய்து வருகிறது.

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ. இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையில், வேலூர் சுகாதார மாவட்டம் பொதுமக்களுக்குச் சுகாதார சேவைகளை அளிப்பதில் இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறது.

சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மற்றும் துறையைச் சார்ந்த பணியாளர்கள் அனைவரின் கடுமையான உழைப்பினால் 10 வட்டாரங்களில் உள்ள 35 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 17.8 இலட்சம் மக்களுக்கு மருத்துவச் சேவைகளை அளித்து வருகிறது.

**தமிழகத்தில் முதலிடம்**

தமிழக அளவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 3,256–லிருந்து தற்போது 11,623 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மாத காலமாகத் தமிழகத்தில் உள்ள 42 சுகாதார மாவட்டங்களில் பிரசவங்கள் பார்ப்பதில் வேலூர் சுகாதார மாவட்டம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

**இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சை பிரசவம்**

இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சை பிரசவம் பாணாவரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொடங்கப்பட்டு, லாலாப்பேட்டை வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், அணைக்கட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவைக்கு விரிவுபடுத்தப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து வருகிறது. வேலூர் சுகாதார மாவட்டத்தில் இதுவரை 1,192 சிசேரியன் அறுவைச் சிகிச்சை பிரசவங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் அறுவைச் சிகிச்சை பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



### இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அணைக்கட்டில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரத்தச் சேமிப்பு நிலையம் துவக்கி வைக்கப்பட்டது பெருமைக் குரியதாகும்.

இந்தியாவில் முதன்முறையாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு நிலையம் பாணாவரம், அணைக்கட்டு ஆகிய அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இரும்புச்சத்து குறைவாக உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பிரசவம் செய்து கொள்ளும் கர்ப்பிணிகளுக்கு இரத்தம் செலுத்துவது எளிதாகிறது. பிரசவத்தின்போது இரத்தப் போக்கினால் ஏற்படும் தாய் மரணம் தடுக்கப்படுகிறது. இதுவரை 333 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இவ்விரு நிலையங்களிலும் இரத்தம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் பிரசவத்திற்குப் பின் இரத்தப் போக்கினால் ஏற்படும் மகப்பேறு மரணம் தடுக்கப்படுகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு நிலையங்கள் அமைப்பதின் அவசியத்தை உணர்ந்த தமிழக அரசு, வேலூர் மாவட்டத்தை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு தமிழகம் முழுவதும் தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க ஆணையிட்டுள்ளது.

### அறுவை அரங்குகள்

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிதியுதவியுடன் வேலூர் மாவட்டத்தில் 12 அறுவை அரங்குகள் குளிர்சாதன வசதி மற்றும் ஜெனரேட்டர் வசதியுடன் இயங்கி வருகிறது. இதனால் பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை 1,354 லிருந்து 4,005 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பயனாளிகளுக்கான வசதிகள் மேம்பாடு

35 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய கிராமப்புற சுகாதார இயக்கத்தின் நிதியுதவியுடன் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக கடந்த ஒரு வருடத்தில் தரம் உயர்த்தப்பட்டு, வாட்டர் ப்யூரிபையர் மூலம் சுத்தமான குடிநீர், சோலார் வாட்டர் ஹீட்டர் மூலமாக குடிப்பதற்கும், குளிப்பதற்கும் வெந்நீர், டைல்ஸ் பதிக்கப்பட்ட பிரசவ வார்டு மற்றும் பிரசவ அறை தரைகள் / சுவர்கள், ஆரோக்கியமான சுத்தமான கழிப்பிட வசதி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, கட்டில், மெத்தை, பயனாளிகள் காத்திருப்புக் கூடங்கள், தொலைபேசி வசதி, தடையில்லா மின்சாரம் வழங்க இன்வெர்ட்டர் என பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### இயந்திர உயர்ரக மருத்துவ வசதிகள்

கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ள அதே சூழ்நிலையில் மருத்துவச் சேவையின் தரம் உயரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஆண்டி "டி" (நெகடிவ் இரத்த வகை தாய்மார்களுக்கு செலுத்த வேண்டிய ஊசி), மிசோபிரிஸ்டால் போன்ற மருந்துகளும்,

பீட்டல் ஆர்ட் மானிட்டர் (சிசுக்களின் இருதய துடிப்பை அறியும் கருவி) ஈ.சி.ஜி போன்றவற்றினால் கிருமிநீக்கம் செய்யப் பயன்படும் நீடில் அழிப்பான் உபகரணக் கருவிகளும் பயன்பாட்டில் உள்ளன.

சுற்றுப்புற சுகாதாரம் மேம்படுத்தப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் பயனாளிகள் நல்ல ஆரோக்கியமான காற்றும், நல்ல மனநிலையும் பெற வேண்டி நிலையத்தின் உள்ளே பசுமையான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டு**

இராஜஸ்தான், ஆந்திரா, கருநாடாகா, கேரளம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலத்தில் உள்ள சுகாதாரத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வேலூர் மாவட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்வையிட்டு இதனை முன்மாதிரியாகக் கொண்டு அவர்களின் மாநிலங்களில் பணிகளைத் துவக்கி உள்ளனர். இந்த வகையில் தமிழகம் பிற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

**உணவுத்திருவிழா**

மாதத்திற்கு ஒருமுறை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிசோதனைகளுக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்களின் பசியைப் போக்கும் வண்ணம் முட்டை, கீரை, காய்கறிகளுடன் கூடிய உணவு வழங்கப்பட்டு வருவது பலரது கவனத்தையும், பாராட்டையும் பெற்றுள்ளது. வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் உணவுத் திருவிழாவை முன் மாதிரியாகக் கொண்டு தமிழகம் முழுவதும் அரசாணையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**சமத்துவ வளைகாப்பு**

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெண்களின் நலனில் அக்கறை காட்டுகிறது என்பதை விளக்கும் வண்ணம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே சமத்துவ வளைகாப்புத் திருவிழா நடத்தப்படுகிறது.

**இயந்திர சலவையகம்**

வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இயந்திர சலவையகம் வாலாஜா வட்டம், தென்கடப்பந்தாங்கல் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கப்பட்டு, இதன்மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் பயனாளிகளுக்கு சுத்தமான ஆரோக்கியமான படுக்கை விரிப்புகள் மற்றும் துணிகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவும் தமிழகத்திலேயே முதன்முறையாக வேலூர் மாவட்டத்தில் துவங்கப்பட்டுள்ளது. இதனையொட்டி வெள்ளைப் படுக்கை விரிப்புகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பயன்பாட்டில் உள்ளன. இதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு தமிழக முழுவதும் இயந்திர சலவையகம் தொடங்கப்படவுள்ளது.

**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

ரூபாய் 17 கோடியே 14 இலட்சத்து 92 ஆயிரம் தமிழக அரசால் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி கர்ப்பிணி தாய்மார்களுக்கான திட்டத்திற்கு இவ்வாண்டிற்கென ஒதுக்கப்பட்டது. இதனால் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 393 பேர் பயனடைந்து உள்ளனர்.

**வருமுன் காப்போம் திட்டம் மருத்துவ முகாம்**

வேலூர் மாவட்டத்தில் 269 வருமுன் காப்போம் திட்ட முகாம்கள் நடைபெற்று உள்ளன. 3 இலட்சத்து 70 ஆயிரத்து 995 பேர் பயனடைந்து உள்ளனர். 2,968 பேருக்கு இதன்மூலம் அறுவை சிகிச்சை மற்றும் பொது சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு புதியதாக 110 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க உத்தரவிட்டதில் வேலூர் மாவட்டத்திற்கு அலமேலுமங்காபுரம், நவ்லாக், புதுக்குப்பம், காங்குப்பம், காங்கனாம்பாளையம், அரங்கதுர்கம் ஆகிய ஆறு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பள்ளிக்குப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். அலமேலுமங்காபுரம், காங்குப்பம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சாதாரண மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான மருத்துவக் காப்பீடு திட்டத்தை செயல்படுத்தப்படுவதினால் அனைவரும் நோய் இன்றி வாழும் சுகாதார வாழ்க்கை பெற்றுத் தந்த கலைஞர் அரசுக்கு மக்கள் என்றென்றும் நன்றியுடன் இருப்பார்கள் என்பது திண்ணமாகும்.

**மு. விஜயகுமார்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்.

# இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட பள்ளிக்குழந்தைகளின் நன்றிப் பெருக்கு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதி இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத்திட்டம் என்ற திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு வாரந்தோறும் வியாழக்கிழமையன்று பள்ளிகளில் நடைபெறும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான மருத்துவ முகாமில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் குழந்தைகளில் யாருக்காவது இருதய நோய் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அக்குழந்தைகளுக்கு அரசின் சார்பில் இலவச இருதய அறுவைச் சிகிச்சையினை செய்வதே ஆகும். இத்திட்டத்தில் பயன்பெற அக்குழந்தையின் பெற்றோரின் ஆண்டு வருமானம் 50,000க்குள் இருக்க வேண்டும். பள்ளிசெல்லும் குழந்தைகளாக இருத்தல் வேண்டும். தமிழகத்தில் குடியிருப்பதற்கான அத்தாட்சியான குடும்ப அட்டையின் நகல் வேண்டும். இவை அனைத்தைம் வழங்கினால் அந்த ஏழைக் குழந்தைகளின் வாழ்வில் அரசால் ஒளியேற்றி வைக்க முடியும் என அரசால் அரசாணை வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விழுப்புரம், கள்ளக்குறிச்சி சுகாதார மாவட்டங்களில் இதுவரை நடத்தப்பட்ட பள்ளி மருத்துவ முகாம்களின் வாயிலாக 174 குழந்தைகளுக்கு இருதயக் கோளாறுகள் இருப்பது கண்டறியப்பட்டது. பூர்வாங்க பரிசோதனைகளுக்குப்பிறகு புதுச்சேரி, பிம்ஸ் மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சை நிபுணரும், சென்னை இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சை நிபுணரும் இலவசமாக எக்கோ எனப்படும்

இருதய சிகிச்சைக்கான இயந்திரத்துடன் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மயிலம் மற்றும் இருவேல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகைதந்து பாதிக்கப்பட்ட குழந்தைகளை பரிசோதித்து இருதய அறுவைச் சிகிச்சைக்கு தகுதியான 132 குழந்தைகளைத் தெரிவு செய்துள்ளார்கள்.



அதனைத்தொடர்ந்து அரசால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட 20 மருத்துவமனைகளை தொடர்பு கொண்டு, விழுப்புரம் மாவட்ட சுகாதாரத்துறையின் வாயிலாக சம்பந்தப்பட்ட குழந்தை மற்றும் அவர்தம் பெற்றோரை அழைத்துச்சென்று அறுவைச் சிகிச்சைக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் அரசால் செய்யப்பட்டு இருதய அறுவைச் சிகிச்சைக்கான நாள் குறிக்கப்பட்டது. குறிப்பாக மூடிய அறுவைச் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு ரூ.30,000மும், இருதய அறுவைச் சிகிச்சை (திறந்த முறையில்) சாதாரணமானது மேற்கொள்ள ரூ.50,000மும், இருதய அறுவைச் சிகிச்சை (திறந்த முறையில்) பெரிய அளவிலானது மேற்கொள்ள ரூ.1 இலட்சமும் அரசு வழங்குகிறது.

விழுப்புரம் மாவட்டத்தைப் பொருத்தவரை தமிழகத்திலேயே எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு இதுவரை 51 குழந்தைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் மீதமுள்ள 79 குழந்தைகளுக்கும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட குழந்தைகளுக்காக அரசால் ரூ.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் வருமுன்காப்போம் மருத்துவத் திட்டத்தின் வாயிலாக பள்ளியில் பயிலாமல் இடைநின்ற இரண்டு குழந்தைகளுக்கு இருதய பிரச்சினை இருப்பது கண்டறியப்பட்டு அவர்கள் இத்திட்டத்தில் பயன் பெறுவதற்காக பள்ளியில் சேர்க்கப்பட்டு அவர்கள் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதோடு தொடர்ந்து பள்ளியில் பயின்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே, பெற்றோர்கள் பள்ளிகளுக்குச் செல்லும் தங்களது குழந்தைகளை வாரந்தோறும் வியாழக் கிழமை நடைபெறும் பள்ளி மருத்துவ முகாமிலும், வருமுன் காப்போம் மருத்துவ முகாமிலும் பங்கேற்கச் செய்து அவர்களது நோயின் தன்மையைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு பயனடையலாம்.

இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட குழந்தைகளும், அவர்தம் பெற்றோரும் 12.01.2009 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். இரா. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து இத்திட்டத்தின் வாயிலாக தங்களது குழந்தைகள் முழுமையாகப் பயன்பெற்றுள்ளதாகவும், விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவ அலுவலர்கள் தங்களை நல்லமுறையில் அணுகிப் பயன்பெறச் செய்துள்ள தாகவும் எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியினை மாவட்ட ஆட்சியர் வாயிலாக தெரிவிக்கக்கோரி கேட்டுக்கொண்டார்கள். மேலும், குழந்தைகள் அனைவரும் இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து நன்றியினைத் தெரிவிக்க விரும்பும் அவாவினையும் தெரிவிக் குமாறு மனமுருகி கண்ணீர் மல்க கேட்டுக் கொண்டார்கள்.

**மு.பழனிசாமி,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
விழுப்புரம்

# உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் அமைப்புசாரா தொழிலாளர்நல வாரியத் திட்டம்

உழைக்கும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தொழிலாளர் நல வாரியங்கள் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. உடலுழைப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நலனுக்காக 17.03.1999ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம் அரசால் அறிவிக்கப்பட்டது. இவ்வாரியம் மூலம் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தை 28.04.1999–அன்று அரசு அறிவித்து. இதன்படி போக்குவரத்து வாகனங்களில் சுமை ஏற்றி இறக்குதல், உப்பளங்களில் வேலை செய்தல், கயிறு திரித்தல், அப்பளம் தயாரித்தல், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் மற்றும் கடை நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் போன்ற 67 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் அணைகள், பாலங்கள், சாலைகள் ஆகியவற்றைக் கட்டுதல், பராமரித்தல் மற்றும் இதரக் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் கல் உடைத்தல், பந்தல் கட்டுதல், தொழிற்சாலைச் சட்டத்திற்கு உட்படாத செங்கல் தொழில் போன்ற கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பதிவு செய்து பயன்பெறலாம்.

**அமைப்புச்சாரா தொழிலாளர் நலவாரியத்தின்கீழ்**

1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
2. தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்
3. தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்
4. தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்
5. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்
6. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்
7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்
8. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம்
9. தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நலவாரியம்



10. தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்
11. தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்
12. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்
13. தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்
14. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் எனத் தனித்தனி நலவாரியங்களை அரசு அமைத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் நலத்திட்ட உதவிகளைப் பெற, தாங்கள் ஈடுபட்டுள்ள தொழில்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நல வாரியங்களில் தங்களைப் பதிவு செய்தல் வேண்டும். மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவினை புதுப்பித்துக்கொள்ளவேண்டும். பதிவு செய்வதற்கோ அல்லது புதுப்பித்துக்கொள்வதற்கோ எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்வதற்கு 15 வயது நிறைவு செய்தவராகவும், 60 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பிற வாரியங்களில் பதிவு செய்வதற்கு 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 60 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தொழிலாளி சம்பந்தப்பட்ட தொழிலில் வேலை செய்பவர் என்பதற்கான சான்று, குடும்ப அட்டை அசல் மற்றும் நகலுடன், புகைப்படம் ஒட்டி விண்ணப்ப படிவத்தினை முழுமையாகப் பூர்த்தி செய்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), அவர்களிடம் வழங்கவேண்டும். அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத் தொழிலாளர்கள் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) எண்.866 கே.பி.சாலை நாகர்கோவில்–அவர்களிடம் வழங்கவேண்டும்.

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்கென கல்வி உதவித்தொகை, 10ஆம் வகுப்பு முதல் மேற்படிப்பு வரையிலும் ரூ.1,000/– முதல் ரூ.4,000/– வரை வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளியின் திருமணத்திற்கும் திருமண உதவித்தொகை ரூ.2,000/– வழங்கப்பட்டுவருகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை ரூ. 6,000/– வழங்கப்பட்டுவருகிறது. மேலும் தொழிலாளர்களுக்கு கண்கண்ணாடி வாங்குவதற்கான ரூ.500/– உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பதிவு செய்து 5 வருடங்கள் நிறைவு செய்த 60 வயது பூர்த்தியான தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.400/– ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது. தொழிலாளர்களது இயற்கை மரணத்திற்கு ரூ.15,000/– உதவித்தொகையும், ஈமச்சடங்கிற்கு ரூ.2,000/– உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. விபத்துக்களில் மரணம் ஏற்படும் நிலையில் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1,00,000/– உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கிற்கு ரூ.2,000/– உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. மேலும் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டு ஊனம் அடைந்தால் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித்தொகை வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டச் செயலாக்கம் குறித்து மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்கள், கூறியதாவது:–

“சமூகப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு சமூகப்பாதுகாப்பு அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைப்புச்சாரா தொழிலாளர் நலவாரியங்களை அமைத்து உழைப்பாளிகளின் வாழ்விற்கு வளம் சேர்த்துள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் 31.12.2008 வரை அமைப்புச்சாரா தொழிலாளர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 60 ஆயிரத்து 306 தொழிலாளர்களும், கட்டுமானத்தொழிலாளர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 35 ஆயிரத்து 716 தொழிலாளர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைப்புச்சாரா நலவாரியத்தின்கீழ் 5,124 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, 1,278 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை, இயற்கை மரணமடைந்த 730 நபர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி 1,362 பயனாளிகளுக்கு மகப்பேறு உதவித்தொகை உட்பட 8,850 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 83 இலட்சத்து 95 ஆயிரத்து 440–ம், கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் பதிவு செய்த 2,232 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, 868 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை, இயற்கை மரணமடைந்த 669 நபர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி– 67 பயனாளிகளுக்கு மகப்பேறு உதவித்தொகை உட்பட 3,894 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 59 இலட்சத்து 86 ஆயிரத்து 160–ம், மொத்தம் 12 ஆயிரத்து 744 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 43 இலட்சத்து 81 ஆயிரத்து 600 வழங்கப்பட்டுள்ளது'' என்றார்.

தையல் தொழிலாளர் நலவாரிய பயனாளி, சுங்கான்கடை திருமதி. மணிமாலா (26) தெரிவிக்கையில்,

“எனது கணவர் திரு. சிவகுமார் கூலி தொழிலாளியாக உள்ளார். நாள் ஒன்றுக்கு ரூ.70/– முதல் ரூ.100/– வரை கூலியாகப் பெற்று வருவார். எனது கணவரின் வருமானம் எங்கள் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. எனவே எனக்குத் தெரிந்த தையல் தொழிலில் ஈடுபட்டேன். இதன் மூலம் வாரம் ரூ.300/– முதல் ரூ.350/– வரை வருமானம் கிடைக்கிறது. வருமானம் குறைவினால் எனது முதல் தாய்மையின்போது மிகவும் கஷ்டப்பட்டோம். இந்நிலையில் தொழிலாளர்களுக்கு அரசு வாரியம் அமைத்துள்ளது குறித்து அறிந்தமையால் கடந்த ஆண்டு உறுப்பினராகச் சேர்ந்தேன். நலவாரியத்தில் கருவுற்ற தாய்மார்களுக்கு அரசு உதவித்தொகை வழங்குவதாக அறிந்து எனது இரண்டாவது தாய்மையின்போது விண்ணப்பித்தேன். கர்ப்பிணியான எனக்கு ரூ.6,000/– அரசு வழங்கியுள்ளது. இந்தத்

தொகை எனக்கு மிகவும் உதவியாக உள்ளது. இதனால் நான் சத்தான உணவு சாப்பிடவும், பிறக்கின்ற என் குழந்தைக்கு சத்தான உணவு வழங்கவும் முடியும். ஏழை எளிய தொழிலாளர்கள் வாழ்வில் இந்த உதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தொழிலாளர்கள் நலனுக்காகப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்'' என்றார்.

குமாரபுரத்தைச் சார்ந்த பயனாளி திருமதி. மினி (26) கூறுகையில்,

''எனது கணவர் திரு. ரவிச்சந்திரசேகரன் ரப்பர் பால்வெட்டும் கூலித் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார். நாள் ஒன்றுக்கு ரூ.150 வரை கூலிகிடைக்கும். மாதத்தில் எல்லா நாட்களும் அவருக்கு வேலை இருக்காது. எனது குடும்பத்தை வறுமையில்லாமல் காப்பாற்ற வேண்டும் என்றால் நானும் ஒரு வேலை செய்தால்தான் முடியும் என்ற சூழ்நிலையில் எனக்குத் தெரிந்த தையல் தொழில் உதவியது. எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களுக்கு தேவையான தையல் வேலைகளை செய்து கொடுத்து வாரம் ரூ.250/– வரை சம்பாதித்து வருகிறேன். இந்தச் சூழ்நிலையில் கர்ப்பமடைந்துள்ள என்னால் தையல் தொழிலில் ஈடுபட இயலாத நிலை. இந்நிலையில் நலவாரியம் வாயிலாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூ.6,000/– உதவித்தொகை கிடைத்துள்ளது. இந்த நிதியுதவி எனக்கு மிகவும் உதவியாக உள்ளது. தேவையான நேரத்தில் எங்களுக்கு நிதியுதவி வழங்கிய கலைஞர் அவர்களுக்கு என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்'' என்றார்.

கோட்டார் பகுதியைச் சார்ந்த பயனாளி திரு. எஸ். பழனிமுருகன் (61) கூறுகையில்,

''தமிழ்நாடு அரசின் உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினராகிய நான் மர அறுவை மில்லில் கூலியாக வேலை பார்த்துவந்தேன். கடந்த ஆண்டு எனது வயது முதுமை காரணமாக வேலைக்கு செல்ல இயலவில்லை. நான் எனது மனைவி திரு. ருக்குமணியுடன் மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தேன். உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதாக அறிந்து விண்ணப்பித்தேன். எனக்கு நவம்பர் 2008லிருந்து ஓய்வூதியம் கிடைத்தது. மாதந்தோறும் எனக்கு ரூ.400/– உதவித்தொகை கிடைக்கிறது. இதனால் எனது குடும்பம் வறுமையில் இருந்து காப்பாற்றப்பட்டு, நானும் எனது மனைவியும் வயிறார சாப்பிடமுடிகிறது. வயதான காலத்தில் எங்களுக்கு இந்த உதவியை செய்த தமிழ்நாடு அரசும், முதல்வரும் எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்திருப்பார்'' என்றார்.

பொற்கொல்லர் நலவாரிய உறுப்பினர் நாகர்கோவில் திரு. நாகலிங்கம் (52) கூறுகையில்,

''பொற்கொல்லர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரசு பொற்கொல்லர் நலனுக்காக ஒரு வாரியம் உருவாக்கியுள்ளதை அறிந்தேன். பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டுள்ள எங்களைப் போன்ற தொழிலாளர்களுக்கு இவ்வாரியம் நலத்திட்ட உதவிகள் வழங்குவதாகவும் அறிந்தேன். நான் மட்டும் உறுப்பினராகச் சேர்ந்தால் போதாது என்ற என்னைப் போல் பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டு பொற்கொல்லர்களையும் உறுப்பினர்களாக சேரச் செய்தேன். நாகர்கோவில் பகுதியிலுள்ள சுமார் 1,000–க்கு மேற்பட்டோர் இன்று நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளோம். என்னால் பொற்கொல்லர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்ந்த நாகர்கோவில் பகுதியைச் சார்ந்த பாலகிருஷ்ணன் கடந்த 2006ஆம் ஆண்டு விபத்தில் காலமானார். இதனால் அவரது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. திக்கற்று இருந்த அந்தக் குடும்பத்திற்கு, வாரிய உறுப்பினரை இழந்த குடும்பத்திற்கு அரசு வழங்கும் ரூ. 1 இலட்சம் கிடைத்தது. இதனால் அவரது குடும்பம் வறுமையிலிருந்து காப்பாற்றப்பட்டது. மேலும் இவ்வாரிய உறுப்பினர்கள், குழந்தைகள் படிப்பதற்கு கல்வி உதவித்தொகைகளும் கிடைத்துள்ளது. இதனால் பட்டப்படிப்பு படிப்பதற்கு உதவியாக இருந்துள்ளது'' என்றார்.

தொகுப்பு :
**த. ஹரிராம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### தமிழன் வளரவேண்டும்

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும், தமிழ் 'வெளியீட்டுக் கழகம்' என்றும் நாம் வைத்துக்கொண்டிருப்பது எல்லாம் 'தமிழ் வளரவேண்டும்' என்பதால் அல்ல! தமிழ் வளர்ந்துதான் உள்ளது. 'தமிழன் வளரவேண்டும்' என்பதைத்தான் 'தமிழ் வளர்ச்சி அடையவேண்டும்' என்கிறோம். அதாவது 'தமிழ்வளர்ந்த அளவுக்குத் தமிழன் வளரவேண்டும்' என்கிறோம்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

22.02.2009 அன்று, திருப்பூர் மாவட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518 / 09-11



தமிழரசு
அலுவலகப் பிரதி



# ஆளுநர் உரை
# கலைஞர் அரசின்
# திசை காட்டும் கருவி!



தமிழரசு
அலுவலகப் பிரதி

# ஆளுநர் உரை

# கலைஞர் அரசின்

# திசை காட்டும் கருவி !

---

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள்

ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்

தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை

அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

30.1.2009 அன்று ஆற்றிய உரை

---

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.22

# தமிழரசு இலவச வெளியீடு

பிப்ரவரி 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

# ஆளுநர் உரை
# கலைஞர் அரசின் திசை காட்டும் கருவி !

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள்
ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
30.1.2009 அன்று ஆற்றிய உரை வருமாறு :

ஜனவரி 21 ஆம் தேதி, ஆளுநர் அவர்கள் 2009 ஆம் ஆண்டிற்கான உரையினை ஆற்றியிருக்கிறார்கள். சமூக நீதிக் காவலரும் இந்தியத் திருநாட்டினுடைய முன்னாள் பிரதமருமான வி.பி.சிங் அவர்களுடைய மறைவிற்கு இரங்கல் தீர்மானத்தை 22 ஆம் தேதி நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து, 28 ஆம் தேதி இந்தியாவினுடைய முன்னாள் குடியரசுத் தலைவரும், தமிழக முன்னாள் அமைச்சருமான, ஆர். வெங்கட்ராமன் அவர்களுடைய மறைவிற்கு இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். 23, 27, 28, 29 ஆகிய நாட்களில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றிருக்கிறது. தொடர்ந்து இன்றும் நடைபெற்றிருக்கிறது. இந்த விவாதத்திலே நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தவர்கள், நன்றி தெரிவிக்க மறுத்தவர்கள், தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்கள் என பல்வேறு கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி அவைகள் ஓரளவுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டத்தை இப்போது நாம் எட்டியிருக்கிறோம்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் கு. பிச்சாண்டி முன்மொழிய, மாண்புமிகு உறுப்பினர் கே. சுந்தரால் வழி மொழியப்பட்டிருக்கிறது.

ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. பிச்சாண்டி, திரு. இரா. இராஜேந்திரன், திரு. அ. சௌந்திர பாண்டியன், திருமதி. லதா அதியமான், திரு. டி. செங்குட்டுவன் ஆகியோர் ஏறக்குறைய ஒரு மணிநேரம் 22 நிமிடம் பேசியிருக்கிறார்கள்.

அதேபோல எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய அ.தி.மு.க.–வினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருமதி பதர் சயீது, திரு. வி.பி. கலைராஜன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. மா. சந்திரகாசி, திரு. இரா. விஸ்வநாதன் ஆகியோர் 3 மணி 18 நிமிடங்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்.

அதேபோல காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பெ.சு. விஜய குமார், திரு. விடியல் எஸ். சேகர், திரு. பா.வேல்துரை, திரு. மா. ராஜ சேகரன், திரு. எச். வசந்தகுமார், திருமதி. டி. யசோதா ஆகியோர் 2 மணி 14 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

அதேபோல பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. எதிரொலி மணியன், திரு. பா. செந்தமிழ்ச் செல்வன், திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், திரு. கோ.க. மணி 1 மணி 42 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.கே. மகேந்திரன், திரு.வே. மாரிமுத்து, திருமதி ரா. லீமாரோஸ், செல்வி கே. பாலபாரதி ஆகியோர் 1 மணி 02 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன், திரு.தி. இராமசாமி, திருமதி பி. பத்மாவதி, திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் 1 மணி 04 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

ம.தி.மு.க.–வைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.ஆர். ஞானதாஸ், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ரா. வரதராஜன், திரு. இராமகிருஷ்ணன் ஆகியோர் 43 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறார். ஆக மொத்தம் இந்த விவாதத்திலே 37 பேர் 11 மணி 40 நிமிடங்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே அவரவர்கள் அவர்களுக்குரிய பாணியிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வழக்கமாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தினந்தோறும் தவறாமல் இந்த அவைக்கு வருகை தந்து, ஒவ்வொரு உறுப்பினரும் என்ன பேசுகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கேட்டு, அவைகளையெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டு, அதைத் தொடர்ந்து அதிகாரிகளோடு விவாதித்து, பதிலுரையைப் பாங்கோடு தயாரித்துப் பேசுவது அவருடைய வழக்கம்.

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தசைப் பிடிப்பு காரணமாக, அதனால் ஏற்பட்ட வலியின் காரணமாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுத் தொடர்ந்து சிகிச்சையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். 'பொன் இருக்க வேண்டிய இடத்திலே ஒரு பூவை வையுங்கள்' என்று சொல்வார்களே, அதைப்போல

காவியத்திற்குப் பதில் கவிதை,
கடலுக்குப் பதில் நதி,
கல் தேருக்குப் பதில் மரத் தேர்,
கருவூலத்திற்குப் பதில் சிறு நிதியம்,
இதிகாசத்திற்குப் பதில் சிறுகதை,
இமயத்திற்குப் பதில் குன்றம்,
விருட்சத்திற்குப் பதில் விதை,
விருந்திற்குப் பதில் செவ்விளநீர்

– என்பதைப் போல தலைவருக்குப் பதில் இந்தத் தொண்டன் இன்றைக்கு உரையாற்றக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**முதல்வர் கலைஞரின் பண்பும் – எளிமையும்**

இந்த நேரத்திலே இப்போது எனக்கு இரண்டு செய்திகள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று கவியரசர் கம்பருடைய அவை அடக்கப் பாடல்.

"ஓசை பெற்றொரு பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும்
நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக்
காசில் கொற்றத்து இராமன்
கதை அரோ"

அதாவது ஒரு பூனை தனது நாவினால் நக்கி பாற்கடல் முழுவதையும் குடிக்க ஆசைப்பட்டதைப் போல இராமாயணத்தை எழுத ஆரம்பிக்கிறேன் என்று கம்பர் கூறுகிறார். இரண்டு, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதுகிறபோது, முகவுரையிலே குறிப்பிட்டிருக்கிறார். இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியிலே ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான் என்பதை நான் அறியாதவன் அல்ல என்று தன்னுடைய அடக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தப் பண்பும், எளிமையும்தான் இப்பொழுது இந்த நேரத்தில் எனக்கு நினைவுக்கு வந்து கொண்டிருக்கிறது.

பதிலுரைக்கு வருவதற்கு முன்பு ஒரு செய்தி. தமிழ், இந்தி போன்ற பல்வேறு இந்தியப் படங்களுக்கு மிகச் சிறப்பாக இசை அமைத்து பல்வேறு விருதுகளைப் பெற்ற இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் Slum Dog millionaire என்ற ஆங்கிலப் படத்திற்கு இசை அமைத்ததற்காக உலகப் புகழ் பெற்ற Golden club விருது கிடைத்ததற்காகவும், இந்திய திரைப்பட இசையின் புதிய

அனுபவம் என்கிற மதிப்பீட்டின் அடிப்படையில், ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருப்பதற்காகவும், தமிழகத்தின் பெருமையையும், புகழையும் உலகத்தின் உச்சிக்கு எடுத்துச் செல்லும் ஏ.ஆர். ரஹ்மான் அவர்களுக்கு இந்த அவையின் ஏகோபித்த பாராட்டு தலையும், வாழ்த்துகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இலக்கியத் துறையிலே சிறுகதை இலக்கிய ஏந்தல் டி.ஜெயகாந்தன், கலைத் துறையிலே வி. கணபதி ஸ்தபதி, வி.பி. தனஞ்செயன், திருமதி சாந்தா தனஞ்செயன், அறிவியல் மற்றும் பொறியியல் துறையிலே காஞ்சிபுரம் ஸ்ரீரங்காச்சாரி சேஷாத்திரி, சமூக சேவைத் துறையிலே டாக்டர் திருமதி சரோஜினி வரதப்பன் ஆகிய 6 சான்றோர்கள் தமிழகத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்த ஆண்டுக்கான பத்ம பூஷன் விருதுக்கும், கலைத் துறையிலே ஐராவதம் மகாதேவன், நடிகர் விவேக், திருமதி. அருணாசாய்ராம், டாக்டர் சுப்பிரமணிய கிருஷ்ணசாமி, மருத்துவத் துறையிலே பேராசிரியர் தணிகாசலம் சடகோபன், பி.ஆர். கிருஷ்ணகுமார், டாக்டர். ஆர். சிவராமன், டாக்டர் ஷேக் காதர்நூருதின், வணிகம் மற்றும் தொழில் துறையிலே ஆறுமுகம் சக்திவேல் ஆகிய 9 சான்றோர்கள் தமிழகத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்த ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருதுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தமிழகத்திற்கு பெருமையும், மகிழ்ச்சியும் தரத்தக்கதாகும். குடியரசுத் தலைவரின் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய அவர்கள் அனைவருக்கும் இந்த அவையின் ஏகோபித்த பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மக்கள் நலத்திட்டங்கள்**

பல்வேறு பத்திரிகைகள், இந்த ஆளுநர் உரையைப் பற்றி, அதேபோல் பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக் கூடிய தலைவர்கள், இந்த அவையிலே இருக்கக் கூடியவர்களும், அதேபோல வெளியிலே

இருக்கக்கூடியவர்களும், பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே முக்கியமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு தீக்கதிர். அந்த தீக்கதிர் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய ஒரு தலையங்கம். அந்த தலையங்கத்திற்குத் தலைப்பு பிரச்சினைகளை மூடும் உரை, தமிழக ஆளுநர் உரை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த தலையங்கத்திலே குறிப்பிடுகிறார்கள்.

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது திட்டம் எத்தனை பேருக்குச் சென்று அடையும் என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். இந்தக் கேள்விக்குத் தலையங்கம் வந்திருக்கக் கூடிய அந்தப் பத்திரிகையிலே, அதே பக்கத்திலேயே அந்தக் கட்சியினுடைய மாநிலச் செயலாளராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய வரதராஜன் அவர்கள் அவரே ஒரு செய்தியிலே சொல்கிறபோது, பதில் சொல்கிறார். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தால் 1 கோடி குடும்பத்தினர் பயன் அடைகின்றனர் என்று அவரே தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். மேலும் கூறுகையில் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம் மட்டும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக மக்களுக்காக நலத்திட்டங்கள் எதுவும் இல்லையென்று சொல்லி குறிப்பிடுகிறார், என்ன காரணம்? இப்போது அவர்கள் அ.தி.மு.க. கூட்டணி.

கடந்த ஆண்டு இதே தீக்கதிர் பத்திரிகையிலே கடந்த ஆண்டு இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்ட ஆளுநர் உரையைப் பற்றி என்ன எழுதி இருக்கிறது தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்திலே வழங்கியிருக்கக்கூடிய வாக்குறுதிகளை பெருமளவில் நிறைவேற்றி வருகிறது. ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குவது வரவேற்கத்தக்கது. 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். 15,083 கோடி ரூபாய்க்கு அந்நிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளது. 1,39,140 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று ஆளுநர் உரை தெரிவிக்கிறது என்று சொல்லிவிட்டு ஒரு கட்டத்திலே இன்னொன்றையும்

குறிப்பிடுகிறார். ஏற்கெனவே இருந்த அ.தி.மு.க. ஆட்சி எதையும் செய்யாத நிலையில் இது மிக மிக பாராட்டுக்குரிய ஒன்று என்று அன்றைக்குச் சொன்னார். அப்போது நம்முடைய கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி).

மார்க்சிய கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள் இப்பொழுது என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் திட்டத்தைத் தவிர மக்கள் பிரச்சினைகளைப் பற்றி ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்று குறிப்பிடுகிறார். அதுமட்டு மல்ல, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அதிகாரபூர்வமான ஏடாக இருக்கக்கூடிய ஜனசக்திப் பத்திரிகை, அதிலே தலையங்கம், அந்த தலையங்கத்திற்குத் தலைப்பு, சம்பிரதாயச் சடங்கு என்று தலைப்பிட்டு அதிலே கட்டுரை வருகிறது. நான் கேட்பது 3 இலட்சம் விவசாயி களுக்கு 279 கோடி ரூபாய் ஏற்கெனவே பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின்படி வழங்கியிருக்கிறோம், அது வரும் நிதியாண்டிலும் தொடரும் என்று சொல்லியிருக்கிறோம். இது மக்கள் பிரச்சினை இல்லையா? நெல், கரும்புக்கு கொள்முதல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு 369 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லையிலே அடிக்கல் நாட்டப் போகிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா?

காவிரி ஆற்றினுடைய குறுக்கே கட்டளையில் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை அணைக்கும் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படவிருப்பதாக வெளியிடப்பட்டிருக்கிறதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? இது மக்கள் பிரச்சினை இல்லையா? படிப்படியாக முழு மதுவிலக்கிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென அறிவித்திருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? 2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? இலங்கைத் தமிழர் பற்றி மத்திய அரசைக் காலந்தாழ்த்தாது

அந்தப் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோமே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? சேதுசமுத்திர திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசிற்கு கோரிக்கை வைக்கிறோமே இது என்ன மக்கள் பிரச்சினை இல்லையா? வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து 4 பத்திகள் இந்த புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறதே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? பெரு மழை பெய்யும்போது நிரந்தரப் பாதுகாப்புத் திட்டங்களை ரூபாய் 211 கோடிக்கு ஒரு திட்டத்தையும் 1,560 கோடி ரூபாயிலே மற்றொரு திட்டத்தையும் பத்தி 13–லே குறிப்பிட்டிருக்கிறோமே இது என்ன மக்கள் பிரச்சினை இல்லையா? 1 கோடிக்கு மேற்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகளை இலவசமாக வழங்கியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பற்றியும், கடல் நீரைக் குடிநீராக்கக் கூடிய திட்டத்தைப் பற்றியும் குறிப் பிட்டிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா?

தந்தை பெரியார் சமத்துவபுரம், மெட்ரோ இரயில் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் இவைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளா? இவை எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? 3 இலட்சத்து 32 ஆயிரத்து 91 இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுவதைப்பற்றிச்சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அருந்ததியருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அமைப்புச் சாரா தொழிலாளர்களைப் பற்றி கூறியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லை? அரசு அலுவலர்கள் கடந்த கால ஆட்சியிலே எஸ்மாவைத்தானே சந்தித்தார்கள். ஆனால் தற்போது 4,247 கோடி ரூபாய் அளவுக்கு நிலுவைத் தொகையை கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறோமே அது மக்கள் பிரச்சினை இல்லையா? அரசு அலுவலர்கள் என்ன மக்கள் கணக்கிலே சேர மாட்டார்களா?

செம்மொழியைப்பற்றியும், தமிழ்ப்புத்தாண்டைப்பற்றியும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டைப்பற்றியும் சிறுபான்மையோர் நலன் பற்றியும் பத்திபத்தியாய் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறதே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா ? ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கிய போது அப்பொழுது வாழ்த்தினீர்கள். பாராட்டினீர்கள். இப்பொழுது ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குகிறபோது ஊரே வாழ்த்துகிறது. ஊரே பாராட்டுகிறது. ஆனால் நீங்கள் மட்டும் இப்பொழுது விமர்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு என்ன காரணம் வேறு ஒன்றும் காரணம் இல்லை. சிம்பிள் காரணம். இப்போது நீங்கள் அ.தி.மு.க. கூட்டணி. அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**இலவச நிலம் – இலவச வீட்டு மனைப்பட்டா**

அடுத்து, பட்டா பிரச்சினை. இந்தப் பட்டா பிரச்சினையை இன்றைக்கு ஒரு அரசியல் நோக்கத்தோடு ஆங்காங்கே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடத்தக்கூடிய அந்த நிலையை நாம் பார்க்கிறோம். அதற்கு ஒரு விளக்கத்தைத் தர நான் விரும்புகிறேன். 1996–2001, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுது இலவசமாக வீட்டுமனைப்பட்டாக்கள் 9 இலட்சத்து 50 ஆயிரத்து 449 பேருக்கு வழங்கப்பட்டது. அதற்கடுத்து 2001–2006–இல் அ,தி.மு.க. வின் ஆட்சி, அப்பொழுது நீங்கள் கூட்டணி. அப்பொழுது 3 இலட்சத்து 60 ஆயிரத்து 625 பேருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இப்பொழுது 2006–லே நாம் ஆட்சிக்கு வந்து இதுவரையிலே, இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 6 இலட்சத்து 50 ஆயிரத்து 517 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டுமனைப்பட்டா குறித்து கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆண்டுகொண்டிருக்கக்கூடிய மாநிலங்கள், குறிப்பாக,

மேற்கு வங்க மாநிலத்தில், 2006 ஜனவரி முதல் டிசம்பர் வரை வழங்கப்பட்டிருக்கக்கூடிய வீட்டு மனைப்பட்டாக்கள் வெறும் 1,577. 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வீட்டுமனைப் பட்டாக்கள் 1,839. கேரள மாநிலத்தில் 2006–2007–இல் 3,773. 2007–2008–இல் 1,772. திரிபுரா மாநிலத்திலே 2006 ஆம் ஆண்டில் 291. 2007 ஆம் ஆண்டில் 431.

அதேபோல, அரசுக்குச் சொந்தமான நிலங்களில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்கு 2000 ஆம் ஆண்டிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கக்கூடிய திட்டத்தை கழக ஆட்சியிலேதான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினோம். அப்படி அறிமுகப்படுத்தியபோது 10 ஆண்டு காலம் குடியிருந்தவர்களுக்கு மட்டும்தான் பட்டா வழங்கப் பட்டது. அதையும்கூட தளர்த்தி 10 ஆண்டுகள் அல்ல 5 ஆண்டுகள் இருந்தாலே போதும் என்று சொல்லி அதையும் தளர்த்தினோம். அதுமட்டுமல்ல, வீட்டுமனை பட்டா பெற வேண்டுமென்று சொன்னால், இலவச வீட்டுமனைப் பெறவேண்டுமென்று சொன்னால், வருமான வரம்பு அப்போது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது நாம் இந்த ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வருமான வரம்பே கிடையாது என்றொரு நிலையை உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**வெள்ள நிவாரணம்**

தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை தேர்தல் வாக்குறுதியிலேயே நாம் எடுத்துச் சொல்லியிருந்தோம். நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 1,74,924 நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய மொத்த இலவச நிலம் 2,10,104 ஏக்கர் என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதற்கடுத்து, வெள்ள நிவாரணம். அதுபற்றி பலர் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலும் குறிப்பாக

வரதராஜன் அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிக்கூட குறை சொல்லிப் பேசுகிற போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். 3,789 கோடி ரூபாய் அளவிற்கு மழை வெள்ளத்தால் இழப்புகள் ஏற்பட்டுள்ளதற்குக் மாறாக, 1,029 கோடி ரூபாய் மட்டுமே மாநில அரசு வழங்கியிருப்பதாகக் குறை கூறியிருக்கிறார். அது அவர் மட்டுமல்ல, இங்கே பேசியவர்கள்கூட பலர் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள்.

நான் குறிப்பிட விரும்புவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவிகள் மற்றும் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்காக 2,106 கோடி ரூபாய் என்றும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்காக 1,683 கோடி ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் இயற்கைச் சீற்ற நிவாரணத்திலிருந்து உடனடி நிவாரணம் மற்றும் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்காக மட்டுமே நிதியைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையிலே அந்தத் தலைப்பின்கீழ் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் 200 கோடி ரூபாயை மட்டுமே இதுவரை வழங்கி யிருக்கிறது. மேலும் நிதியை வழங்கிட வேண்டுமென்று தொடர்ந்து நாம் மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்கூட இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய ப. சிதம்பரம் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். டில்லிக்குச் சென்றிருந்த போதுகூட நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறார்கள். அதேபோல, அண்மையில் அவர்கள் தமிழகத்திற்கு வந்த நேரத்திலே கூட அதை வலியுறுத்திக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நிரந்தரச் சீரமைப்புப் பணிகள் மாநில அரசினுடைய நிதியிலிருந்து ஆண்டுத் திட்டப் பணிகளின்கீழ்தான் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறது. 3,789 கோடி ரூபாய் இழப்பு என்பதற்கு தமிழக அரசு 1,033 கோடி ரூபாய்தானே ஒதுக்கியிருக்கிறது என்ற குறை சொல்லப்படுகிறது.

நான் கேட்பதெல்லாம், 2005 ஆம் ஆண்டு அப்போது அ.தி.மு.க. ஆட்சி. இதைவிடப் பெரிய இழப்பு ஏற்பட்டது உண்மை. அதிலும் குறிப்பாக, 22 மாவட்டங்களில் அந்தப் பாதிப்பு ஏற்பட்டது. அப்போது மத்திய அரசிடம் கேட்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா, 13,684 கோடி ரூபாய். அப்போது மத்திய அரசு வழங்கிய தொகை ஆயிரம் கோடி ரூபாய். அப்போது தமிழக அரசு செலவு செய்தது 1,079 கோடி ரூபாய். ஆக, மத்திய அரசு தந்தது 1,000 கோடி ரூபாய். தமிழக அரசு அதற்காக ஒதுக்கீடு செய்தது 79 கோடி ரூபாய்தான் என்பதையும் நான் தெரிவிக்கிற அதே நேரத்தில், ஆனால், தற்போது, 3,750 கோடி ரூபாய் 12 மாவட்டங்களுக்கு வெள்ளச் சேதம் மதிப்பீடு செய்து செலவு செய்த தொகை 1,033 கோடி ரூபாய். மத்திய அரசு வழங்கியிருக்கக்கூடிய தொகை 200 கோடி ரூபாய், மீதம் தமிழக அரசு செலவு செய்திருக்கின்றது என்று சொன்னால், 833 கோடி ரூபாய் செலவு செய்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் இழப்புக்கு ஆளான நெல் பயிருக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய நிவாரணத் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.3,000. ஆனால், தமிழக அரசு வழங்கிக் கொண்டிருப்பது ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500. ரூ.7,500 என்ற அளவிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.388 கோடி இதுவரையில் வழங்கியிருக்கிறது. தொடர்ந்து சீரமைப்புப் பணிகள் நடந்துகொண்டிருக்கிறது. போர்க்கால அடிப்படையிலே பாராட்டப்படக் கூடிய வகையில், அந்த வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இந்த வெள்ள நிவாரணப் பணியைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிறபோது, நான் ஆட்சியில் இருந்தபோது ரூ.1,000 கோடி மத்திய அரசிடமிருந்து பெற்றேன். நீங்கள் ரூ.200 கோடி தானே பெற்றிருக்கிறீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் கூட்டணி அரசு என்றுகூட பாகுபாடு இல்லாமல் மத்திய

அரசு தன்னுடைய கடமையை ஆற்றியிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காகத்தான் நான் இதை நினைவுபடுத்துகிறேன்.

**பத்திரிகைகள் பாராட்டு**

அடுத்து, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இது இங்கு பரவலாகப் பேசப்பட்டது. ஆக இதற்கு பலநேரங்களில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் பத்திரிகைகளின் மூலமாக நாம் பார்க்கிறோம். இதற்கு பல விளக்கங்கள் இந்த அவையிலே என்னாலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைபோல வெளியிலே இந்தத் துறையினுடைய அதிகாரிகள் மூலமாக இதற்கு விளக்கங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் Frontline என்கிற ஒரு ஆங்கில நாளேடு இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாகப் பாராட்டி தெளிவாக எழுதியிருக்கிறது. அதிலே குறிப்பிட்டு இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பகுதி, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் பற்றிய ஒரு ஆய்வு. அது 6 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் தமிழ்நாடு மற்றும் சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற பணிகளை ஒப்பிட்டு -- சட்டீஸ்கர் மாநிலத்தில் நடை பெறுகின்ற இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அதாவது, ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிகள் செய்யப்படுவதாகவும், Musterroll–ல் திருத்தங்கள் செய்யப்பட்டு இருப்பதாகவும், பொருட்கள் வழங்குவதில் ஊழல் நடைபெற்று இருப்பதாகவும், குறைந்த அளவே வேலைகள் நடைபெற்று இருப்பதாகவும், கூலி வழங்குவதிலே காலதாமதம் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் இத்தகைய தவறுகள் நடைபெறாமல், இயந்திரங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் வேலைகளை செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான நீர்நிலைகள் மற்றும்

கால்வாய்களில் பயன்தரத்தக்க பல்வேறு வேலைகள் அதிக எண்ணிக்கையில் ஆட்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் கூலி வழங்குவதின் மூலம் காலதாமதம் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆனால், சட்டீஸ்கரில் கூலி வழங்குதில் காலதாமதம் ஏற்பட்டு தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்குள் வேலைக்குச் செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கையை ஒன்றிய அலுவலகத்திற்குத் தெரிவிக்கிறார்கள். இந்த எண்ணிக்கை உடனடியாக இணைய தளத்தில் வெளியிடப்பட்டு உடனடியாக மாவட்ட அளவில் தொகுக்கப்படுகிறது.

மேலும், அதேநாளில் பல்வேறு அதிகாரிகள் ஆங்காங்கு வேலை நடைபெறும் இடங்களுக்குச் சென்று இந்தத் தகவல்களை சரிபார்க்கிறார்கள். சட்டீஸ்கரில் இதுபோல் பணியாளர் பட்டியல், இதுபோல் வேலை நடைபெறும் இடத்தில் பணியாளர் பட்டியல், பணியாளர் வருகை சரியாக கண்காணிக்கப்படுவதில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தில் பயன்பெறும் பணியாளர்களில் மிகப் பெரும்பான்மையினர் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் பெண்கள் என்பது இத்திட்டத்தில் உள்ள மற்றொரு சிறப்பாகும். (மேசையை தட்டும் ஒலி).

சமூக வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் பாரம்பரிய சிறப்புடையதாகும். அது இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாக பரிணாமத்தைக் கொண்டிருக்கிறது என்று Frontline ஏடு பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல திட்டக்குழு, இந்த திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று சொன்னால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை பொறுத்தவரைக்கும் மாநில அளவிலேயே இராஜஸ்தான், திரிபுரா, தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டுச்

சான்றிதழை வழங்கியிருக்கிறது. அதுபோல் தென்மாநிலங்களில் தமிழகத்தின் அடிதட்டு மக்களான ஏழையெளிய ஆதிதிராவிடப் பெண்கள் அதிக அளவில் பயன்பட்டிருக்கிறார்கள் என்று Business Line பத்திரிகை 27–1–2009–இல் ஒரு ஆய்வுக் கட்டுரையே தீட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே பேசியிருக்கக்கூடிய திரு. அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, வரகூர் திரு. சந்திரகாசி அவர்களும் இங்கே பேசுகிற போது இந்தத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலே குறைபாடுகள் இருக்கிறது. அது இந்தியத் தணிக்கைத்துறை தலைவரே ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் என்றெல்லாம்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதற்கு ஒரு விளக்கத்தை தர விரும்புகிறேன்.

**மத்திய அரசின் விருது**

பதிவு செய்த அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலைவாய்ப்பு என்ற ஒரு தவறான கருத்தின் அடிப்படையிலே தணிக்கை அதிகாரிகள் அந்த அறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். வேலைக்கு வந்தால்தான் அதற்குரிய ஊதியத்தை வழங்கமுடியும். தேவையின் அடிப்படையில் செயல்படுத்தப் படும் திட்டம் என்பதை அந்தத் தணிக்கையினர் அதை கருத்தில்கொள்ளாமல் அனைத்துக் குடும்பங்களுமே 100 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. அதை அவர்கள் அன்றைக்குப் புரிந்துகொள்ளமுடியாத நிலையிலேதான் அந்த அறிக்கை வெளியிட்டார்களே தவிர, வேறு அல்ல.

அவர்களே சொல்லியிருக்கிறார்கள், தணிக்கை முறையிலேகூட சில தவறுகள் இருக்கலாமென தணிக்கைத் துறையினரே ஏற்றுக்கொண்டு அந்தச் செய்திகூட Deccan Chronicle பத்திரிகை 20–11–2008–இல் அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று இரவு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு ஒரு பெரிய விருது வழங்கியிருக்கிறது.

என்ன விருது என்று கேட்டால் இந்தியா முழுவதும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இந்தியாவிலே எந்தெந்த மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை ஆய்வு நடத்தி அதற்கு விருது தந்திருக்கிறார்கள். நேற்று இரவு 11–00 மணிக்குத் தான் எங்களுக்கு செய்தி கிடைத்தது. நான் இந்த உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தபோதுதான் எனக்கு இந்தச் செய்தி கிடைத்தது. என்னவென்று கேட்டால் இந்தியாவில் 612 மாவட்டங்கள் இருக்கிறது. ஒட்டுமொத்த இந்தியாவிலே 612 மாவட்டங்கள் இருக்கிறது. அந்த 612 மாவட்டங்களில் இன்றைக்கு 13 மாநிலங்களில் இருக்கக் கூடிய 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து விருது தந்திருக்கிறார்கள். அப்படி 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து இந்தியா முழுவதும் இன்றைக்கு விருது தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து விருது தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது எந்தெந்த மாவட்டங்கள் என்று சொன்னால் திண்டுக்கல், சிவகங்கை, கடலூர். ஆக, இந்த 3 மாவட்டங்கள் இந்த விருதினைப் பெற்றிருக்கிறது. இங்கேகூட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சகோதரி பத்மாவதி அவர்கள் கூட இங்கே பேசுகிறபொழுது எங்களுடைய பேரூராட்சிக்கு வரவேண்டும் என்று பேரூராட்சியில் இருக்கக் கூடிய மக்கள் எல்லாம் கேட்கிறார்கள் என்று கேட்டார்கள், அதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆக, பேரூராட்சியில் இருக்கக்கூடிய மக்கள்கூட அந்தத் திட்டத்தை எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால் அந்த அளவிற்கு இன்றைக்கு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தினுடைய தலைப்பு "தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்''. ஆக ஊரகப் பகுதிகளுக்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர்களுடைய எண்ணத்தை அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். ஆக, இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுகளாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள், உறுப்பினர்கள் தொடர்ந்து ஒரு கோரிக்கையை அதாவது கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு 2,000 ரூபாயாக ஏன் உயர்த்தவில்லை என்று ஒரு கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இரண்டு ஆண்டுகாலமாக மத்திய அரசு தற்போதுள்ள கரும்பு கொள்முதல் விலையை 811 ரூபாய் 80 காசுவிலிருந்து அதை உயர்த்தவேயில்லை என்பது உங்களுக்கும் தெரியும், இருந்தாலும் கேட்கிறீர்கள். ஆனால் இந்த நிலையிலேகூட 1,050 ரூபாய் என்று சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய அரசு உயர்த்தியதும் உங்களுக்கும் தெரியும். மீண்டும் உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், அதையும் ஏற்றுக் கொண்டு 1,100 ரூபாய் நிர்ணயம் செய்தது மட்டுமல்ல, போக்குவரத்துக் கட்டணம் என்று அந்தத் தலைப்பிலே 90 ரூபாயும், சர்க்கரைக் கட்டுமான ஊக்கத் தொகை என்ற தலைப்பிலே சராசரியாக 30 ரூபாயும் ஆக விவசாயிகளுக்கு மொத்தமாக டன் ஒன்றுக்கு 1,220 ரூபாய் நிர்ணயம் செய்து, அதை இன்றைக்கு நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்க்கரைத் தொழிலில் தமிழகத்துடன் போட்டிப் போடக்கூடிய ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில்கூட இந்த ஆண்டு மாநில அரசினுடைய பரிந்துரை விலை இதுவரை அறிவிக்கவேயில்லை. கரும்பு உற்பத்தியில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மகாராஷ்டிரா மாநிலத்தில் கூட மாநில அரசினுடைய பரிந்துரை விலையை தனியாக எப்பொழுதுமே அவர்கள் அறிவித்தது கிடையாது. இருந்தாலும் நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகள்மீது நலம் கொண்டு தன்னால் இயன்ற அளவிற்கு அதை உயர்த்தி இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இதைக்கூட யோசித்துப் பார்க்காமல் 2,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று தொடர்ந்து இன்றைக்கு நீங்கள் கேட்பது முறைதானா, அது முடியக்கூடிய காரியம்தானா, நடக்கக்கூடிய காரியம்தானா என்பதையும் நீங்கள்

உணர்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**நதி நீர் இணைப்பு**

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர். ராமதாஸ் அவர்கள் இந்த ஆளுநர் உரையின்மீது தன்னுடைய கருத்துகளை அறிக்கை மூலமாக வெளியிட்டிருந்தார்கள்.

மாநிலத்தினுடைய வளர்ச்சி விகிதம், வறுமை ஒழிப்பு, தனி நபர் வருமானம், இவைகள் எல்லாம் ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. உண்மைதான். ஆளுநர் உரை என்பது கொள்கை அறிவிப்புகள்தான் பெரும்பாலும் அதில் இடம் பெற்றிட முடியும். ஆனால் அவர் கேட்பதைப்போல அவைகள் எல்லாம் நிச்சயமாக நிதிநிலை அறிக்கையிலேதான் இடம்பெறும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அடுத்து அவரே சொல்கிறார். நதிநீர்ப் பிரச்சினையைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்று சொல்கிறார். ஆளுநர் உரை பக்கம் 11 பத்தி 15–லே நதிநீர் இணைப்பு குறித்தும், நெல்லையிலே தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு வருகிற 9–2–2009–இல் அடிக்கல் நாட்டக்கூடிய அந்தச்செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் திருமங்கலம் இடைத் தேர்தல் வெற்றி ஆட்சிக்கு மக்கள் அளித்த மதிப்புரை என்பது யதார்த்த நிலைக்கு மாறானது என்ற ஒரு கருத்தை அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு வேளை அதில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிற வாய்ப்பை இழந்திருந்தால் மக்கள் இந்த ஆட்சிக்குத் தந்த மதிப்புரை என்றுதானே நிச்சயமாக அவர் சொல்லியிருப்பார்! எனவே இடைத்தேர்தலோ, பொதுத் தேர்தலோ அதன் வெற்றி, தோல்விகள்தான் மக்கள் அளிக்கக்கூடிய மதிப்புரை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியாக இருக்கிற நேரத்திலும் பல நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இடைத் தேர்தலில் வெற்றிபெற்றிருக் கிறது. எனவே அதை உதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அதேபோல, தேர்தல் அறிக்கையிலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகிறோம், என்னென்ன உறுதிமொழிகளையெல்லாம் எடுத்துச் சொன்னோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே முக்கியமான ஒன்று. யார் யாருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லையோ, அவர்களுக்கு எல்லாம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என்ற உறுதிமொழி எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த வாக்குறுதி தந்தபோது, தேர்தல் அறிக்கை யிலே வெளியிடப்பட்டபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் அப்போது என்ன சொன்னார்கள்? "நடக்காது, சாத்தியப் படாது, முடியவே முடியாது, யாரும் நம்ப வேண்டாம்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. சி.என்.என். தொலைக்காட்சிப் பேட்டியிலே கூட அவர் குறிப்பிட்டிருக்கிறார். "தி.மு.க. நிலாவைத் தருவதாகக் கூறுகிறது, யாரும் நம்ப வேண்டாம்" என்று ஊர் ஊராகப் போய்ச் சொன்னார்கள் இதே கருத்தை. 2006–இலே ஆட்சிக்கு வருகிறோம். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் நிதிநிலை அறிக்கை இதே அவையிலே தாக்கல் செய்யப்படுகிறது. ஜூலைத் திங்களில் தாக்கல் செய்யப்பட்ட அந்த நிதிநிலை அறிக்கையிலே இந்தத் திட்டத்திற்காக 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலே முதல் கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழகத்திலே இருக்கக்கூடிய சமத்துவபுரத்திலே குடியிருக்கக்கூடியவர்களுக்கு முதல் கட்டமாக அவற்றை வழங்கினோம். அதற்கடுத்து இரண்டாவது, மூன்றாவது கட்டங்களாக 62,80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 54,28,204 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்கேகூட சிலர் கேட்டார்கள், மீதி என்ன? அது எங்கே போயிருக்கிறது என்றுகூட சந்தேகத்தோடு சிலர் கேள்விகளைக் கேட்டார்கள். சொல்கிறேன். மீதி **8,51,796**. ஆக, அவைகள் தொடர்ந்து இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக ஓரிரு மாதங்களில் அவைகளும் முழுமையாக வழங்கப்பட இருக்கிறது என்பதையும் **(மேசையைத் தட்டும் ஒலி)** தெரிவித்துக் கொள்கிற அதேநேரத்தில், நான்காவது கட்டமாக இந்த ஆண்டு **41,62,500** வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு நடப்பாண்டில் அவையும் வழங்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைத்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவராக இருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் முடியவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால் கழக அரசினுடைய சாதனைகளில் ஒரு இமாலயச் சாதனை இதுதான் என்பதையும் நான் இங்கே அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். **(மேசையைத் தட்டும் ஒலி)**

**கல்வியாளரின் பாராட்டு**

இதற்கொரு சான்றைக்கூட நான் தெரிவிக்கமுடியும். **9–1–2009** அன்று 'Indian Express' பத்திரிகையிலே ஒரு செய்தி, கட்டுரை வந்திருக்கிறது. Michigan பல்கலைக்கழகப் பேராசிரியர், Management Guru என்று அழைக்கப்படக் கூடிய சி.கே. பிரகலாத்– அண்மையிலேகூட அவருக்கு 'பத்மஸ்ரீ' பட்டம் கிடைத்திருக்கிறது. அவர் கூறுகிறார்; அந்தச் செய்திக்குத் தலைப்பு, "Management guru lauds MK's. Colour T.V. Freebie. இந்தத் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கிற செய்தி என்னவென்றால், "The D.M.K. Government free colour T.V. scheme may have faced severe criticism on home turf, but management guru and professor, School of Business, University of Michigan, C.K. Prahalad, is all praise for Chief Minister M.Karunanidhi's pet project. Addressing a session, as part of the Pravasi Bharatiya Divas

here, he said the scheme enabled the poor to stay connected and informed" என்று அந்தச் செய்தியிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

அதாவது, 'Indian Express' செய்தி, 'திராவிட முன்னேற்றக் கழக அரசால், பொது மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டித் திட்டமானது, உள்ளூர் அரசியல் அளவில் பல்வேறு விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தாலும், Michigan பல்கலைக்கழக வணிகவியல்துறைப் பேராசிரியரும், 'மேலாண்மையியல் குரு' என அழைக்கப்படுபவருமான சி.கே. பிரகலாத் என்பவர், சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற Pravasi Bharatiya Divas நிகழ்ச்சியிலே உரையாற்றும்போது, 'இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டமானது, அடித்தளத்து மக்களை உலகத்தினோடும் இணைக்கும் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களிடையே தகவல் அளிக்கும் சிறந்த திட்டமாக உள்ளது' என்று முதல்வர் கலைஞர் அவர்களை வெகுவாக அவர்கள் அந்தக் கட்டுரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அதேபோல், எதிர்க்கட்சியைச் சார்ந்த அ.தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. ஜெயக்குமார் அக்கறையோடு ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 'சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக்க எந்தவித நடவடிக்கையிலும், முயற்சியிலும் ஈடுபடவில்லையே; எல்லாம் சொல்வதோடு சரியா?'– பழைய அனுபவம். (சிரிப்பு) அதை அவர் உணர்ந்து பேசினார். 'என்ன ஆயிற்று' என்று கேட்டார். சொல்லுகிறேன்; **6–12–2006**, இதே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இதற்காகத் தீர்மானம் போடப்பட்டு, குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கு அது அனுப்பி வைக்கப்பட்டு, அதற்குப்பிறகு தொடர்ந்து நம்முடைய மத்திய சட்டத்துறை அமைச்சர், பிரதமர், அம்மையார் அன்னை சோனியா காந்தி ஆகியோருக்கு **11–3–2007** அன்று நம்முடைய முதல்வர் அவர்களே இது சம்பந்தமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதற்குப்பிறகு மத்திய சட்டத்துறை அமைச்சருக்கு 25–2–2008 அன்றும், 23–4–2008 அன்றும், இதை வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆக, உரிய நடவடிக்கை முறையாக எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. விரைவிலே அதுவும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அக்கறை யோடு கேட்ட திரு. டி.ஜெயக்குமாருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு**

அதுபோல, இன்னொரு அக்கறை மிகுந்த ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 'காவல் துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய காலியிடங்களையெல்லாம் நிரப்பவில்லையே? தேர்தல் நேரத்திலே வாக்குறுதி தந்தீர்களே, என்னவாயிற்று?' என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். நல்ல கேள்வி. 14,617 காலியிடங்கள் இருக்கின்றன என்ற அந்த விவரத்தையும் அவர் இங்கே எடுத்துச் சொன்னார். ஆக, இரண்டாம் நிலைக் காவலர்கள்; நான் ஒரு கணக்கைச் சொல்கிறேன். இரண்டாம் நிலைக் காவலர்களைப் பொறுத்த வரைக்கும், 2006–2007–லே நேரடி தேர்வு நடத்தி அறிவித்தது 5 ஆயிரம்; அதிலே தேர்வு செய்யப்பட்டவர்கள் 4,873. நான் சொல்வது இரண்டாம் நிலைக் காவலர்கள். 2007–2008–லே, அறிவித்தது 6,272; அதிலே தேர்வு செய்யப்பட்டிருக்கக் கூடியவர்கள் 6,151. 2008–2009–லே அறிவித்தது 4,000; தேர்வுப் பணி நடந்துகொண்டிருக்கிறது. அதேபோல, கருணை அடிப்படையிலே 2007–2008–லே, 310 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தவரைக்கும், 2006–2007 ஆம் ஆண்டு 755 பேர் அறிவிக்கப்பட்டு, அதிலே 742 பேர் தேர்வாகியிருக்கிறார்கள். ஆக, 11,434 காவலர்களும், 742 உதவி ஆய்வாளர்களும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து இந்த ஆண்டு 2008–2009–லே மீண்டும் 4,000 பேர்

தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அதே அ.இ.அ.தி.மு.க.–வைச் சார்ந்த உறுப்பினர் திருமதி பதர் சயீத் அழகோடு பேசினார். அதுமட்டுமல்ல; மழலைத் தமிழிலும் கூட அவர் பேசினார். நாமெல்லாம் அதை ரசித்தோம்.

அவர் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார். பொத்தாம் பொதுவாக பல கருத்துகளைச் சொன்னார். அதிலே ஒன்று, இஸ்லாமியர்களுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை அவர் குறிப்பிட்டுச் சொன்னார். அதற்கு ஒரு விளக்கம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 2006–லே பொறுப்பேற்றதற்குப் பின்னால் அரசு வேலைவாய்ப்பில் உயர் கல்வி பயில 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கிய ஆட்சி இந்த ஆட்சி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கினீர்களே, அது எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்ற அந்த உணர்வோடு அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதற்கும் விளக்கம் சொல்கிறேன். ஆக, முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும் 15–09–2007 முதல் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த 15 மாதங்களிலே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக உரிமையியல் நீதிபதிகளாக 7 பேர்கள், மருத்துவர்களாக 54 பேர்கள், கால்நடை மருத்துவர்களாக 11 பேர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்களாக 111 பேர்கள், ஆக மொத்தம் 183 பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோல, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 42 பேர், பட்டதாரி ஆசிரியர்கள் 219 பேர், வட்டார வள மைய பயிற்றுனர் 22 பேர்கள், ஆக மொத்தம் 283 பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

காவலர் தேர்வு வாரியம் மூலமாக ஆண் காவலர்கள் 145 பேர், பெண் காவலர்கள் 17 பேர், ஆக மொத்தம் 162 பேர் தேர்வு

செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் முக்கியமான ஒன்று, உடல் தேர்விலே தேர்ச்சி பெற்றிருக்கக்கூடிய இஸ்லாமியர்கள் அனைவருமே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது இப்போது இருக்கக்கூடிய நிலை.

ஆனால், 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு இல்லாத நிலையிலே என்ன நடந்தது தெரியுமா? இட ஒதுக்கீடு வழங்கப்படாத நிலையிலே 2006 ஆம் ஆண்டிலே ஆண் காவலர்கள் வெறும் 18 பேர்கள், பெண் காவலர்கள் வெறும் 4 பேர்கள், ஆக மொத்தம் 22 பேர்கள்தான் அப்போது அந்தச் சூழ்நிலையிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அதேபோல், உயர்கல்வி பயில, பொறியியல் கல்லூரியிலே முஸ்லீம் மாணவர்கள் 2,564 பேர், மருத்துவக் கல்லூரியிலே முஸ்லீம் மாணவர்கள் 79 பேர் என்று இவர்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, இந்தச் செய்தி, ஒரு இஸ்லாமிய இனத்தினுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடிய அம்மையாருக்கு எப்படி தெரியவில்லை என்பதுதான் எங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்:**

ஆளுங்கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. டி.செங்குட்டுவன் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி இங்கே நேற்றையதினம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி எடுத்துப் பேசுகிறபோது, எதிர்க் கட்சியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள்கூட இங்கே குறுக்கிட்டு ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதாவது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது என்று ஒரு தவறான செய்தியை இங்கே பதிவு

செய்திருக்கிறார்கள். நான் நேற்றைக்கே அதற்கு உடனடியாக பதில் சொல்லியிருக்கவேண்டும். இருந்தாலும் தேதிவாரியாக, ஆதாரங்களோடு அந்தச் செய்திகளைச் சொல்லவேண்டும்; நாளைய தினம் நான்தானே பேசப்போகிறேன்; எனவே, நாளைக்குப் பதில் சொல்லலாம் என்று நானும் பொறுத்துக் கொண்டு, இப்போது அதற்கு விளக்கம் தர விரும்புகிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும், 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அப்போது 576 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டு, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய முதல் ஆட்சி, தலைவர் கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து 1997 ஜூலை மாதம் அந்த மதிப்பீட்டைக் கூட மாற்றி ரூ.636 கோடிக்கு திருத்தி, அந்த மதிப்பீட்டை உயர்த்தி, மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்புகிறோம். அதைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கள ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து காவிரி ஆற்றிலிருந்து 1.4 டி.எம்.சி. நீர் எடுக்க தடையில்லாத சான்றிதழைப் பெற வேண்டுமென்று சொல்லி அதை எதிர்நோக்கி மத்திய அரசுக்கு நாம் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறோம்.

1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் தேதி மத்திய நீர்வள அமைச்சகத்தினுடைய செயலாளராக இருக்கக் கூடியவர், தமிழக, கர்நாடக மாநிலத்தினுடைய அதிகாரிகளை அழைத்து, ஒரு ஆலோசனைக் கூட்டத்தையும் நடத்துகிறார். அதற்குப் பிறகு, 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய நீர்வள அமைச்சகம் தடையில்லாச் சான்றிதழை வழங்கியது. 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தருமபுரி மாவட்டத்திலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய சில பகுதிகளையும் சேர்த்து 1,000 கோடி ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு போட்டு அதையும் அனுப்பி வைக்கிறோம்.



தமிழரசு
அலுவலகப் பிரதி

அதற்குப்பிறகு, அந்தப்பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கக்கூடிய அந்தக் காலகட்டத்திலேதான் 1998 மே மாதம் பொக்ரானில் நடைபெற்ற அணுசக்தி சோதனையைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதிலே நமக்கு ஒரு பெரிய தடை ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம், தமிழ்நாட்டிலே 2001 லே அ.தி.மு.க. ஆட்சி. ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் என்ன முயற்சியில் ஈடுபட்டது? மூன்று முறை மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு எந்தப் பணியையும் அவர்கள் ஆற்றிடவில்லை. 2001, 2003, 2005 ஆகிய ஆண்டுகளில் இந்த நிலையிலேதான் அவர்கள் நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்களே தவிர, வேறு எந்தப் பணிகளும் நடைபெற வில்லை; இதுதான் உண்மை. அதற்குப் பிறகு, மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் 2006–லே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், மீண்டும் ஜப்பான் நாட்டினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு எல்லாவித முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டோம். அதற்குப் பிறகு ஜப்பான் நாட்டினுடைய நிதி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் உண்மைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். நிதி நிறுவன செயல் இயக்குனர், அவர் தமிழ்நாட்டிற்கே வருகைதந்து, ஜப்பான் நாட்டிலிருந்து வருகைதந்து, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைக்கோட்டையிலே சந்தித்தார்கள்; என்னையும் சந்தித்தார்கள். ஆக, இந்தத் திட்டத்தைப் பற்றி முதல்வர் அவர்கள் தெளிவாக வலியுறுத்தி, வற்புறுத்தி எடுத்துச் சொல்லி, ஆக, இப்படி தொடர்ந்து அதற்குப் பிறகு அதிகாரிகள் அந்த இரண்டு மாவட்டங்களுக்கே சென்று தொடர்ந்து ஆய்வுப் பணிகளையும் நடத்தி, அதையும் தொடர்ந்து திருத்திய மதிப்பீடாக 1,334 கோடி ரூபாய் அளவில் தயாரித்து 2008 பிப்ரவரி மாதம் நானும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் ஜப்பான் நாட்டிற்குச் சென்று, அங்கே இருக்கக்கூடிய வங்கியினுடைய அதிகாரிகளோடு கலந்துபேசி, அதற்குப் பிறகு அவர்களுடைய முழு ஒப்புதலை அன்றைக்கு நாங்கள் பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைத் தொடர்ந்துதான் டில்லியிலே ஜப்பானிய அரசுக்கும், மத்திய அரசுக்கும் முழு அளவிலே ஒப்புதல் தந்து, ஒப்பந்தத்திற்குரிய கையெழுத்தும் இடப்பட்டு அதற்குப் பிறகுதான் அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணி இப்பொழுது வேக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, குறித்த காலத்திற்குள் அந்தப் பணி நிச்சயமாக நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மீண்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இங்கு முடிந்தவரையிலே பல விளக்கங்கள் உங்களிடத்திலே, இந்த அவையின்மூலமாக, என்னுடைய உரையின்மூலமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இங்கே இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக் கக்கூடிய பல பிரச்சினைகளை அரசினுடைய திட்டங்கள், அரசினுடைய அந்த நிலைப்பாடுகள் எல்லாம்கூட அதிகமாக இங்கே கருத்துகள் எடுத்துச் சொல்ல முடியாத சூழ்நிலையில், இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்கள் பிரச்சினையைப் பற்றி அதிகமாக இந்த அவையிலே பேசப்பட்டிருப்பது உண்மை. இங்கேகூட காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது, இந்த இலங்கைப் பிரச்சினை பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு உணர்வு கொண்டிருக்கிறார், எந்த அளவுக்கு தன்னுடைய உள்ளத்திலே அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை யாரும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆகவே, அந்த நிலையிலே ஒரு செய்தியைக்கூட நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இன்று நேற்றல்ல, ஆண்டுகள் பலவற்றுக்கு முன்பே வரலாற்றுத் தொடர்பும், கலை இலக்கியத் தொடர்பும் உண்டு என்பதற்கு அவர் எழுதிய 'பண்டாரக வன்னியன்' என்ற வரலாற்றுப் பின்னணி கொண்ட

வீரகாவியமே அதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் பண்டாரக வன்னியரின் நினைவுச் சின்னத்தை இலங்கையிலே நாம் காணுகிறோம். அங்கே கண்டியை ஆண்ட விக்கிரமசிங்க ராஜா பண்டாரக வன்னியரின் வரலாற்றையும் நூலாகவும் எழுதியிருக்கிறார்.

புதையல் திரைப்படத்திலே ஓரங்க நாடகமாக எழுதி, அதிலே நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்ததும் நாடறிந்த உண்மை. அவருடைய நினைவைப் பாராட்டக் கூடிய வகையிலே, வேலூர் பாலாற்றங்கரையிலே நினைவுச் சின்னம் அமைத்ததும் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தான் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத்தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, நேற்றையதினம் இலங்கைப் பிரச்சினை குறித்து, தன்னுடைய மேனியிலே தீ வைத்து இறந்திருக்கக்கூடிய முத்துக்குமரனைப்பற்றி இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அது குறித்தும் ஒரு செய்தியை நான் வெளியிட விரும்புகிறேன், முதல் வருடைய அனுமதியோடு. இலங்கைப் போர்ப் பகுதியில் சிக்கித் தவித்திடும் அப்பாவித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக, சென்னை, கொளத்தூர், திருவள்ளுவர் தெருவைச் சார்ந்த முத்துக் குமார் என்னும் இளைஞன் தீக்குளித்து மரணமடைந்துள்ளார். தீக்குளித்து தன்னைத்தானே மாய்த்துக்கொள்வதென்பது, தீவிர எண்ணத்தாலும், உணர்ச்சியாலும் ஏற்படும் தீவிரவாத செயல் என்பதால், அதனை ஜனநாயக அரசியல் சிந்தனையுள்ள யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்பையும், தீக்குளிப்பது போன்ற தீவிர முடிவையும் கட்டாயம் தவிர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், தீக்குளித்து மாண்ட முத்துக்குமாரின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் பேரவைத் தலைவர் வாயிலாக இந்த அவையில் ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், முத்துக்குமார் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவியாக முதலமைச்சர்

பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய சார்பிலே நான் இங்கே அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கடுத்து, முடிவுரையாக நான் குறிப்பிட விரும்புவது, ஆளுநர் உரை என்பது Statement of Policy. அதாவது, கொள்கை அறிக்கை என்ற வகையிலே இந்த ஆளுநர் உரை, கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கிய பெட்டகமாக, கழக அரசின் திசைகாட்டும் கருவியாக அமைந்திருக்கிறது என்பதிலே எள்ளளவும் ஐயமில்லை. சமூக நீதி என்பது, இந்த அரசின் கொள்கை. அதனால்தான் அருந்ததியர்க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கச் சட்டம். கிருத்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்கிடவும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமுதாயத்தினருக்கு தேசிய அளவில் தனி ஒதுக்கீடு வழங்க அறிவிப்பு செய்திடவும் மத்திய அரசுக்குக் கோரிக்கை ஆகியவை இந்த ஆளுநர் உரையிலே இடம்பெற்றுள்ளன.

நலிந்தோர் நலன் கலைஞர் அரசின் குறிக்கோள். அதை நிறைவேற்றிடும் வகையில்தான் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, பத்து மளிகைப் பொருட்களை வழங்கக்கூடிய சிறப்புப் பொது விநியோகத் திட்டம், முதியோர், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை, அமைப்புச் சாராத் தொழிலாளர் நல வாரியங்கள், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சரின் காப்பீடு திட்டம் ஆகியவை இந்த உரையிலே இடம் பெற்றுள்ளன. இப்படி ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டே போகும் அளவிற்கு, உயர்தனி சிறப்புமிக்க உரையாக ஆளுநர் உரை விளங்குகிறது என்பதை நடுநிலையாளர்கள் நிச்சயமாக உணர்வார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த ஆளுநர் உரை அழகிய ரோஜாவைப்போல் அமைந்திருக்கிறது. சிலருக்கு ரோஜாவின் கண்களைப் பறித்திடும் வண்ணம் தெரிகிறது. சிலருக்கு ரோஜாப் பூவின் நறுமணம் புரிகிறது. ரோஜாவைப் பார்த்ததும், கற்பனைச் செறிவுடைய ஒரு சிலரின் மனதில் கவிதை பிறக்கிறது. இந்த ரோஜாவைப் பார்த்ததும் சிலருக்கு ரோஜாவின் ராஜாவான பண்டித நேருவின் உருவம் தெரிகிறது. ஒரு சிலருக்கு ரோஜாவிற்குப் பக்கத்தில் இருக்கிற முள் தெரிகிறது. இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலே பார்த்தாலும், ரோஜா ரோஜாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

விளைந்து குலுங்கிடும் நெற்பயிரைப் பாருங்கள் என்றால், சிலருக்குக் களை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. கண்ணாடி போன்ற தெளிந்த நீரோடையைப் பாருங்கள் என்றால், சிலருக்கு நுரை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. கானம் பாடிடும் வானம் பாடியைப் பாருங்கள் என்றால், சிலருக்கு ஆந்தை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. ஆளுநர் உரையினைப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், வெவ்வேறு வகையினிலே, அவர்கள் இருக்கக்கூடிய இடம் நடந்து செல்லும் பாதை இவற்றின் அடிப்படையிலே விமர்சனம் செய்திருக்கிறார்கள். நிறைகளைக் கண்டவர்கள், நிறைகளையும் குறைகளையும் கண்டவர்கள், குறைகளை மட்டுமே கண்டவர்கள் அனைவரது கருத்துக்களையும் வரவேற்று நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், அனைவரது நோக்கமும் நாடும் வீடும் நலம்பெற வேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் எல்லாம் இடையூறின்றிக் கிடைக்க வேண்டும் என்பதுதான். மக்கள் மத்தியில் நிம்மதியும், நீடித்த மகிழ்ச்சியும் நிலவிட வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே என்னுடைய பதிலுரையை இணைத்து, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

